

# திருக்கோயில்

மார்ச் 1982 1-25 காசு






திருவாரூர் அருள்மிகு தியாகராச சுவாமி திருக்கோயிலில் நடைபெற்ற 101 சிறப்புத் திருமணங்களைத் தமிழக அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்கள் நடத்திவைத்து உரை நிகழ்த்தும் காட்சியும், சிறப்புத் திருமணத் தம்பதிகள் அமர்ந்திருக்கும் காட்சியும், அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் திரு. யு. சுப்ரமண்யன் ஐ.ஏ.எஸ்., அவர்களும், தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எஸ். மெய்கண்ட தேவன் ஐ.ஏ.எஸ். அவர்களும் பிறரும் கலந்து கொண்டு சிறப்பித்தல் (31-3-82).



முகப்பு

கும்பகோணம் அருள்மிகு சாரங்கப்பாணி பெருமாள் திருக்கோயிலின் அழகிய தோற்றம்.

# திருக்கோயில்

ஆசிரியர் : ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

| மாலை : 24 | திருவள்ளுவர் ஆண்டு 2012, துன்மதி ஆண்டு-மாசி [மார்ச் 1982] ரூ. 1-25 | மணி : 6 |
|---|---|---|

## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்!

***திருக்கோயில்*** திங்கள் இதழின் சந்தாதாரர் களாகச் சேர விருப்பமுள்ளவர்கள்,

**ஆணையர் அவர்கள்,**
**அறநிலைய ஆட்சித்துறை,**
**சென்னை — 600 034**

என்ற முகவரிக்கு மணியார்டர் மூலம் பணம் அனுப் பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

ஜனவரி முதல் டிசம்பர் வரை உள்ள காலம், சந்தா ஆண்டு எனக் கணக்கிடப்படும். இடைப் பட்ட காலத்தில் சந்தாதாரராக விரும்புவோர், முழு ஆண்டிற்குரிய சந்தாத் தொகை ரூ. 15—00 உடன், இடைப்பட்ட காலத்தில் உள்ள மாதங் களுக்கு, ஒரு இதழ் ரூ. 1—25 வீதம் சேர்த்துப் பணம் அனுப்பிச் ''சந்தாதாரர்'' ஆகலாம்.

தனிப்பட்ட 'சந்தாதாரர்கள்' ஒவ்வொரு வரும் நேரடியாக, ஆணையர் அலுவலகத்திற்கே மணியார்டர் மூலம் பணம் அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பழைய சந்தாதாரர்கள், கடிதம் எழுதும் பொழுதும், பணம் அனுப்பும்பொழுதும், தங்கள் சந்தா எண்ணையும் தவறாமல் தெரிவித்து உதவினால்தான், உடனுக்குடன் ஆவன செய்ய வசதியாக இருக்கும். புதிய சந்தாதாரர்கள் பணம் அனுப்பும்பொழுது, மணியார்டர் கூப்பனில், புதிய சந்தா என்பதைக் குறிப்பிடுமாறும், சரியான முழு முகவரியைப் பின்கோட் (Pin Code) எண்ணுடன் தெரிவிக்குமாறும் கேட்டுக்கொள்ளப் படுகிறது.

வெளிநாட்டுச் சந்தாதாரர்களின் முகவரிகள் அனைத்தும் செவ்வனே பதிவு செய்து வரிசைப் படுத்தப் பெற்று அவர்கள் எல்லோருக்கும் முறை யாக இதழ்கள் அனுப்பப்படுகின்றன. தற் பொழுது வெளிநாட்டுச் சந்தாதாரர் ஒவ்வொரு வருக்கும் ஆண்டு ஒன்றுக்கு அஞ்சல் செலவு மட்டுமே ரூ. 9—60 ஆகின்றது. ஆதலால் வெளி நாட்டுச் சந்தா, ரூ. 20—00-ல் இருந்து ரூ.25—00 ஆக ஜனவரி 1978 முதல் மாற்றி அமைக்கப் பட்டது. வெளிநாட்டுச் சந்தாதாரர்கள் அவ்வப் போது தங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளக் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## பொருளடக்கம்

அறநிலைய அமைச்சர் உரை
—மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்கள்

திருவைகல் மாடக்கோயில்
—டாக்டர் திரு. இரா. கலைக்கோவன்.

தமிழும் சிவமும்
—''கவிஞர்கோ'' கோவை இளஞ்சேரன்

படிமக் கலை
—திரு. வி. கணபதி ஸ்தபதி, பி.ஏ., பி.டி.

சிவஞான போதத் தெளிபொருட் பதவுரை
—ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.

இராமனும் - கதிரவனும்
—திரு.ச.வே.சுப்பிரமணியன், எம்.ஏ.,பிஎச்.டி.

இயற்கையும் இறைவனும்
—''சித்தாந்தக் கலைச்செல்வர்''
திரு. க. வச்சிரவேல் முதலியார், பி.ஏ.எல்.டி.

வைணவத்தின் சிறப்பு
—மகாவித்துவான்
திரு. பி. ப. அண்ணங்கராச்சாரிய சுவாமிகள்

இளையான்குடி மாறனாரின் இல்லற மாட்சி
—'மும்மொழிப் புலமைக் கொண்டல்'
திரு. பெ. திருஞானசம்பந்தன், எம்.ஏ., எல்.டி.

சித்தாந்த நோக்கில் சிலைவேடர்பெருமானார்
—சி. சு. கண்ணாயிரம்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை வெளியீடு

# தமிழ்நாடு சட்டப்பேரவையில்

## அறநிலைய அமைச்சர்

## மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்கள் ஆற்றிய உரை *

மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அவையின் முன்னாலே வைக்கப் பெற்ற 1981-ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் திருத்தச் சட்ட முன்வடிவைப் பற்றி, அநேகமாக எல்லாக் கட்சிகளையும் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் பொதுவாக வரவேற்று, அப்படி முதலில் வரவேற்கிற நேரத்திலேயே இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்ட பிறகு, ஏதாவது தவறுகள் நடைபெற்று விடுமோ என்கின்ற ஐயப்பாட்டினையும் சில உறுப்பினர்கள் எழுப்பினார்கள். அதிலே ஒரு உறுப்பினர் மாண்புமிகு டாக்டர் சௌரிராஜன் மாத்திரம், இது அரசியல் சட்டத்திற்குப் புறம்பானது; இந்திய உச்ச நீதிமன்றத்திற்குப் போனால் இது செல்லுபடியாகாது, தள்ளுபடி செய்யப்பட்டு விடும் என்ற வகையில், இங்கே கூறினார்கள். இங்கே கருத்தைத் தெரிவித்த பெரும்பாலானவர்கள், பொதுவாக வரவேற்றதற்காக நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

முதலில் நான் தமிழக அரசின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர்களுக்கும், இந்த அவையின் மூலம் நாட்டு மக்களுக்கும், குறிப்பாக இந்து சமயத்தைப் பின்பற்றுகிற கோடிக்கணக்கான மக்களுக்கும் ஒரு உறுதிமொழியை மனத்தூய்மையோடு சந்தேகமின்றித் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தச் சட்டத் திருத்தம் என்பது, ஆண்டாண்டு காலமாக இந்து சமயத்திலே நம்பிக்கையுள்ளவர்கள், தாங்கள் வணங்குகின்ற, மதிக்கின்ற மதத் தலைவர்களை அல்லது ஆதீனத் தலைவர்களை இழிவு படுத்த வேண்டுமென்றோ, அவர்களுடைய நிர்வாகத்தில் குறுக்கிட வேண்டுமென்றோ, அவர்கள் சிறந்த முறையில் ஆற்றிக் கொண்டிருக்கும் பணிகளைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்றோ, அவர்களை மக்கள் முன்னால் குற்றவாளிகளாக ஆக்கிக் காட்டவேண்டுமென்றோ, எந்தவிதமான அடிப்படைக் காரியத்திலும் இந்தச் சட்டத் திருத்தம் கொண்டு வரப்படவில்லை என்பதை, நான் இந்த நாட்டு மக்களுக்குக் குறிப்பாக இந்து சமயத்தில் இருக்கிற மக்களுக்குப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்தச் சட்டம் 1925-ஆம் ஆண்டில் தொடங்கி, 55 ஆண்டுகளுக்குப் பின்னாலே ஒரு திருத்தம் வருகிறது. அதற்கு முன்னால் இந்து சமய அறக்கட்டளைகளுக்கோ, சமயத்திற்கோ ஒரு சட்டம் வேண்டும், விதிகள் வேண்டுமென்ற நிலைமையே இல்லாமல்தான் இருந்தது. 1925-ஆம் ஆண்டிலேதான் இந்து சமயத்தைப் பற்றிய நிர்வாக முறைகள் ஒரு சட்டதிட்டத்திற்குள்ளே கொண்டுவரப்பட வேண்டுமென்ற உணர்வு மாநிலத்திலே ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இது ஒரு வளர்ச்சியைக் காட்டுகிறது. 1925-ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட, அன்றைக்கு இருந்த இந்து சமய நிறுவனம்-போர்டு; அதற்குப் பிறகு 1935-36ல் திருத்தப்பட்ட சட்டமாக வந்தது. அதற்குப் பிறகு 1959-ஆம் ஆண்டின் சட்டம் திருத்தப் பெற்று, இப்போது நடைமுறையில் இருக்கிற இந்து சமய அறக்கட்டளைகள் சட்டம் என்கின்ற வகையில், நாம் ஏற்றுக் கொண்டிருக்கிற சட்டத்திற்குத் திருத்தம் கொண்டு வந்திருக்கிறோம். அநேகமாக இங்குப் பேசிய எல்லா உறுப்பினர்களும் டாக்டர் சௌரிராஜன் அவர்களைத் தவிர, இந்தத் திருத்தம் வரவேற்கப்பட வேண்டியதுதான் என்று கூறியிருக்கிறார்கள். மடாலயங்களில் ஆதீனகர்த்தர்கள், மற்றவர்கள் நிர்வாகத்தில் ஏற்படக்கூடிய தவறுகள் களையப்படவேண்டியதுதான்என்று பொதுவாக ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படி ஒத்துக் கொண்ட அடிப்படையில்தான், இந்தச் சட்டத்திருத்தம் கொண்டு வருகிறோம். இதிலே வேறு எந்தவிதமான நோக்கமும் இல்லை. ஏதோ சில மதத் தலைவர்களுக்கு ஆதரவு அளிப்பதுபோலவும், சில மதத் தலைவர்களுக்கு ஆதரவு அளிக்காதது போலவும், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த பாபு ஜனார்த்தனம் அவர்கள் எடுத்துச் சொன்னதை நான் வன்மையாக மறுக்கிறேன். அப்படிப்பட்ட உள்நோக்கத்தைத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நான் எதிர்பார்க்கவில்லை. காரணம், இந்த மடாலயங்கள் பற்றியும், மடாதிபதிகள் பற்றியும், நம்மையெல்லாம் ஆளாக்கிய தந்தை பெரியார் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும், எப்படியெல்லாம்

* இந்து சமய அறநிலையங்கள் குறித்துக் கொணர்ந்த சட்டத் திருத்த மசோதாவை (சட்டப் பேரவை மசோதா 64/81) அறிமுகம் செய்து, மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை; இங்கு வெளியிடப்பெறுகின்றது.

சொல்லியிருக்கிறார்கள் என்பதை நாம்நினைவு கூர்ந்து பார்க்க வேண்டும்.

அப்படிப் பார்க்கிறபோது நமக்கு வேண்டியவர்கள் யார், வேண்டாதவர்கள் யார் என்று, நம் முன்னால் யாரும் வரமாட்டார்கள். அதையெல்லாம் விட இங்கே குறிப்பிட்டார்களே சந்திரகாந்தா நாடகம், அதை எழுதியவரே வடுவூர் துரைசாமி அய்யங்கார்; அதிலே இருக்கின்ற சம்பவங்களை எல்லாம் பார்த்தால் இன்றைக்கு நாமெல்லாம் எண்ணிப் பார்க்க முடியாத, பேசவே அஞ்சுகிற நிகழ்ச்சிகள் எல்லாம் அதிலே வந்திருக்கின்றன. அந்த நாடகங்கள், நாவல்கள் எல்லாம் நீண்ட காலமாக மதத் துறையில் மடாதிபதி என்ற பொறுப்பிலே இருந்த சிலர் தவறுகள் இழைத்திருக்கிறார்கள் என்பதை, அவ்வப்போது மக்கள் மன்றத்தின் முன்னாலே சுட்டிக் காட்டப்பட்டு வந்திருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது.

இந்தச் சட்டத்திருத்தம், டாக்டர் சௌரிராஜன் சொன்னார்கள் அடிபட்டுப் போகும் என்று. உச்சநீதிமன்றத்தின் முன்னாலே சில வழக்குகள் சென்று, அந்த வழக்குகளிலே எப்படிப்பட்ட தீர்ப்புகள் மடத்தின் சார்பிலே வழங்கப்பட்டு இருக்கின்றன என்பதையெல்லாம் ஆராய்ந்து, அருகிலே இருக்கிற ஆந்திர மாநிலத்திலே எத்தகைய சட்டத் திருத்தங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள். எப்படி திருப்பதி புகழ் பெற்ற ஆலயம் ஒரு மகந்து என்றமடாதிபதியிடமிருந்து எடுக்கப்பட்ட ஆலயமாக, ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியின் நிர்வாகத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டு, அந்தத் திருத்தங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு, ஒப்புக் கொள்ளப்பட்டு இருக்கின்றன என்று பார்த்து, அந்த அடிப்படையிலே திருத்தங்களைக் கொண்டு வந்திருக்கிறோம்.

அது எப்படி செல்லுபடியாகும் என்று பார்த்துக் கொண்டு நாம் சட்டங்களைச்செய்ய முடியாது. சட்டங்களைச் செய்கிறபோது, திரு இளையபெருமாள் அவர்கள் சொன்னதைப் போல், மக்களுடைய நன்மைக்காகச் செய்கிறோம். அது பின்னாலே நீதிமன்றங்களுக்குப் போகிறபோது, அந்த அந்த நீதிமன்றங்களுடைய உணர்வுகளுக்கு ஏற்றபடி, அவர்கள் கருதுகிறபடி தீர்ப்புகள் வழங்கப்படுகின்றன. ஆகவே என்ன தீர்ப்பு வழங்கப்படும் என்று முன்னாலேயே நாம் திட்டமிட்டுச் சில காரியங்களைச் செய்ய வேண்டியதுதான்—இருந்தாலும் கூட, முன்மாதிரிகளை வைத்துக்கொண்டு சில சட்டத் திருத்தங்களைக் கொண்டு வருகிறோம். அதிலும் சில நேரங்களிலே செல்லாது என்று வந்துவிடுகின்றது. அப்படிப்பட்ட சூழ்நிலைகள் வரக்கூடாது என்பதற்காகத் தான், இங்கே ஒரு ஆணையாளர் ஒரு உத்தரவைப் போட்டால், நீதிமன்றங்கள் அதற்கு ஒரு இடைக்காலத் தடையைப் பிறப்பிக்கக் கூடாது என்ற விதியைச் செய்திருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. நெடுமாறன் அவர்கள், அதைக் கடுமையாகச் சொன்னார்கள். ஆனால் அவர்கள் சொன்ன பிற் பகுதியிலே, அதற்குச் சமாதானத்தையும் அவர்களே சொல்லிவிட்டார்கள். வழக்கு மன்றத்திற்குப் போனால், எத்தனை ஆண்டுக் காலமாகும் என்று அவர்கள் சொன்னார்கள். இன்றைக்கு அதுதான் நடந்து கொண்டிருக்கிறது. ஓர் இடத்திலே தவறு இருக்கிறது என்று அரசாங்கம் கண்டுபிடித்து, அறநிலையத் துறை கண்டுபிடித்து, அதைத் தடுப்பதற்கு ஒரு ஆணையைப் பிறப்பித்தால், உடனே ஒரு வழக்கறிஞரைக் கொண்டு ஒரு ஸ்டேயை வாங்கி விட்டால், அது எத்தனை ஆண்டுகள் ஆகும் என்பதை அவர்களே ஒத்துக் கொண்டார்கள். ஆகவே நாம் இடைக்காலத் தடை என்கின்ற ஒரு பயங்கரமான முட்டுக் கட்டை, சமுதாய முன்னேற்றத்திற்குப் பொருளாதார வளர்ச்சிக்குப் பல்வேறு வகைகளிலே போடப்படுகிற முட்டுக்கட்டையாக, இன்றைக்கு ஸ்டே, தடையாணை பயன்படுத்தப் படுகிறது. அதை அவர்களே ஒத்துக் கொண்டார்கள்.

அருள்கூர்ந்து என்னுடைய பேச்சை முழுமையாகக் கேட்டுவிட்டால், நீங்கள் எழுப்பிய சந்தேகங்களுக்கு எல்லாம் பதிலைத் தந்து விடுவேன். இப்படி இடைமறித்துச் சந்தேகம் எழுப்ப வேண்டிய அவசியமிருக்காது. நான் சொல்வதற்குக் காரணம், ஒரு ஷரத்தை ஏன் சேர்த்து இருக்கிறீர்கள் என்று கேட்டதற்கு நாம் அனுபவப்பட்டிருக்கிறோம், நாம் அடிபட்டு இருக்கிறோம், அதனாலே அந்த அனுபவத்தை வைத்துக் கொண்டு சில திருத்தச் சட்டங்களைக் கொண்டு வருகிறோம் என்பதற்காகச் சொல்கிறேன். அதைப்போல் மடம், மதத் தலைவர்கள், ஆதீனத் தலைவர்கள் என்பதைப் பற்றி மாத்திரம் சுருக்கமாகக் கருத்தைதைச் சொல்கிறேன். இது ஏற்படுத்தப்பட்ட காலம் என்றைக்கு என்பதைப் பார்க்க வேண்டும். அன்றைக்குச் சமுதாயத்தின் நிலைமை எப்படி இருந்தது? அன்றைக்கு அரசியல்சட்டம் இருந்ததா? அன்றைக்குச் சட்டமன்றம் இருந்ததா? அன்றைக்குச் சட்டமன்ற உறுப்பினர்கள் இருந்தார்களா? அன்றைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுமுறை இருந்ததா? ஒரு காலத்திலே ஏற்படுத்தப்பட்ட பல்வேறு முறைகளைப் பல்வேறு நிகழ்ச்சியைச் சட்டங்கள் மூலம் மாற்றிக் கொண்டு வந்திருக்கிறோம். நம்முடைய தேவைக்கு ஏற்றவாறு காலத்திற் கேற்றவாறு மக்களுக்கு ஏற்றவாறு சட்டத் திருத்தங்களைச் செய்து கொண்டு வருகிறோம். அப்படி கொண்டு வருகிறபோது அறநிலையங்களுக்கு எல்லாம் சட்டம் வேண்டுமென்று, ஒரு கட்டுப்பாடு வேண்டுமென்று, 1925-இல் முயற்சி எடுத்து இருக்கிறார்கள். ஆகவே அதுதொடர்பாக, 55 ஆண்டுகள் கழித்து இன்றைய தினம் 1981-ஆம் ஆண்டு ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டு வருகிறோம். அதுவும் நமக்கு ஏற்பட்ட அனுபவத்தின் விளைவாக. நான் கேட்கிறேன். நம்முடைய மடத்துத் தலைவர்களின் பெயரைச் சொல்லிக் குறிப்பிட நான் விரும்பவில்லை. அப்படிச் சொன்னால் இவர்களைக் குற்றம் சொல்வார்கள், அவர்களைக் குற்றம் சொல்லவில்லை என்ற உணர்வை, எதிர்க்கட்சியிலே இருப்பவர்கள்வெளியிலே சொல்லக்கூடும். ஆகவே நான் பொதுவாகச் சொல்கிறேன்.

இன்றைக்கு இந்த ஆதீனங்களிடத்திலே எவ்வளவு பெரிய சொத்துக்கள் ஒப்படைக்கப் பட்டிருக்கின்றன? இந்தச் சொத்துக்களை நிர் வகிப்பது ஒரு தனிமனிதருடைய பொறுப்பிலே இருக்கிறது. ஒரு காலத்திலே இந்த ஆதீன கர்த்தர்கள் ஆண்டவனின் மறுபிறப்பு என்று எண்ணப்பட்டது. நான் இன்றைக்கும் கேட் கிறேன். அந்தத் தத்துவத்தை ஒப்புக் கொள் கிறோமா? ஆண்டவனால் அனுப்பப்பட்ட மறு பிறவி, ஆண்டவனால் படைக்கப்பட்ட மறு பிறப்பு, ஆகவே அவர்கள் சொன்னதுதான் சட்டம், அவர்கள் வாயால் என்ன சொன் னார்களோ அதுதான் இந்த நாட்டிலே நடை பெற வேண்டும் என்ற தத்துவத்தை ஒப்புக் கொண்டால், இந்தச் சட்டமன்றம் தேவை யில்லை. நாடாளுமன்றம் தேவையில்லை. அர சியல் சட்டம் தேவையில்லை. ஆகவே, மற்ற வைகளுக்கு அப்படிச் சட்டம் கொண்டுவந்து, நடைமுறைக்குக் கொண்டு வந்திருக்கும் காலத் திலே, ஒரு தனிமனிதனிடத்தில் உரிமையைக் கொடுக்கலாம். அதிலே அரசாங்கமோ, அற நிலையத் துறையோ தலையிடக்கூடாது என்று 1981-ஆம் ஆண்டிலே ஒரு சட்டமன்றம்சொல்ல லாமா? அப்படிச் சொல்லுகின்ற சூழ்நிலை உரு வாக வேண்டுமா என்பதை நான் பணிவோடு கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்குத் திருவாவடுதுறை மடத் திற்கு 26,813 ஏக்கர் நிலம் இருக்கிறது. நஞ்சை நிலம் அல்லது புஞ்சை நிலம். இவ்வளவு ஏக்கர்கள் நிலமும் ஒரு தனி மனிதரின் பொறுப் பிலே, ஆதீனகர்த்தரின் பொறுப்பிலே இருக் கிறது. அவர் நினைத்தால் என்ன வேண்டு மானாலும் செய்யலாம் என்று இருக்கின்ற, அந்த முறையை நாம் இன்னும் ஏற்றுக்கொள்ள வேண்டும்; கணக்கு வழக்கு கேட்கக் கூடாது; யாரும் தலையிடக் கூடாது என்று இருக்க வேண்டுமா? ஒரு நிர்வாக அதிகாரியைப் போட் டோம், அதற்கு உச்ச நீதிமன்றத்தில் தடை வாங்கி விட்டார்கள். எக்சிகியூட்டிவ் ஆபீ சரைப் போட்டோம். என்ன நடைபெறுகிறது என்று தெரிந்து சொல்வதற்காகப்போட்டோம். அதற்கும் தடையைப் பெற்று விட்டார்கள். நான் அதற்கு மேலே போகவில்லை.

இன்றைக்கு மடங்களின் தலைவர்கள், இரண்டு தகுதிகளைப் பெறுகிறார்கள். ஒன்று மடங்களின் தலைவராக, சமயத் தலைவராக இருக்கிறார். அதே நேரத்திலே அந்த மடங் களோடு இணைக்கப்பட்ட ஆலயங்களுக்கு அவர்கள் பரம்பரை அறங்காவலர்கள் - எரிட் டிட்டரி டிரஸ்டி. அங்கேதான் நமக்குச் சிக் கல்கள் வருகின்றன. அந்த மடங்களைப் பொறுத்த வரையில், அந்த மடங்களின் தன் மைகளைப் பொறுத்தவரையில், சொத்துக் களைப் பொறுத்தவரையில், என்னைக் கேட் காதே என்று சொல்லிக் கொண்டிருந்தால், ஒரு வேளை மத நம்பிக்கையுள்ளவர்கள் இன்னும் கொஞ்சகாலம் கழித்து வேண்டுமானால், தலை யிடுகின்ற உணர்வைப் பெறலாம் என்று கூறக் கூடும்.

ஆனால், நிர்வாகியாக, அறங்காவலர் களாக இருக்கின்ற ஆலயங்களிலும் நாம் கேட்கக் கூடாது, அதன் வருமானத்தைப் பற்றிக் கேட்கக்கூடாது என்று சொல்வதா? அப்படி இன்றைக்கு நம் மடத்துத் தலைவர்கள் பொறுப்பிலே இருக்கின்ற ஆலயங்களின் எண் ணிக்கை 55. அவர்கள் தந்திருக்கின்ற வரு மானக் கணக்குப்படி - நம் கணக்குப்படி அல்ல- 65,29,373 ரூபாய் ஒரே ஒரு ஆண்டுக்கு. மடங் களுக்கு வருமானம் 81,26,000 ரூபாய். ஆகவே கிட்டத்தட்ட 1,26,55,000 சொச்சம் ரூபாய் அவர்கள் தருகின்ற கணக்கின்படி வருமானம் வருகிறது. இந்த வருமானத்தை ஒருவர், அது திருவாவடுதுறை மடம் என்றாலும், தரும புரம் மடம் என்றாலும், அல்லது அகோபில மடம் என்று சொன்னார்களே, அதுவாக இருந்தாலும், இப்படி அவர்கள் தங்கள் இஷ் டப்படி எதை வேண்டுமானாலும் செய்யலாம் என்று, இன்னும் அனுபவித்துக் கொண்டிருக் கின்ற ஒரு உணர்வை நாம் ஏற்கிறோமா என் பதுதான், இந்தச் சட்டத் திருத்தத்தின் மூலம் நான் கேட்கின்ற கேள்வி.

மடங்களில் தலையிட வேண்டுமென்ற உணர்வே எங்களுக்கு இல்லை. ஆனால் சமீ பத்திலே தஞ்சையிலே ஒரு மடாதிபதி தன்னு டைய உடல்நிலையைக் குறித்து அவருக்கே சந்தேகம் வந்து, அவர் குற்றாலத்திற்குக் குடும் பத்தோடு போய் இருக்கிறார். இங்கே குடும் பம் இருக்கக்கூடாது என்பது மடத்தின் விதி. அதையும் மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்க ரய்யா அவர்களுக்குச் சொல்லி விடுகின்றேன். அந்த மடத்தில் என்னென்ன பழக்க வழக்கங் கங்கள் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதோ அதில் நாம் நுழையவில்லை. சில மடங்களில் கல் யாணம் செய்து கொள்ளாமல் இருக்க வேண்டு மென்பது விதி. கல்யாணம் ஆனவர்களாக இருந்தால், மடத்துத் தலைவராக ஆகும்போது துறவறம் பூண வேண்டுமென்பது விதி. அந்த விதிகள் இருக்க வேண்டுமென்று சொல்லு கிறோமே தவிர, அந்த விதிகளில், மரபுகளில், பழக்க வழக்கங்களிலெல்லாம் நாம் நுழைய வில்லை.

ஆகவே திருவாவடுதுறை ஆதீனத்தைப் பொறுத்தவரை, ஒரு குடும்பத்தோடு குற்றா லத்திற்குப் போய்ச் சங்கரன்கோயிலுக்கு வந்து கோயிலைச் சுற்றி வருகிறபோது அங்கே மயக் கம்போட்டு விழுந்து ஆஸ்பத்திரியிலேயே அனு மதிக்கப்பட்டார். அவசரம், அவசரமாக அந்தத் திருவாவடுதுறை மடத்தினுடைய இவ் வளவு பெரிய சொத்துக்களுக்கு வாரிசாகத் திருநெல்வேலியிலிருந்து - ஒரு குமாஸ்தா வேலை பார்த்துக் கொண்டிருந்த ஒருவரைக் கொண்டு வந்து விட்டார்கள் என்று எங்களுக் குத் தெரியாது.—இந்து மதத்திலே நம்பிக்கை யுள்ள சில முக்கியஸ்தர்கள், சில பெரியவர்கள், முன்னாள் இந்தியப் பிரதமர் மொரார்ஜி தேசாயை இந்த மடத்திற்குக் கூட்டிக்கொண்டு போனவர்கள், எழுத்து மூலம் தகவல் தந்திருக் கிறார்கள். இப்படி ஒரு அநியாயம் நடந்திருக் கிறது திருவாவடுதுறை மடத்திலே. அவர் இய லாமையிலே இருக்கிறார். ஆகவே அவருடைய

காலத்திற்குள்ளே அந்தச் சட்ட திட்டத்தின் படி, அவர் ஒருவரை நியமித்து விட்டால் செல்லுபடியாகும். யாரையும் நியமிக்காமல் அவர்கள் காலமாகி விடுவார்களேயானால், அரசு பொறுப்பேற்றுக் கொள்ளும். அதற்காக ஒரு ஆளை அங்கேயிருந்து தகுதிமிக்கவர்களை, படித்தவர்களை, ஆகமங்களைத் தெரிந்தவர்களை, வேறு நல்ல புலவர்களை, பண்டிதர்களை எல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு, நீக்கிவிட்டு, திருநெல்வேலி மாவட்டத்திலேயுள்ள அம்பாசமுத்திரத்திலே மில்லிலே வேலை செய்து கொண்டிருந்த ஒருவரைக் கொண்டு வந்து, அவருக்கு உரிய பட்டம் கட்டி, 5 மாதத்திற்குள்ளே அவரை அடுத்த வாரிசாக நியமித்து விட்டார்கள் என்கிற தகவலை, எங்களுக்குத் தந்ததே, சமயத்திலே ஈடுபட்டிருக்கிற மிகப் பெரியவர்கள். அந்தச் சமயத்தோடு, அந்த மடத்தோடு தொடர்புடையவர்கள்; பிரதமர் மொரார்ஜி தேசாயைக் கொண்டுபோய் விழா நடத்தியவர்கள். அவர்கள் சொன்ன பிறகு தான், நாங்களே நோட்டீஸ் விட்டோம். உடனே அந்த மடத்துத்தலைவர் சொன்னார்; 'உனக்கு அதிகாரம் இல்லை போ, நான் எவரையும் நியமிப்பேன்' என்று.

நான் இந்தத் திருவாவடுதுறை மடத்தினுடைய வரலாற்றைச் சொல்கிறேன். அந்தத் திருவாவடுதுறை மடம் இந்தத் தமிழ்நாட்டிலே சைவ சமயத்தை மாத்திரம் வளர்க்கவில்லை. தமிழையும் வளர்த்துக் காப்பாற்றிய மடம். அங்கேதான் பெருங் கவிஞர் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, அங்கேதான் டாக்டர் உ வே. சாமிநாதய்யர், அங்கேதான் வேதநாயகம் பிள்ளை, இப்படித் தமிழை வளர்ப்பதற்காக, தமிழ் அறிஞர்களுக்கெல்லாம் இடம் கொடுத்து வளர்த்த அந்த மடம், இன்றைக்கு எப்படியிருக்கிறது. அங்கே ஆதீன கர்த்தராக இருக்கிறவர் எவ்வளவு பெரிய தமிழ்ப் புலமை பெற்றவர் என்பதை நான் சொல்லக்கூடாது. சொன்னால் நான் யாரையோ பிரித்துப் பேசுகிறேன் என்று சொல்வார்கள். எப்படிப்பட்ட ஒரு தாழ்ந்த நிலைக்கு நம்முடைய சமுதாயத்தையும் கொண்டு வந்து விட்டோம், மடங்களையும் கொண்டு வந்துவிட்டோம். இந்த நிலைமை இன்னும் அனுமதிக்கப்பட வேண்டுமா? என்பதனாலே தான், இந்தச் சட்டத் திருத்தம் வருகிறதே தவிர, இந்தச் சட்டத் திருத்தம் வந்ததனாலே நாம் உள்ளே நுழைந்து எல்லா அதிகாரத்தையும் எடுத்துக் கொள்வது என்பது அல்ல என்பதை, நான் நிச்சயமாகச் சொல்கின்றேன்.

இங்கே என்னிடத்திலே இருக்கிற புள்ளி விவரங்கள் அத்தனையும் எந்த மடங்களிலே ஊழல்கள் நடைபெற்றிருக்கின்றன. கணக்கு வழக்குகளிலே தவறுகள் ஏற்பட்டிருக்கின்றன என்பதைப் பற்றியவைதான். அனைத்தையும் சொல்ல நேரமில்லை.

சிலவற்றைச் சொல்கிறேன். மறுபடியும் திருவாவடுதுறை மடத்தைப் பற்றித்தான் நான் சொல்ல வேண்டியிருக்கிறது. ரூபாய் 2,02,33,206 வசூல் பாக்கி வைக்கப்பட்டிருப்பதாகக் கணக்கு தருகிறார்கள். ரூ. 2 கோடிக்கு மேல் வசூல் செய்யவில்லையென்று சொல்கிறார்கள். அவ்வளவுதான், அதற்கு மேலே நம்மாலே கேட்க முடியாது. அங்கே எந்த அதிகாரியையும் நாம் நியமிக்க முடியாது. கிராமக் கர்ணம் - அரசாங்கம் போடுகிறதே அந்தக் கர்ணம் அல்ல; அவர்களே அங்கே ஒரு கர்ணத்தைப் போடுகிறார்கள். அப்படிப் போடுகிற கர்ணத்துடைய பொறுப்பிலே ஒவ்வொரு ஊரிலேயும் ஒரு ஊரிலே ரூ. 33,615; ரூ. 19,609; இப்படிப் பல்லாயிரக்கணக்கில், இலட்சக்கணக்கில் நிதி மாற்றங்கள் நடக்கின்றன. அதுவும் மடங்களிலே வருகிற பாதகாணிக்கைகள் எங்களுக்குச் சொந்தம் என்று சொல்லுகிறார்கள். ஆகவே, அதற்காகத்தான் இந்த சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறோம்.

ஆனால், இத்திருத்தம் அவசரமாக, உடனடியாகத் தேவைப்படுகின்ற ஒன்று. இன்று ஏன் தணிக்கையாளர்களை வைத்துப் பார்க்கக்கூடாது என்றால், தணிக்கையாளர்கள் போய்க் கேட்டால், விவரம் தரமாட்டேன் என்கிறார்கள். ஈ. ஓ. போட்டவுடனே, கோர்ட்டிலே போய் ஸ்டே வாங்கி விட்டார்கள். எங்களுடைய மடத்திற்கு ஈ. ஓ. வேண்டாம். உங்களுடைய கோவில்களுக்குப் போடுகிறோம் என்று சொன்னால், வேண்டாம், இங்கேயே வராதீர்கள் என்று சொல்கிறார்கள் என்கிற சூழ்நிலையிலேதான் இந்தச் சட்டத் திருத்தமே வருகிறது. நான் மீண்டும் சொல்கிறேன். தூய்மையோடு சொல்கிறேன், தமிழக அரசின் சார்பிலே சொல்கிறேன், இந்து மதத்திலே சம்பந்தப்பட்டவர்களை, இந்து மத உணர்வோடு வணக்கத்திற்கு உரியவர்களை, மதத் தலைவர்களை, ஆதீனத்தலைவர்களைப் புண்படுத்த வேண்டும், குறைவுபடுத்த வேண்டும் என்கிற எந்த எண்ணத்தோடும் இந்தச் சட்டத் திருத்தம் கொண்டு வரப்படவில்லை. அங்கே லட்சக்கணக்கான, கோடிக்கணக்கான சொத்துக்கள் முறையாகப் பயன்படுத்த வேண்டும், முறையாகச் செலவழிக்க வேண்டும், முறையாக நாட்டுக்குப் பயன்பட வேண்டும்; அவர்களும் அரசியல் சட்டங்களுக்குக் கட்டுப்பட வேண்டும், என்றைக்கோ காட்டாட்சி தர்பார் நடந்த காலத்திலே இருந்ததைப் போல ஒரு நிலைமை இருக்க அனுமதிக்கக் கூடாது. அது நாகரிகமும் அல்ல. அது அறிவு வளர்ச்சிக்கு ஏற்றதும் அல்ல என்கிற உணர்வோடுதான் இந்தச் சட்டத்திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதை எடுத்துச் சொல்லி, மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்ன அத்தனை கருத்துகளும், அதற்கான விதிகளை வகுக்கிற காலத்திலே கவனத்தோடு வகுக்கப்படும்.

தேவையில்லாமல், அவசியமில்லாமல், வேறு உள்நோக்கத்தோடு எந்த மத நிறுவனங்கள், அறநிலையங்களிலும் அரசாங்கம் தலையிடாது என்ற உறுதியைச் சொல்லி அவர்களுக்குள்ள மதிப்பையும் மரியாதையையும் என்றைக்கும் காப்பாற்றுவதிலே இந்த அரசாங்கம் நின்று, நிலைத்துப் பாடுபடும். யாருக்கும் குறைவாக இருக்காது என்று உறுதியைச்

சொல்லி இதை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே: நான் பொறுப்பேற்றிருக்கிறது இந்து சமய அறநிலையங்களுடைய துறை. ஆகவே இதுபற்றி நான் இங்கே உறுதி அளித்திருக்கிறேன். வக்ப் போர்டைப் பற்றியும் சட்டத் திருத்தம் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது என்று கருதுகிறேன். இனிமேல் நீண்டகாலம் ஒரு சமயம் மட்டும்தான் கட்டுப்படுத்தப்படும்; மற்ற சமயங்கள் எல்லாம் கட்டுப்படுத்தப் படாது என்று ஏதோ சட்டத்தைச் சொல்லி, அரசியல் சட்டத்தைக் காட்டிக் கூறிக்கொண்டிருக்கின்ற நிலைமை நிலைக்காது என்பதை இந்த நாட்டு மக்கள் தெரிந்து கொண்டிருக்கிறார்கள்.

இந்தச் சட்டத்திருத்தமே இந்திய சர்க்காருடைய அனுமதியைப் பெற்றுத்தான் இங்கே வந்திருக்கிறது என்பதையும், டாக்டர் சௌரிராஜன் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். காரணம் இந்து சமயங்களிலே எந்தச் சமயத்தைப் பற்றிய எந்தச்சட்டமாக இருந்தாலும் மத்திய சர்க்கார் அனுமதியைப் பெற்றுத் தான் இங்கே வரவேண்டும். ஆகவே எந்தப் பொதுச் சட்டமும், எந்தப் பொது நியதியும் இந்து சமயத்திற்கு மட்டும்தான், வேறு எந்தச் சமயத்திற்கும் இல்லையென்று இருக்கிற நிலை இல்லை. இந்தியாவிலே இனிமேல் அரசியல் சட்டத்திற்கு முன்னால் அனைவரும் சமம்; ஆண்டவனுக்கு முன்னால் அனைவரும் சமம்; எம்மதமும் சமம் என்று சொல்கிறவர்களும், இதை ஏற்றுக் கொள்வார்கள். ஆகவே நான் இந்து சமய அறநிலையத் துறையைப்பொறுத்த வரையில் உறுதி அளித்து இருக்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்களும் ஏற்கனவே உறுதி அளித்து இருக்கிறார்கள். நீங்கள் எதிர்பார்க்கலாம்.

அதற்காகத்தான் இந்தச்சட்டத்திருத்தமே வருகிறது. இன்றைக்கு இருக்கிற சட்டவிதிகளின்படி நடைமுறையின்படி அந்த ஆதீன கர்த்தா, அவர் விரும்புகிற ஒருவரைக்கொண்டு வந்து நியமிக்கலாம். உள்ளே மடத்திலே சேர்த்துவிட்டுக் காசாயம் கொடுப்பது என்ற பெயரால் அவருக்குக் காவி உடைதரித்து, கழுத்திலே உருத்திராட்சம் போடுகிறார்கள், அதிலிருந்து 3 மாதமோ அல்லது; 6 மாதமோ ஆனவுடன் இவர்தான் என்னுடைய வாரிசு என்று சொல்கிறார்; பட்டத்து இளவரசர் என்று அந்தக் காலத்திலே சொல்லிவிட்டுப் போவார்களே அதைப்போல.

திருவாவடுதுறை மடத்தைப் பொறுத்த வரையில் அங்கே இருக்கிற நிபந்தனை என்னவென்றால், அவர் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்தவராக இருக்க வேண்டுமென்பதை ஒரு நியதியாக வைத்திருக்கிறார்கள். அதற்காகவே திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்தவரைப் போய்த் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். அங்கே இருந்த தம்பிரான் படித்தவர், பண்டிதர், நல்ல புலமை பெற்றவர்களை எல்லாம் வேலையை விட்டே நீக்கி விட்டார்கள். காரணம் அடுத்தவர் வரவேண்டும். அதற்காக வேலையை விட்டே நீக்கிவிட்டு இப்படிப்பட்ட ஒருவரைக் கொண்டு வந்தார்கள். இது அரசாங்கம் சாட்டுகின்ற குற்றச்சாட்டு அல்ல. அங்கே மடத்திலே நம்பிக்கை உள்ளவர்கள், மடத்திலே தொடர்பு உள்ள மிகப் பெரியவர்கள், எழுத்து மூலம் தந்திருக்கிற குற்றச்சாட்டு. அதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று அவர்கள் அரசாங்கத்தைக் கேட்டிருக்கிறார்கள். அதற்குத்தான் நோட்டீஸ் அனுப்பினோம். அரசாங்கத்திற்கு இதிலே உரிமை இல்லை; நான் யாரை வேண்டுமானாலும்—நீங்கள் சொன்னீர்களே யானை போய்க் கழுத்திலே மாலை போடுகிறது என்று அதைப்போல நியமிப்பேன் என்று சொல்கிறார்கள். இந்த மடாதிபதி, யார் கழுத்திலே மாலை போடுகிறாரோ அவர்தான் அடுத்த மடாதிபதி. அவர் மடாதிபதியாக இருந்துவிட்டுப் போகட்டும். அதைப்பற்றி நமக்குக் கவலை இல்லை. ஆனால் இத்தனை கோடி சொத்துக்களுக்கும் அவர் அதிபதி. அவர் இஷ்டப்படி செலவு செய்யலாம். யாரும் கேட்கக்கூடாது. இது 1981-ஆம் ஆண்டிலே, சுதந்திரம் பெற்ற ஒரு நாட்டிலே, 35-வது சுதந்திர ஆண்டு விழாவைக் கொண்டாடுகிற நாட்டிலே இருக்கலாமா? அதற்காகத்தான் இந்தச் சட்டத்திருத்தம் வந்திருக்கிறது.

# திருவைகல் மாடக்கோயில்

டாக்டர் திரு. இரா. கலைக்கோவன், திருச்சி

சம்பந்தர் பெருமானால் பாடப்பெற்ற சிவத்தலங்களுள் திருவைகல் மாடக்கோயிலும் ஒன்று. காவிரியின் தென்கரைத் தலங்களுள் இது முப்பத்து மூன்றாவது ஆகும். ஆடுதுறைக்குத்தெற்கே நான்கு கிலோ மீட்டர் தொலைவில் திருநீலக்குடி என்னும் பாடல்பெற்ற ஊர் உள்ளது. அதற்குத் தென்கிழக்கில் வாய்க்கால் ஓரமாக உள்ள மண்பாதையில் மூன்று கிலோ மீட்டர் உள்ளே சென்றால் வைகல் என்றழைக்கப்படும் இத்தலத்தை அடையலாம். வைகலைக் கண்டு மகிழப் பேருந்தில் செல்ல வேண்டுமென்று விரும்பினால், திருநீலக்குடியை அடைந்து அங்கிருந்து காரைக்கால் செல்லும் பேருந்தில் சென்று, புளியங்குடிக்கு அப்பால் பழியஞ்சிய நல்லூரில் இறங்கி, நாட்டார்வாய்க்காலைத் தாண்டி, தெற்கே ஒரு கிலோ மீட்டர் நடந்து சென்றால் இதனை அடையலாம்.

வைகலில் மூன்று சிவன்கோயில்கள் இருக்கின்றன. சிவபெருமானின் வலக்கண்ணென அருள்மிகு விசுவநாதர் ஆலயமும், இடக்கண்ணென அருள்மிகு பிரமபுரீசுவர சுவாமி ஆலயமும், நெற்றிக்கண்ணென அருள்மிகு வைகல் நாதர் ஆலயமும் முறையே ஆக்கல், காத்தல், அருளல் தலங்களாக இங்குச் சிறப்புற்றுள்ளன. இவற்றுள் சம்பந்தர் பாடிய திருவைகல் மாடக்கோயில் மூன்றாவதாகும். இக்கோயில் ஊரின் மேற்குப் பக்கத்தில் அமைந்துள்ளது.

கோயிலின் நுழைவாயிலில் வாயிலையொட்டி இடப்புறம் கிழக்குப் பார்த்த முகமாக விநாயகர் வீற்றிருக்கிறார். கோபுரமற்ற நுழைவாயிலைக் கடந்து உள்நுழைந்ததும் தள வரிசை அமைக்கப்பெற்ற நடைபாதை காணப்படுகிறது. இது கோயிலின் முன்பகுதிக்கு மட்டும் அமைக்கப்பட்டுள்ளது. கோயிலைச் சுற்றிலும் பிறபகுதிகளில் புல் மண்டியுள்ளது. கோயில், மேடைமீது அமைக்கப்பட்டுள்ளது. இந்த மேடைக்குச் செல்ல முன்பக்கத்தில் படிகள் இல்லை. பக்கவாட்டில் இருபுறமும் படிக் கட்டுகள் அமைந்துள்ளன. கோயில் பிற்பட்ட காலத்துக் கட்டிட அமைப்புடன் கவனிப்பாரற்ற நிலையில் உள்ளது. முன்னால் சிறிய மேடையில் இறைவன் திருமுன்னை நோக்கிய வண்ணம் நந்தியொன்று உள்ளது. இம்மேடைக் கோயிலின் முன்புற வாயிலின் இருபுறமும் பக்கத்திற்கொன்றாக இரண்டு தெய்வப்புரைகள் (தேவகோஷ்டம்) உள்ளன. அவற்றுள் இடப்புறப்புரையில் பிள்ளையார் பெருமான் வீற்றிருக்கிறார். வலப்புறப் புரை வெறுமையாக உள்ளது.

வாயிலுள் நுழைந்ததும் முன்மண்டபம் உள்ளது. அதைத் தாண்டி உள்மண்டபமும் (அர்த்த மண்டபமும்) கருவறையும் உள்ளன. இங்குள்ள இறைவன் திருவைகல்நாதர் என்ற அழகிய தமிழ்ப்பெயர் இருக்க, சண்பகாரண்யேசுவர சுவாமி என்ற வடமொழிப் பெயரால் அழைக்கப்படுகிறார். நிலமகளின் வேண்டுகோளை ஏற்று அவளைத் திருமால் மணம் செய்து கொண்டதால், சினமுற்ற திருமகள் சண்பகவனம் என்னும் இத்தலத்தை அடைந்து சிவபெருமானைக் குறித்துத் தவமியற்றியதாகவும், திருமாலும் நிலமகளும் இங்கு வந்து இறைவனை வழிபட்டதாகவும், பிறகு சிவபெருமான் அருளால் திருமால் நிலமகளையும் திருமகளையும் இருமனைவியராக அடைந்து மகிழ்ந்ததாகவும் தலபுராணம் கூறுகின்றது. மேலும், இங்கு யானையொன்று தன் பிடியைக் காணாது வருந்தி, ஒரு ஈசல்புற்றைச் சிதைத்ததாம். அப்புற்றிலிருந்து வெளிப்பட்ட ஈசல்கள் அக்களிற்றைக் கொன்றனவாம். இதனால் வருத்தமுற்ற பிடியும் ஈசல்களும் இத்தலத்து இறைவனை வழிபட்டுப் பேறு பெற்றனவாம். பிரமன், இந்திரன், அஃத்தியர் முதலான தேவர்களும் இத்தலத்து இறைவனை வணங்கிப் பேறடைந்தனதாகக் கூறும் தலபுராணத்தைத் தமிழில் எழுதியுள்ளவர், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நாகலிங்கம் என்னும் பெரியாராவார். பிரும்மாண்ட புராணத்தில் 341 முதல் 345 வரை ஐந்து அத்தியாயங்களில் இத்தலத்தின் சிறப்பு சொல்லப்பட்டிருப்பதாக இத்தலத்தைப் பற்றிய குறிப்பொன்று கூறுகிறது.

மேடைக் கோயிலின் தெற்குப் புறத்தில், தெற்குப் பார்த்த நிலையில் உள்ள தெய்வப் புரையில் தென்திசைக் கடவுள் (தட்சிணா மூர்த்தி) வடிவம் உள்ளது. இந்தத் தெய்வப் புரையைச் சுற்றிச் சுவரெழுப்பி இதை ஒரு சிறு கோயில் போலச் செய்துள்ளார்கள். இந்தத் தென்திசைக் கடவுளின் வடிவம் அழகு பொருந்திய சிற்பமாகும். கருவறையின் விமானம் காரை பெயர்ந்து சற்றுச் சிதிலமான நிலையில் உள்ளது. மூன்றடுக்குள்ள இவ்விமானத்தின்

மேல்பாகம் அரைவட்ட வடிவமானது. விமானத்தில் உள்ள சுதையில் ஆன சிற்பங்கள் கலையழகுடன் திகழ்கின்றன.

மேடைக்கோயிலின் கீழே உள்ள புல் பாதையின் தெற்குப் புறத்தில் அம்மன் திருக்கோயில் உள்ளது. இங்குள்ள அம்மனைக் கொம்பியல் கோதை என்ற அழகான தமிழ்ப் பெயரிருக்க, சாகா கோமளவல்லி என்று வடமொழிப் பெயரிட்டு அழைக்கிறார்கள். அம்மன் கோயில் கருவறைக்கு முன், இறைவன் கோயிலில் உள்ளது போலவே முன் மண்டபமும் சிறிய அர்த்த மண்டபமும் உள்ளன. அம்மன் கருவறையின் விமானத்தில் குறிப்பிடும்படியான வேலைப்பாடுகள் ஒன்றுமில்லை. மேடைக் கோயிலின் வலப்புறமும் இடப்புறமும் கிணறுகள் உள்ளன. கோயிலைச்சுற்றி உடன் கூட்டத் தெய்வங்களுக்கென்று (பரிவார தேவதைகள்)சிறுசிறு உட்கோயில்கள் உள்ளன. மேடைக்கோயிலின்மேற்குப் புறத்தில் கிழக்குப் பார்த்த முகமாக விநாயகர் கோயில் கொண்டுள்ளார். அவரை அடுத்து முருகப் பெருமான் தன் இரு மனைவியரான வள்ளி, தெய்வயானையுடன் காட்சி தருகிறார். அடுத்து, திருமால் தன் இருமனைவியரான நிலமகளையும் திருமகளையும் கொண்டு விளங்குகிறார். இங்குள்ள உட்கோயில் சிற்பங்களுள், இம்மூன்று தெய்வ வடிவங்களே மிக்க எழிலுடன் விளங்குகின்றன. குறிப்பாகத் திருமகள் வடிவம் சிறப்பாகச் செதுக்கப்பட்டுள்ளது. இச்சிறு கோயிலை அடுத்து கஜலட்சுமிக்காக உட்கோயில் உள்ளது

கோயிலின் வடக்குப்புறத்தில் சண்டேசுவரருக்குச் சிறுகோயில் ஒன்று உள்ளது. இக்கோயிலுள் புதிய, பழைய சண்டேசுவரர்களின் திருவடிவங்கள் உள்ளன. இரண்டு சண்டேசுவரர்களுடன் கூடிய இச்சிறுகோயில் வேறெந்த ஆலயத்திலும் காணமுடியாத சிறப்பாகும். கோயிலின் கிழக்குப் புறத்தில் பைரவர், கதிரவன், மற்றும் சனிக்கடவுளுக்கான உட்கோயிலொன்று உள்ளது.

திருநாவுக்கரசு சுவாமிகள் தன்னுடைய திருத்தலக் கோவையில் (ஆறாம் திருமுறை, தருமபுர ஆதினப் பதிப்பு, பக். 515) இறைவனைக் காணக் கூடிய இடங்களை வரிசைப் படுத்திப் பாடும்போது,

''புலிவலம் புத்தூர் புகலூர் புன்கூர்
புறம்பயம் பூவணம் பொய்கை நல்லூர்
வலிவலம் மாற்பேறு வாய்மூர் வைகல்,''

என்று திருவைகலையும் சேர்த்துப் பாடியுள்ளார்.

இக்கோயிலைச் சம்பந்தர் பெருமான் வழிபட்டதைச் சேக்கிழார்,

''மன்று ளார்மகிழ் வைகல் மாடக்கோயில் மருங்கு
சென்று சார்ந்தனர் திருவளர் சிரபுரச் செல்வர்''

என்று கூறுவார். சம்பந்தர் பெருமான் இம்மாடக் கோயிலில் உறையும் இறைவனைப் போற்றி வணங்கிப் பதிகமொன்று பாடியுள்ளார். அதில் இக்கோயிலைக் கட்டியது கோச்செய்கட்சோழன் என்று குறித்துள்ளார்.

''வம்பியல் சோலைசூழ் வைகல் மேற்றிசை
செம்பியன் கோச்செங்க ணான்செய் கோயிலே,''

என்ற வரிகளும்,

''வையகம் மகிழ்தர வைகல் மேற்றிசைச்
செய்யகண் வளவன்முன் செய்த கோயிலே''

என்ற வரிகளும்,

அதை உறுதி செய்கின்றன (மூன்றாம் திருமுறை, தருமபுர ஆதினப்பதிப்பு பக்.84)

கோயில்கலை வரலாற்றில் மாடக்கோயில் அமைப்பு ஒரு புதுமையாகும். இப்புதுமையைச் செய்த மன்னனாகப் போற்றப்படுபவன் சோழன் கோச்செங்கணான். திருமங்கையாழ்வார், தன் பெரிய திரு மொழியில் மூன்றாம் திருநறையூர்ப் பதிகத்தில்,

''இருக்கிலங்கு திருமொழிவாய் எண்தோள் ஈசற்கு
எழில்மாடம் எழுபதுசெய் துலக மாண்ட
திருக்குலத்து வளச்சோழன் சேர்ந்த கோயில்
திருநறையூர் மணிமாடம் சேர்மின் களே'',

என்று பாடுகிறார். இறைவனுக்காக எழுபது மாடக்கோயில்களை எழுப்பி அழியாப் புகழ் பெற்ற இம்மன்னனின் காலத்தை ,வரலாற்று அறிஞர்கள் கி.பி. நான்காம் நூற்றாண்டிலிருந்து ஆறாம் நூற்றாண்டுக்குள் இடைப்பட்டதாகக் கருதுகிறார்கள். சாங்க காலத்திலும் சங்கத்துக்குப் பிற்பட்ட காலத்திலும் கட்டப்பட்ட கோயில்கள் மரம், மண், செங்கல் இவற்றாலேயே கட்டப்பட்டவையாகையால், காலப்போக்கில் அவை அழிந்து போயின. இரண்டாம் நரசிம்மவர்மப் பல்லவனுக்குப் பிறகே கற்றளி கட்டும் முறை உருவானது. எனவே கோச்செங்கட்சோழன் எடுப்பித்த திருவைகல் மாடக்கோயிலும் காலப்போக்கில் அழிந்து, பின்னால் வந்தவர்களால் மீண்டும் கட்டப்பட்டிருக்கலாம் அல்லது புதுப்பிக்கப்பட்டிருக்கலாம். இதன் பிற்கால வரலாற்றைஅறிய இயலாதபடி இங்குக் கல்வெட்டுக்கள் ஏதும் இல்லையென்பது வருந்தத்தக்க செய்தியாகும்.

இக்கோயிலைக் காணச்சென்றபோது உடனிருந்து வழிகாட்டி, வைகல் தலங்களைக் கண்ணாரக் காணும் பேற்றினை எங்களுக்கு வழங்கியதோடு அன்றிக், கோயில் பற்றிய அனைத்துச் செய்திகளையும் தந்து உதவிய உன்னதக் குருக்களின் அன்பு மனத்தையும் என்னால் என்றும் மறக்கவியலாது.

***

# தமிழும் சிவமும்

"கவிஞர்கோ" கோவை. இளஞ்சேரன்,

செயலாளர், தமிழகப் புலவர்குழு, நாகப்பட்டினம்.

## மூலத்தைக் குறைத்த போலி:

"கலயம்" அடுக்குப் பானையிலும் அடுப்பின் மேலும் இருக்கும் ;
'கலசம்' கோவிலிலும் கோபுரத்தின்மேலும் அமரும்.

'கலயம்' என்றால், ஏழையும் கஞ்சியும் மனத்தில் தோன்றும்;
'கலசம்' என்றால், அடியாரும் இறையன்பும் எழும்.

'கலயம்' எளியதாகவும் சற்றுத் தாழ்வான தாகவும் கருதப்படும்;
'கலசம்' அரியதாகவும் மிக உயர்வானதாகவும் மதிக்கப்படும்.

'கலயம்' தூசி படிந்த கரிப்பானை;
'கலசம்' தூய்மை துலங்கும் தெய்வச் சின்னம்.

'செம்பை விற்றுக் கலயம் வாங்கியது போல்' என்னும் பழமொழி கலயத்தின் சிறுமையைப் பேசுகின்றது. 'ஆலயந் தானும் அரனெனத் தொழுமே' என்று சிவஞான போதம் கலசத்தின் பெருமையைக் குறிப்பாகப் பாடுகின்றது. இவ்வாறு கலயமும் கலசமும் தன்மைகளால் மாறுபட்டிருக்கலாம்; உருவத் தோற்றத்தால் வேறுபட்டிருக்கலாம். ஆனால், செய்பொருள் அளவில் மாறுபாடு இல்லை. கலயத்தைக் கவித்துவைத்து அதன்மேல் கலைப் பாங்குடன் ஒரு கூம்பு அமைக்கப்பட்டதுதான் கலசம். இன்றும் பல சிறிய கோவில்களில் இவ்வாறே கலயம் கவிழ்த்து வைக்கப்பட்டுக் கலசம் செய்யப்பட்டிருப்பதைக் காணலாம். செம்பிலும் பொன்னிலும் இது வளர்ந்தது. எவ்வாறாகினும் இரண்டும் கலமே.

ஒன்று, குடிசையில் உண்கலம்;
மற்றொன்று, கோவிலில் அணிகலம்.

ஒரு கலத்தின் உண்மைப் பொருள் உணவு அளவே;
மற்றொரு கலத்தின் உட்பொருள் இறையியல் கோட்பாட்டளவு.

சொல்லைப் பொறுத்த அளவில் இரண்டிற்கும் முதற்சொல் 'கலம்' என்பது தான். முதற் சொல்லால் மட்டும் இரண்டும் ஒன்று என்பதுமட்டும் அன்று; 'கலயம்' என்னும் சொல்தான் 'கலசம்' ஆயிற்று.

தேயம்-தேசம்; நேயம்-நேசம்; இலவயம்-இலவசம் என யகரத்திற்குச் சகரம் போலியாகும். இவ்வாறு வாய்வழக்கில் கலயம் என்னும் சொல் கலசமாகியது. கலயத்தின் போலி தான் கலசம். இதுகொண்டு, இப்படிச்சொல்லலாமா? அடுப்பின் மேல் கலசம்; கோபுரத்தின் மேல் கலயம். இவை கூறக் கூடாதவை. சொல்லத்தகாதவை என்னும் எண்ணம் எழும். இவற்றிலும் 'கோபுரத்தின் மேல் கலயம்' என்று சொல்வது ஆன்மிகக் குற்றமாகவும் படும். மொழியளவில் நோக்கினால் கலயம் மூலம்; கலசம் போலி. ஒரு சொல் மூலமாக நின்று சிறுமைக் கருத்தையும், போலியாகிப் பெருமைக் கருத்தையும் தருகின்றது. ஆனால் கலயத்திற்குக் கொள்ளப்படும் இச்சிறுமை அதற்கு இயல்பு அன்று. போலியான கலசத்தால் நேர்ந்தது அன்றோ? அஃதாவது போலி மூலத்தைத் தாழ்வாக்கியுள்ளது.

இது மொழி வரலாற்றில் ஒரு நிலை. இத்துடன் மற்றொன்றையும் குறிக்க வேண்டும். மேற்போக்கான நோக்கத்தில், கலயம் தமிழ்; கலசம் வடமொழி என்றும் பலர் கருதுவர். இக்கருதல், மூலத்தாயை மறுத்துவிடும்போக்கு எனலாம். இவ்வகையில், போலியாகும்வழக்கு எத்தகுதி கொண்டது? அதன் தகுதியைப் பின் வரும் வழக்குகள் கொண்டு அறியலாம். 'குசவன் வீட்டு முசக்குட்டி புசல் அடித்ததில் மசங்கிற்று'- இவ்வாறு பேசுவோரை ஏளனப் பார்வையில் வைப்போமன்றோ? பேச்சு நகைப்பிற்கு உரியதாகிவிடும். சான்றோர் இதுபோன்ற வழக்கை 'இழிசினர் வழக்கு' என்பர். இதுகொண்டு 'கலசம்' என்பது இழிசினர் வழக்கு என்றால், அப்படிச் சொல்வது ஆன்மிகக் குற்றம் என்பதற்கு உறுதியாகிவிடும். இந்த அளவில் சொல் போலி சிறப்பைப் பெற்றுள்ளது. மொழித் துறையில் இந்நிலை ஒருபுறமிருக்க, அடுத்தொரு நிலை இங்கு நினைக்கத்தகும்தொடர்பு கொண்டது ஆகின்றது.

காண்பதற்கு உரியது காட்சி (காண் சி); மாண்புக்கு உரியது மாட்சி (மாண் சி); வெட்டிப் பிரிக்கப்படுவது வேட்டி; முட்டிக் கொண்டிருப்பது முட்டி. இவற்றை காக்ஷி, மாக்ஷி, வேஷ்டி முஷ்டி என எழுத்து மாற்றி எழுதினர். அறியாதார் 'இவை வடசொற்கள்; வடசொற்கள்தாம்

தமிழில் காட்சி, மாட்சி என ஆயின' என்று எண்ணினர்.

மொழிச் செருகலில், இஃதொரு எழுத்து மாற்ற வேலை. முன்னர்க் கண்ட கலயம்-கலசம் இயற்கையாக நேர்ந்தது; பின்னது, செயற்கை வேலை; உள்நோக்கங்கொண்டது; கீழறுப்பு வேலை. 'மொழிப் போக்கில் இவ்வா றெல்லாம் பார்க்க வேண்டியதில்லை; நிகழக் கூடியனவே' என்றொரு அமைதி எண்ணம் எழ லாம். இவ்வமைதி எண்ணத்தை மீறவேண்டிய அளவிற்குப் பல கரணியங்கள் முந்துகின்றன. இம்மொழி ஊடுருவல் அடியில் தொடங்கி ஆடைக்கு (வேட்டிக்கு) வந்து ஆன்மாவையே கைப்பற்றுவதனால் அது கவனத்திற்கொள்ள வேண்டியதன்றோ? கவனத்திற் கொண்டால் 'ஆன்மா'வே சான்றாகின்றது.

## 'ஆ'வை மேய்ந்த 'பசு':

'ஆ' என்பது ஓரெழுத்தொரு மொழி. இது கறவை இனத்தைக் குறிக்கும் சொல். சங்க இலக்கியங்களில் இச்சொல்லே உளது. திருக் குறளிலும் இவ்வாறே. மணிமேகலை ஆசிரியர் சாத்தனார் இதனையே கையாண்டார். சிலப் பதிகாரத்தில் 'ஆ காத்தோம்பி' 'குன்றுதேர் ஆ' என்றெல்லாம் ஆவும் உண்டு. அத்துடன் 'பசு பத்தினி' எனப் பசுவும் புகுந்தது. புகுந்த வடமொழிப் பசு இடத்தைப் பிடித்து மடத் தைப் பிடுங்கத் தொடங்கியது. பின்வந்த புலவர் பலரும் 'ஆ' என்றும் 'பசு' என்றும் இரண்டையும் ஆண்டனர். தேவார மூவர் 'ஆ'வைக் கொண்டனர். இருந்தாலும் இன் றைய நிலை என்ன? 'பசு' என்றால் புரியும். 'ஆ' என்றால் என்ன தெரியும்? இலக்கணம் பயில்வோர்க்கு நெட்டெழுத்துக்களில் ஒன்று என்று தெரியும். 'ஆ' என்று வாய் பிளப்ப தாகப் புரியும். ஏதேனும் வலி ஏற்படும்போது குரல் கொடுப்பதாகத் தோன்றும். பயன் என்ன? 'ஆ' என்னும் சொல் அதற்கு அமைந்த பொருளில் வழக்கற்றுப் போயிற்று. ஆவைப் பசு மேய்ந்துவிட்டது. இவ்வாறு எத்துணை சொற்கள் மேயப்பட்டன? அவை யாவும் மொழிச் செருகலால் நேர்ந்தவை அன்றோ

ஆவை மேய்ந்த பசு ஆன்மாவையும் தின்னத் துவங்கியதைக் காண்போம். 'ஆ' என் பதற்குக் கறவை இனத்தைக் குறிக்கும்பொருள் அதன் மூலப்பொருள் அன்று. அச்சொற்கு வேர்ப்பொருள் 'உயிர்' என்பது. 'ஆ' என்னும் இச்சொல் குரலால் ஒலியெழுப்பும் உயிரினத் தைக் குறிக்கும். அதனால்தான், இசைத் தமிழில் 'குரல்' என்னும் இசைக்குரிய குறி யீட்டெழுத்தாக 'ஆ' அமைக்கப்பட்டது. அதன் மறுமுனைப் பொருள் வளர்ச்சிதான் 'ஆவி' என்னுஞ் சொல்.

ஆவி-உயிர். 'ஆவிபோகக் கத்துகிறான்' என்று இக்காலத்தும் வழக்குண்டு. வாய்திறந்து ஊதிவிடும் உயிர்க்காற்றை 'ஆவி' என்றனர். அகநானூறு இதனை ''ஊது ஆவி'' (71-14) என்று பாடியது. வாயைப்பிளந்து விடுவது 'கொட்டாவி' எனப்படும். இதனை இலக் கியம் ''ஆவித்தல்' என்றும், நற்றிணை 'சிறு வெண் காக்கை ஆவித்து அன்ன'' என்றது (345.4). ஆவிகள் இரண்டும் சற்று வெப்ப மான உயிர்க்காற்று. இத்தொடர்பில் வெப்பங் கொண்டவை ''நீராவி, பாலாவி' எனப்பட்டன.

'ஆ' என்பதன் மற்றொரு முனைப் பொருள் கறவை இனத்திற்கு ஆயிற்று. முதல் மாந்தர் மலைநிலத்தவர். மலைநிலத்து விலங்குகள் யாவும் அவனுக்குப் பகையானவை அல்லது பழக்கத்திற்கு அஞ்சியவை. மலை யினின்றும் கீழ் இறங்கியவரது முல்லைநில வாழ்வில் அவனை அண்டிய விலங்கு கறவை இனம். அவ்வினம் 'ஆ' எனப்பெயர் பெற்றது. அதன் குரலொலியாகிய 'அம்மா' ஒலியும், அம்மம் என்னும் தாய்ப்பாலைக் குறிக்கும் சொல்லும் 'ஆ' மாந்தரது அண்மைத்தொடர்பு உடையது என்பதன் சின்னங்கள்.

'ஆ' 'ஆன்' என்றாகும். 'னகரம் ஒற்றும் ஆவும் மாவும்' என்று தொல்காப்பியம் விதி வகுத்தது. இந்நிலையிலும் 'உயிரினம்' என் னும் பொருளிலேயே 'ஆன்' என்னும் சொற் பொருள் அமைந்தது. உயிர்மட்டும் சென்று அமைதியுற்று நிலைபெறும் இடம் ''ஆனிலை உலகம்'' (புறம் : 6 :7) எனப்பட்டது. இங்கு 'ஆன்' உயிரைக் குறிப்பது. பிற்காலத்தவர்-புறத்தின் உரையாசிரியர் உட்பட இதற்கும் பசுவைத் தொடர்பாக்கிக் கோனிலை உலகம் கோவுலகம் என்று கொண்டனர்.

இவ்வாறு உயிரைக் குறித்தெழுந்தசொல் கறவையினத்திற்கு ஆனமையுடன் அனைத்து இன உயிர்களையும் குறிக்கும் சொல்லாக 'ஆன்மா' என உருப்பெற்றது. ஆன்-உயிர். மா-விலங்கு (அழைக்கை என்றும் பொருள்). குறுக்கே வளரும் விலங்கும், நிமிர்ந்து நின்ற மாந்தனும் ஆகிய அனைத்துயிர்களின் உயிரை யும் குறிக்கும் காரணக் குறியீட்டுச் சொல்லாக ''ஆன்மா'' என்னும் சொல் அமைந்தது. இவ் அடிப்படை கொண்டே வடமொழியில் முதல் நூல் என்று கருதப்படும் இருக்கு மறையும்.

''இரண்டுகால் உயிரும், நான்குகால் உயிரும் பசு''.

என்றது. இங்கு மற்றொரு தொடர்பையும் காணல் பொருந்தும். மேலைநாட்டார்வணிகத் தொடர்பால் சொற்கள் இடம் மாறி வழங்கப் பட்டன. அரிசி என்னும் தமிழ்ச்சொல் மேலை நாட்டில் ஏறியதை மொழிநூலார் அறிவர். இஃது இலத்தீனில் ஒரிசா ( Oryza ) ஆகி ஆங்கிலத்தில் Rice ஆகியது. இது போன்றே 'ஆன்மா' என்னுஞ்சொல் கிரேக்கத்தில் 'அனிமா' ஆகியது. கிரேக்கத்தில் இதற்குப் பொருள் 'உயிரினத்து உள் உயிர்' என்பது, இங்கே கவனத்திற்கொள்ள வேண்டியதாகும். இவ் 'அனிமா' தான் ஆங்கிலத்தில் 'அனிமல்' (Animal) ஆகியது.

இவற்றையெல்லாம் நுணுகி நோக்கின் 'ஆன்மா' என்னும் தமிழ்ச் சொல்லின் மூலப் பொருளாகிய 'உயிர்' என்பதை வடமொழி யாளர் விடுத்து 'ஆ'வைப் பசுவாக்கியமை போன்று 'ஆன்மா' வையும், பசு' என இறை யியற் கோட்பாட்டிற்குக் கொண்டனர். பசு, பதி, பாசம் என்னும் மூவியல் வடசொற்களில் பசு ஆன்மாவைக் கவர்ந்தது. சைவப் பெரு மக்கள் சிலரே 'ஆன்மா' எனக் கையாளப் பலர் 'பசு' என்றே எழுதினர். அதனால் ஆன்மா

வடமொழியாளரால் மற்றொரு உருவத்திற்கு ஆளாகியது. அது 'ஆத்மா' என்றாக்கப்பட்டது. ஆன்மாவையும் ஆத்மாவையும் அறிவோர் 'ஆத்மா' என்னும் வடமொழியின் தமிழ் உருவமே 'ஆன்மா' என்று தவறாகக்கொண்டனர். இவ்வாறு கொண்டமை முன்னர்க் கண்ட காட்சி-காக்ஷி போக்கில் உண்டானதாகும்.

## வடநூல் வழித் தமிழாசிரியர் :

சுருக்கங் கருதி ஒன்று காட்டப்பட்டது. இதுபோன்று நூற்றுக்கணக்கான சொற்கள் வடமொழியின் மாற்றுருவமாகத் தமிழில் உள்ளனவாக வடமொழியாளரால் காட்டப்பட்டன; மாற்றப்பட்டன. இவ்வாறு செய்தவர்களை இடைக்காலத்தார் ''வடநூல் வழித் தமிழாசிரியர்' என்றனர். இவ்வாறு குறித்த யாப்பருங்கல விருத்தியின் உரையாசிரியரே, ஒரு வடநூல் வழித் தமிழாசிரியரே. இப்போக்குக்குத் துணைபோன இவர், வடமொழியைத் தழுவாது நிற்கும் தமிழ் உண்டோ என்று பாடும் துணிவையும் பெற்றார். இவ்வாறு தோன்றும் வடநூல் வழித் தமிழாசிரியர்களை மறுக்கும் தமிழ் மரபுத் தமிழாசிரியரும் குரல் கொடுத்தனர். தமிழில் அணியிலக்கண நூலே இல்லை என்றொரு குரலும், பிற்காலத்தில் ஒலித்ததுண்டு. அதற்குத் திருநாராயண ஐயங்கார் என்னும் மதுரைத் தமிழ்ச் சங்கப் பெரும் புலவர்,

> ''பிற பாடைகளிலில்லாத எண்ணிறந்த பலவேறு வகையான பாடல்களையும் பிரபந்தங்களையும் உடையதாய்ச் செய்யுள் நடையிற் சிறந்து விளங்கும் தமிழ் மொழிக் கண்ணே செய்யுளுக்கின்றியமையாதபொருள் யாப்பிலக்கணங்கள் பிறிதொரு பாடையிலிருந்து கொள்ளப்பெறாது தமிழுக்குரியவாய்த் தனியே இருக்கும்பொழுது அவற்றினோடொத்த அணியிலக்கணப் பகுதி மட்டும் அன்னிய பாடையிலிருந்து வந்ததாகச் சொல்லுவது அநாதரிக்கத்தக்கதே''

என்று மறுத்து எதிர்க்குரல் கொடுத்தார். காலங்காலமாக இவ்வாறு எழுத்துச் செருகல், சொல் ஊடுருவல், கருத்துப் புரையோட்டம் தொடர்ந்து, பையப்பைய நிகழ்ந்து வருகின்றது. இவற்றால் எத்துணையோ பொருள் பொதிந்த தமிழ்ச் சொற்கள் மறைந்தன. பொருள் பொருந்தாத வடசொற்கள்மலிந்தன. ''ஏழில்மலை'' என்பது எலிமலையாகி 'மூசிக பர்வதம்' என வடமொழியாகி அதற்கொரு புதுப் புராணம் எழுந்த ஒரு சான்றே போதுமானது. தேவார மூவரால் பாடப்பட்ட திருக்கோவில்கள் உள்ள ஊர்களின் தனித்தமிழ்ப் பெயர்கள் இன்று எவ்வாறுள்ளன?

சைவப்பெருமக்களே ''மறைக்காட்டுறைமைந்தா'' என்று பாடிக்கொண்டு ''வேதாரணியம் செல்கின்றேன்'' என்கின்றனரே. எத்துணை ஊர்ப்பெயர்கள் மாறியுள்ளன? தமிழர்களது இப்பாராமுகப் போக்கையும், பெருந்தன்மையையும், பெருமளவு மந்தத்தையும் பயன்படுத்திக் கொண்டு, எல்லாமே வடமொழியிலிருந்து வந்தன என்றும் எழுதினர்; பேசினர்; நிலைநாட்ட முனைந்தனர். இன்றும் முனைந்துள்ளனர்.

தமிழ் நூல்களில் சில போக மற்றெல்லாம் வடமொழியிலிருந்து வந்தன என்றனர். திருத்தொண்டர் புராணத்திற்கே இந்நிலை என்றால் என்ன ஆவது? இவற்றைக் கண்டு மனம் புழுங்கிய பரிதிமாற்கலைஞர்,

> '' தமிழரிடமிருந்து பல அரிய கருத்துக்களையும் செய்திகளையும் ஆரியர் தம் மொழியான சமஸ்கிருதத்தில் மொழி பெயர்த்துக்கொண்டு தமிழர் அறியும் முன்னரே தாமே அறிந்தன போலவும் சமஸ்கிருதத்திலிருந்து தமிழுக்கு வந்தன போலவும் காட்டியுள்ளனர்''

என்று எழுதிய கருத்து இன்றும் நினைவுகூரத் தக்க தாக உள்ளது. இன்றும் நினைவுகூருமாறு உள்ள நிலை என்ன?' என்று வினவலாம். ஒரு சில காணலாம்.

புதுச்சேரி மாநில வானொலியில் இந்திப் பாடவகுப்பில் அதன் ஆசிரியர் ஒரு தொடரை மொழி பெயர்ப்பிற்குத் தந்தார். அத்தொடர் ''தமிழ் மொழி இனிமையானது இல்லை'' என்பது. இதன் உள்நோக்கத்தை எவ்வாறு கணிப்பது? 'தமிழ் என்னுஞ் சொல்லுக்கு இனிமை என்று பொருள்' என்னும் தமிழ் மண்ணில் ஒரு வடநூல் வழி இந்தி ஆசிரியர் நாட்டு மக்கட்கு ஒலி பரப்பினார். இது 28.8.78 நண்பகல் 1 மணி நிகழ்ச்சி.

மூன்று திங்களுக்கு முன்னர் மதுரையில் ஒரு வடநூல் வழித் தமிழாசிரியர், ''தமிழ் காலப் போக்கில் உலகில் மறைந்து போகும்; வடமொழி தான் நிலைத்து நிற்கும்'' என்று பொது மேடையில் பேசினார். செய்தித்தாள்களில் படித்த தமிழர்களாக உள்ளோம்.

''மிகவும் விரைவிலே தமிழ் ஒளி உலக முழுவதிலும் பரவாவிட்டால் என் பெயரை மாற்றி அழையுங்கள்''. இப்படி ஓர் அழுத்தமான தொடர் கவிமாமன்னர் பாரதியார் மொழிந்தது. பாரதி நூற்றாண்டு விழாக்கள் நடக்கின்ற காலம். பாரதி வந்தால் அவன் பெயரை மாற்றி அழைக்கவும் தயங்கப் போவதில்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

## சிவமும் சைவமும் :

தற்போது பழங்குரல் ஒன்று புதுப்பிக்கப்படுகின்றது. ''சிவம் தமிழ் அன்று; சைவம் என்று சொல்லத் தொல்காப்பியத்தில் விதி இல்லை''. அண்மையில் சென்னையில் எழுந்த புழுதியாம் இது. ''தமிழ் சிவம் இனிமை என்னும் தனிப்பொருள்தாம்'' என்பது கழாரம் பரது பேரிசை நூற்பா. இதற்கு மறுப்பு போலும் தற்போது எழுந்துள்ள முனகல். எதில் எதிலோ வைக்கப்பட்ட வாய் சிவத்தின் மேலேயே வைக்கப்பட்டுள்ளது. மொழியியல் படி சுருக்கமாகச் சொன்னார், சுல்-என்பதன் வேரிலிருந்து-சுள்-செல்-சேல்-சேள்-செள்-செய்-சேய்-செம்-செல்-சிவ-சிவம் வளர்ச்சியுற்றதை மொழி ஞாயிறு பாவாணர் நிலைநாட்டியுள்ளார்.

'தவ என்னும் உரிச்சொல் 'தவம்' ஆனது போன்று, 'சிவ' 'சிவம்' ஆயிற்று. செம்மை, செந்நிறம் என்னும் பொருட்பாங்கைக் கொண்ட சொல் சிவம். தீப்போலும்

செம்மை, செந்நிறம் என்னும் பொருட்பாங் கைக்கொண்ட சொல் சிவம். தீப்போலும் செம்மை வண்ணத்தன் எனச் சிவபெருமான் குறிக்கப்பட்டார். உலகில் ஒரு கால் சைவக் கொள்கை பரவியிருந்தபோது அங்கெல்லாம் சிவன் சிவப்பன் என்னும் பொருளிலேயே கொள்ளப்பட்டார். பிலிப்பைன்சு நாட்டார் சிவனைச் சிவப்பன் எனப்பொருள் தரும் சொல்லிலேயே வழிபட்டனர்.

வடமொழியில் நல்ல, மங்கலமான எனப் பொருள்படும் அடைமொழியாகிய சிவ என் பதைக் காட்டுவர். வடமொழியில் சிவ என்னும் ஒலி தமிழ் ஒலிக்கு வேறுபட்டது. மற்றொரு சார் வடமொழியாளர், 'சீ' என்பதை மூல மாகக் காட்டுவர். 'சீ' என்பதற்குப் 'படுதல்' 'அழித்தல்' என்பது பொருள். ஒருமுனையார் மங்கலப் பொருள் சொல்ல மற்றொரு முனை யார் அழிவுப் பொருள் காட்ட இருமுனைப் பட்டது வடமொழிச் சிவம். (இலிங்கம், சிவம் என்னும் அருவ உருவம் பற்றி இவ்விடத்தில் கருதவில்லை. அஃதொரு தனி ஆய்விற்குரியது. இதுபோது 'சிவம்' என்னும் சொல் பற்றிய கருத்தே இங்கு கொள்ளப்படுகின்றது). சிவம் என்னும் சொல் சைவம் என்று ஆவதற்குத் தொல்காப்பியத்தில் விதியில்லை என்கின்றனர்

''உயிரும் புள்ளியும் இறுதி யாகிக்
குறிப்பினும் பண்பினும் இசையினும் தோன்றி
நெறிப்பட வாராக் குறைச் சொற் கிளவியும்
.... .... .... ....
அன்னவை எல்லாம் மருவின் பாத்திய''

(தொல் : எழுத்து : 482)

என்னும் தொல்காப்பிய நூற்பா, பண்புச்சொல் மரூஉ மொழியாகும் என்கின்றது.

இவ்விதிப்படி செம்மை என்னும் பண்புப் பொருள்தரும் சிவம், சைவம் என மருவி வழங்கப்பட்டது. இவ்வாறு மருவிய மொழிகள் பல நம் வழக்கில் உள்ளன. ஒன்று கொள்ள லாம். தோற்ற கால மாந்தன் மொழி கொள் ளாது கையாற் காட்டும் செயலால் கருத்தை வெளிப்படுத்தினான். இது 'செய்கை' எனப் பட்டது. இச்சொல் காலப்போக்கில் 'சைகை' என மருவியது. இச்சொல் செ-சை ஆக மருவு தற்கு எடுத்துக் காட்டு. மொழி முதலில் மட்டு மன்றி மொழியிறுதியிலும் இவ்வாறு மருவும்.

நன்செய், நஞ்சை என மருவியதில் இதனைக் காண்கின்றோம். இகரம் ஐகாரமாக மாறும். 'பித்தம்' என்னும் சொல் 'பைத்தியம்' என வழக்கிலும் உள்ளதைக் காண்கின்றோம்.

இவ்வாறே 'சிவம்' என்னும் தூய தமிழ்ச் சொல் 'சைவம்' என மருவிற்று, இவ்வாறு மருவி வருதலை வழங்கியல் மருங்கின்உணர்ந்து ஒழுக வேண்டும். அவ்வாறு ஒழுகுதல் நல்லறி வில் நாட்டமுடையோர்க்கு இயல்பு. இவ்வாறு நாம் கூறவில்லை. தொல்காப்பியர் இடித்துக் கூறும் மொழிகள் இவை :

''கிளந்த அல்ல செய்யுளுள் திரிநவும்
வழங்கியல் மருங்கின் மருவொடு திரிநவும்
விளம்பிய இயற்கையின் வேறுபடத் தோன்றின்
வழங்கியல் மருங்கின் உணர்ந்தனர் ஒழுக்கல்
நன்மதி நாட்டத் தென்மனார் புலவர்''

(தொல் : எழுத்து 483)

நல்லறிவில் நாட்டமுடையார் தேர்ந்து தெளிவார்களாக.

## இன்றியமையாத இற்றைக் கடமை :

ஒரு மொழியில் மற்ற மொழிச் சொற்கள் புகுவதும் பரவுவதும் உலக இயற்கைதாம். தமிழிலும் வடசொற்கள் புகுந்துள. வடமொழி யிலும் தமிழ்ச் சொற்கள் இடம் பெற்றுள. இரண்டும் இன்றியமையாதன என்று கொள்ள வேண்டியதில்லை. ஒன்றையொன்று விலக்கி வாழ இயலும். தமிழ் அவ்வாறு வாழும் இயல் புடைய மொழி எனத் தமிழறிஞர்களாலும் வெளிநாட்டு மொழியறிஞர்களாலும் நாட்டப் பட்டுள்ளது.

இதனை அறிந்தும் தம் தாய்மொழியாக உள்ளுணர்வோடு ஏற்றுக் கொள்ள மனங் கொள்ளாத சிலர் இதுபோன்ற குறுக்குநடை போடுவதைப் பார்க்கும்போது தமிழைத் தாய் மொழியாக உள்ளுணர்வோடு கொண்டோர் ஒன்றைக் கடமை யாகக் கொள்ள வேண்டும்.

எழுத்து, பேச்சு சொற்பொழிவுமுனைகள் தோறும் தமிழாக்கம் விழைவோர், தமிழ் மறுப்பாளர் வலிந்து கூறுபவற்றை மறுத்துக் காட்டும் பணியைக் கடமையாகக் கொள்ள வேண்டும். இலக்கிய நிகழ்ச்சியாயினும், சமு தாய நிகழ்ச்சியாயினும், அரசியல் நிகழ்ச்சியா யினும், இறையியல் நிகழ்ச்சியாயினும் இக் குறிக்கோளை ஒரு கோட்பாடாகக் கொண்டு அவற்றிலும் குறிப்பாகத் திருக்கோயில் நிகழ்ச்சிகளில் தமிழறிஞர் இக்கோட்பாட் டைத் தவறாது கடைப்பிடிக்க வேண்டும். திருக் கோவிலாரும் இதற்கு வாய்ப்பளித்து மொழி வழி நலம் சேர்க்கும் உணர்வுடையோர் தம் கருத்துக்களைப் பரப்புதற்கு உதவ வேண்டும். இறைவன் திருமுன்னேனும் குறுக்குவழிப் பேச்சுகள் தவிர்க்கப்படவேண்டும். இதுமுனைப் பாக்கிக் கொள்ள வேண்டியதாகியுள்ளது. இஃது இன்றியமையாததாகியுள்ளது. ஒரு கவிதையும், ஓர் உரைமொழியும் இங்கு இந் நேரத்திற்கு நிறைவுரையாகும்.

''கட்டி
இரும்புதந்த நெஞ்சுடையார்
துறைதோறும் நின்னெழிலை ஈடழித்து
வரும்புதுமை நினைக்கையிலே
நெஞ்சுபதைக் கும்சொல்ல வாய்ப
தைக்கும்''

''தமிழ் மொழியில் யார் யார் என்ன செய்தபோதிலும் கேள்விமுறை இல்லை. அவர வர் தத்தமக்குத் தோன்றியவாறும் வாய்க்கு வந்தவாறும் எழுதுகின்றனர். இவ்வாறுசெல்ல விடுதல் கேடே.''

—பரிதிமாற் கலைஞர்.

# படிமக் கலை

திரு. வி. கணபதி ஸ்தபதி, B.A., B.T.,
தலைவர், சிற்பக்கலைக் கல்லூரி, மாமல்லபுரம்.

## முன்னுரை :

தமிழ்ப் பெருமக்கள் பேணிவளர்த்த கலைகளில் நாட்டியம், ஓவியம், சிற்பம், இசை, கவிதை ஆகிய ஐந்தும் அழகுக் கலைகளாகும். முன்னைய மூன்றும் கண்வழிச் சென்று உள்ளத்தை இன்புறச் செய்வது; பின்னைய இரண்டும் செவிவழிச் சென்று உள்ளத்திற்கு உவகையூட்டுவன.

கண்ணையும் கருத்தையும் கவரக்கூடிய ஒரு காட்சியை ஒருவன் காண்கிறான். காட்சி புலன்வழிச் சென்று உள்ளம் என்ற திரையில் நிழலிடுகிறது; இன்ப உணர்ச்சி தோன்றுகிறது. இஃது உள்ளத்தை நிரப்பிப் பொங்கி வழிகிறது. இவ்வுணர்வை, தான் பெற்ற இன்பத்தை, பிறர் உள்ளத்தில் படைக்கும் ஆற்றலே கலை எனப்படும். உள்ளத்தில் பொங்கி வழியும் உணர்ச்சிப் பெருக்கைச் சுவை குன்றாது முறைப்படுத்தி எடுத்துரைப்பதால் கவிதை பிறக்கிறது; வரைவதால் ஓவியம் தோன்றுகிறது; வடிப்பதால் சிற்பம் உருவாகிறது.

## படிமம் :

ஒன்றுக்கு ஈடாக அவ்வொன்றைப் போலவே அமையும் மற்றொன்றுக்குப் 'படி' என்று பெயர். அதாவது மூலத்தின் பிரதி, 'படி' எனப்படுகிறது. இதனையே 'படிமம்' என்றும், 'படிவம்' என்றும் அறிஞர் கூறுவராயினர். ஆனால் கலைத்துறையில் இச்சொல் மிக ஆழ்ந்த கருத்தில் கையாளப்படுகிறது.

இயற்கை வடிவங்களையும் பிற காட்சிகளையும் உள்ளதை உள்ளவாறு உரைத்தலோ, உருவாக்குதலோ கலைப்படைப்பு என்று நாம் கருதுவதில்லை. உள்ளதை உணர்ந்தவண்ணம் எடுத்துரைப்பதும் உருவகிப்பதும் கலைத்திறம் என்று கொள்கிறோம். எனவே உணர்வின் பிரதிபலிப்பே கலையென்பதாகிறது. விரித்துக் கூறின், மனத்திரையில் நிழலிட்ட உணர்வு மயமான காட்சியின் பிரதிபிம்பத்தையே படிவம் என்றும், படிமம் என்றும், நம் தமிழ்மக்கள் கொண்டனர். இதே பொருள்பற்றி வடமொழி நூல்களும் 'பிரதிமா' என்றே இக்காட்சியை அழைக்கின்றன.

பொதுவாகப் படிமம் என்ற சொல்லைத் தெய்வத் திருமேனிகளைக் குறிப்பதற்கே தொன்றுதொட்டு வழங்கி வருகிறோம். எடுத்துக்காட்டாக, தொல் இலக்கியமான சிலப்பதிகாரத்தில் கண்ணகியின் தெய்வ வடிவைப் படிமம் என்றே இளங்கோவடிகள் குறிப்பிடுவதைக் காண்கிறோம்.

'மேலோர் விழையும் நூனெறி மாக்கள்
பால்பெற வகுத்த பத்தினிக் கோட்டத்து
இமையவர் உறையும் இமையச் செவ்வரைச்
சிமையச் சென்னித் தெய்வம் பரசிக்
கைவினை முற்றிய தெய்வப் படிமத்து'

என்று சிலப்பதிகாரத்திலும்; மேலும் கடைச்சங்கப் புலவர்களில் ஒருவராகிய சீத்தலைச் சாத்தனார் என்பார் தனது மணிமேகலை என்ற காப்பியத்தில்,

''அணியிழை யந்தரம் ஆறா எழுந்து
தணியாக் காதற் றாய்கண்ண கியையும்
கொடைகெழு தாதை கோவலன்
றன்னையும்
கடவு ளெழுதிய படிமங் காணிய''

'சுடுமண் ஓங்கிய நெடுநிலை மனைதொறும்
மையறு படிவத்து வானவர் முதலா''

என்ற அடியிலும், தெய்வ வடிவத்தைக் குறிக்கப் 'படிமம்' 'படிவம்' என்ற சொற்களைக் கையாளுவதைக் காண்கின்றோம்.

கண்ணுக்கும் கருத்திற்கும் அகப்படாமல் அவற்றைக் கடந்து நிற்கும் பேரின்பப் பொருளின் பேரழகை அகக்கண்களில் கண்டு, அவ்வுணர்வின் பிரதியாகக் கடவுட் படிமங்கள் அமைக்கப்படுகின்றன. கண்ணகியின் புற அழகை விடுத்து அகஅழகையே மனத்திரையில் கண்டு, அவளது இனிய வடிவத்தைப் படிமம் என்றழைத்து; தெய்வத் தனிமையை இளங்கோவடிகள் அதில் ஏற்றிக் காட்டுகிறார். இன்று நாம் காணும் புத்த படிமத்தின் வடிவழகு புத்தரின் இயற்கையான புற அழகு அல்ல. அஃது யாதெனில், புத்தர் தம் 'அகவழகின் புறத்தோற்றமே'. எனவே உருவமான பொருளின் புறஅழகை விடுத்து அதன் அக அழகைப் புறத்தோற்றத்தாலும் சித்தரித்துக் காட்டுவது படிமக்கலையின் சீரிய பணியாகும். இது, தமிழகக் கலைகளின் பொதுவான; சிறப்பான மரபாகும் என்றால் மிகையாகாது.

## சிற்பக்கலை மரபு :

தமிழகச் சிற்பக்கலை மரபின் சிறப்பியல்புகள் பலப்பல. அவற்றுள் குறிப்பிடத்தக்க ஒரு சிலவற்றை இங்கு நினைவுகூர்வோம்.

உணர்வின் பிரதி பிம்பமே உண்மைக்கலை யாகும் என்ற கருத்து, சிற்பிகளின் உள்ளத்தில் நிலையாகப் பதிந்துவிட்டதனால், இயற்கைக் காட்சிகளையும் இயற்கை வடிவங்களையும் 'பிரதி' செய்வதை விடுத்து முற்றிலும் உணர்வு மயமான மனக்காட்சிகளையும், கருத்துக்களை யும், உண்மைகளையும், ஆராய்ச்சி முடிவுகளை யும் சித்தரித்துக் காட்டுவதிலேயே தொன்று தொட்டுத் தமிழகச் சிற்பிகள் நாட்டம் கொள் வாராயினர். ஆனால், அதே நேரத்தில் இயற்கையை அறவே புறக்கணித்து முற்றிலும் புதுமையான வடிவங்களையும் காட்சிகளையும் அவர்கள் படைக்கவில்லை. அதற்கு மாறாக, இயற்கையோடு நெருங்கி, உறவாடி, அதோடு இசைந்து, அதன் இயக்கங்களையும், சிறப் பியல்புகளையும் நன்கு ஆராய்ந்து, உணர்ந்து அவற்றைத் துணைக் கருவிகளாகக் கொண்டு அகத்தே தோன்றிய உணர்ச்சிகளை அழகு மிளிரப் படைத்துக் காட்டியுள்ளார்கள், நமது தமிழகச் சிற்பிகள் என்றால் மிகையான கூற் றாகாது.

வேறெந்த நாட்டுச் சிற்பக்கலை மரபிலும் காண முடியாத ஒரு சிறப்பியல்பு நமது மர பிற்கு உண்டு. சிற்ப வடிவங்கள் எதுவாயினும் சரி, இயற்கை அமைதியில் காணப்படுவதில்லை. சிற்ப வடிவங்கள் நின்றாலும், அமர்ந்தாலும் கிடந்தாலும், எக்கருத்தை உணர்த்துவதானா லும் அவை ஆடற்கலைப்பாணியிலேயே அமைக் கப்படுகின்றன. ஆடற்கலை ஒரு பண்பட்ட கலை. உள்ளத்தில் தோன்றும் இயல்பான உணர்ச்சிகளை மிகத் தெளிவாகவும், சுவை யோடும், நெஞ்சிலே நிலைத்து நிற்கும் வகை யிலும் ஆடிக்காட்டும் கலை. இதனை முக பாவனைகளாலும், உடல் ஒடிவு, வளைவு, குழைவு, சுளிப்பு முதலிய அமைதிகளாலும் பிறவகை அபிநயங்களினாலும் சித்தரிக்கின் கிறது. ஆடற்கலை வாயிலாகக் கருத்துக்கள் சுவையோடும் முறையோடும் உணர்த்தப்படு வதை உற்று நோக்கித் தனது வடிவத்திலும் இது இடம் பெற வேண்டுமென்று முதன் முதலில் எச் சிற்பி உணர்ந்து சிற்பக்கலையில் இதனை ஏற்றினானோ அவன் உலகக் கலை மேதைகளில் ஒருவனாகக் கருதப்பட வேண்டு மென்றால், கலை உள்ளம் பெற்றோர் இதனை மறுக்கமாட்டார்கள். நமது சிற்ப வடிவங்கள் ஆடற்கலைப் பண்பினைப் பெற்றிருப்பதால் இவை தோற்றுவிக்கும் கலையின்பத்திற்கு எல்லையே இல்லை.

## சிற்பங்கள் :

நாட்டிய இலக்கணத்திற்கு ஏற்றவாறு சிற்பங்கள் இயற்றப்பட்டிருப்பதாகத்தோற்றத் தளவில் தெரிவதாயிருப்பினும் நாட்டிய இலக் கணத்தின் ஜீவனை உணர்ந்து கொண்ட சிற்பி, தனது தேவைக்கேற்றவாறும், இடத்திற்கேற்ற வாறும், செய்யப்படும் பொருளுக்கேற்றவாறும் உணர்த்தப்படும் கருத்துக்கேற்றவாறும், சிறு சிறு மாற்றங்களைக் கற்பித்துத் தனது படைப் புக்களை உணர்ச்சி மயமாக்குகிறான். சிற்பி யின் மனம் எவ்வெவ்வாறு வளைகிறதோ, சுளிகிறதோ, நெளிகிறதோ, குறைகிறதோ அவ் வாறெல்லாம் அவனது வடிவங்கள் உருவெடுக் கின்றன. ஆடற்கலை வல்லுநர்கள் காட்ட முடியாத முகபாவங்களையும் உள்ளுணர்வு களையும் அபிநயச் சிறப்புக்களையும் மிகத் தேர்ந்த முறையில் சிற்பி அமைத்துவிட முடி கிறது. அவன் கருத்தழகையே வலியுறுத்துவ தால் மனித உடலுக்குரிய உடற்கூறுகளினால் விளையும் இடையூறுகளை வெல்ல வேண்டிய நிலை அவனுக்கு ஏற்படுகிறது.

எடுத்துக்காட்டாக, இறைவன் இப் பூவுலகைப் படைத்து, அதில் கோடி இன்பங் களை வைத்து நம்மிடம் வழங்கியிருக்கிறான். இஃது எக்காரணம் பற்றியென்று ஆராய்ந்த அறிஞர், இதனை நம்மீது இறைவன் கொண்ட கருணையினாலும் அன்பினாலும் என்று கூறு வர். எனவே சிற்பியானவன் இறைவனைக் கருணை வடிவமாகவும், அன்பின் உருவமாக வும் உணர்கிறான். கருணைக்கும் அன்பிற்கும் வடிவம் தர வேண்டிய பணி அவனைச் சாரு கிறது. கருணை, அன்பு ஆகிய குணங்களே உருத்தரிக்குமானால், இவ்வுரு எங்ஙனம் இருத் தல் வேண்டும் என்பதை உள்ளூர ஆராய்ந்து, சிந்தித்து வடிவம் அமைக்கும்பொழுது மனித உடற்கூறுகள் பல இடையூறுகளைத் தோற்று விப்பதைக் காணுகிறான். கருணையும் அன்பும் மலர் போன்ற மென்மையான குணங்கள், நெஞ்சை உருக்கும் தன்மையன. ஆன்மாவின் இன்ப வடிவத்தை உணர்த்துவன. இவற்றை வடிவத்திலே தெளிவாகக் காட்டுதற்கு மனித உடலில் நரம்புகளும் எலும்புகளும் தசைகளின் மேடு பள்ளங்களும் தடைகளாக நிற்கின்றன. இவை உடலின் விலங்குத் தன்மையைக் காட் டும் விறைப்புடையன. ஆகவே இவற்றைக் கட்டுப்படுத்தி, மறைத்து அளவோடு உருண்டு, திரண்ட சதைப்பற்றோடே கூடிய, உடலமைப் பில் வைத்துக் காட்டினால்தான் தன் கருத்து விளக்கம் பெறும் என்ற முடிவுக்குச் சிற்பி வருகிறான். முகத்திலே மட்டும் கருணை அன்பு ஆகிய பண்புகள் தடையின்றி உடலெல் லாம் வழிந்தோடுமாறு காட்ட விழைகிறான். எனவே இயற்கை உடலமைப்பை, உடற் கூறுகளைத் தன் வயமாக்கி இன்னும் சொல் லப் போனால் ; அடிமைப்படுத்திக் கருணை, அன்பு, சாந்தம், சிருங்காரம், மென்மைமுழுமை ஆகிய பண்புகள் பொருந்தியதாக வடிவத்தை இயற்றி விடுகிறான். இதற்குச் சான்றாகப் புத்தர் படிமங்களும், திருமாலின் வடிவங் களும், சிவமூர்த்தங்களும், தேவியாரின் இனிய வடிவங்களும் அமையப் பெற்றிருப்பதைக் கூற லாம். படிம உடற் கூறுகளும் படிம அமைதி களும் இதுபோன்ற காரணங்களைப் பற்றி இயற்கை உடற்கூறுகளினின்றும் இயற்கை நாட்டிய அமைதியினின்றும் வேறுபடுகின்றன என்பதை உணர்தல் வேண்டும்.

சிற்பக் கலையில் மனித வடிவங்களை விடுத்துப் பல்வேறு விலங்குகளின் வடிவங் களையும் காணுகிறோம். வீரவுணர்ச்சிக்கு உவமையாக நாம் எடுத்துக் காட்டுவது சிங்கம் அல்லது புலியேயாகும். அசோகனின் சிம்மத் தூண்களும், சோழனின் புலிக்கொடியும், பல்ல

வரின் சிம்மக் கால்களும் இதை நினைப்பூட்டு கின்றன. விலங்கினங்களில் சிற்பக் கலைஞர் களின் கவனத்தையும் ஆர்வத்தையும் ஈர்த்தது சிம்ம வடிவமே.

சிற்ப உலகிலே நடமாடும் சிம்மவடிவம் இயற்கைச் சிம்ம வடிவத்தை ஏதோ ஓரளவு ஒத்திருப்பினும் பெருமளவு மாறுபட்டிருப் பதையே காண்கிறோம். இவ்வடிவத்தைப் பார்த்துச் சிம்மம் என்று உறுதியாகக் கூறு வோர் மிகக் குறைவு. இதனைக் கற்பனை வடிவம் என்று புறக்கணிப்போர் பலர் உண்டு. உண்மை யாதெனில், சிற்பியானவன் இவ் வடிவத்தில் உடற் சாயலைக் காட்டி அதற்கே யுரிய சிறப்பியல்புகளை வலியுறுத்திக் காட்டி யுள்ளான். சிம்மம், உடலுறுதிமிக்கது; வல் லமை வாய்ந்தது; வேகமாய்ப் பாய்வது; பார்ப் போர் உள்ளத்தில் பய உணர்ச்சியைக் கிளறு வது; வீரம் மிக்கது. எனவே, வீரத்திற்குச் சின்னமான சிம்மத்தின் முழுவடிவத்தை அகத் திலே கொண்டு அதன் சிறப்பியல்புகளைத் துலக்கமாகவும், நாட்டிய அமைதியிலும்காட்டு கிறான். இயற்றிய வடிவம் சிம்மத்தையும் நினைப்பூட்ட வேண்டும்; சிம்மத்தின் தன்மை களையும் பிரதிபலிக்க வேண்டும்; எனவே முறிந்த புருவமும், உருண்டு மிரட்டும் கண் களும், இளித்த வாயும், கோரைப் பற்களும், மடித்த உதடும், சுருக்கிய நுதலும் முகத்திலே முறைபட அமைத்து, உடல் உறுதிப்பாட்டி னைத் திரண்டு பருத்த சதைப்பற்றினாலும், புடைத்த நரம்புகளினாலும், வீரச் சுவைமிளிர இயற்றுகிறான். வீரத்தையும் பய உணர்ச்சி யையும் வலியுறுத்த வேண்டியிருப்பதால், ''சிம் மத்தின் கால்களில் புலி நகங்களை வைத்துக் காட்டுக'' என ஒரு சிற்ப நூல் சுட்டிக் காட்டு கிறது. இத்தகைய வீர வடிவத்தில் எத்தனை அழகுதான் காட்டப்பட்டுள்ளது? சோகத்திலும் கோபத்திலும், பயத்திலும் இன்னும் பல்வேறு உணர்ச்சிகளிலும் புற அழகையும் சுவைபட அமைத்துக் காட்டிய நமது சிற்ப மரபை என் னென்று புகழ்வது ?

## சிற்ப வேலைப்பாடுகள் :

சிற்ப அலங்கார வேலைப்பாடுகளில் பலவிதமான இலைகள், காய்கள், பூக்கள், கொடிகள் ஆகியவற்றைக் காண்கிறோம். இயற் கையில் காணப்படும் செடி கொடிகளைக் கூட, உள்ளதை உள்ளபடியே நம்மரபில் காட்டுவ தில்லை. அதற்கு மாறாகச் செடி கொடிகளின் நெளிவு, சுளிவு, விரிப்பு, மடிப்பு, விரிப்பு, கோவை, அடுக்கு மினுமினுப்பு, மென்மை, இயல்பான தன்மை, அதன் இயக்கங்கள் இவற்றையெல்லாம் நன்கு ஆராய்ந்துஉணர்ந்து அவற்றை மனங்கவர் பாவனைகளில் சித்தரிக் கப்பட்டிருப்பதைக் காணலாம் இத்துறையில் சிற்பியின் கற்பனை எவ்வளவு வளமாக இருந்தது என்பதை இவ்வடிவங்களை நேரில் பார்த்தே சுவைக்க முடியும். இவ்வடிவங் களைக் 'கருக்குகள்' என்றும், 'பாளை' என்றும் தமிழகச் சிற்பிகள் குறிப்பிடுவார்கள். தமிழகச் சிற்ப மரபின் போற்றுதற்குரிய சிறப்பியல்பு களில் இதுவும் ஒன்றாகும். இது மட்டுமன்று, இயற்கையில் காணும் பறவை இனங்களில் சிற்ப வடிவங்கள், சிற்பியின் கரங்களிலே தனித் தன்மை வாய்ந்தனவாக வடிவெடுக்கின்றன.

நமது சிற்பிகள் தங்கள் சிற்ப வடிவங் களில் உடல் அழகைக் காட்டிய பாங்கே தனி. ஆடைகளை உடலோடு ஒட்டியவாறுஅமைத்து, ஆடையின் எல்லையைமட்டும் உருட்டிக்காட்டி, உடல் திரட்சியை, அதன் கவர்ச்சியை நன்கு வெளிப்படுத்துகிறார்கள். கலைத்துறையில் இது ஒரு மகத்தான சாதனை. அதுமட்டுமல்ல, உடலுறுப்புகளுக்கு ஏற்றவாறு பொருத்தமான இடங்களில் கண்கவர் அணிகளைப்பூட்டி அழகு சேர்த்த முறையும் பாராட்டுதற்குரியதாகும். இவற்றுக்கெல்லாம் மேலாக, சிற்ப வடிவங் களின் தலைக் கோலங்களிற்றான் எத்தனை எத்தனை மனங்கவர் வகைகள்?

## நம்நாட்டு-மேலைநாட்டுச் சிற்பங்கள் :

நமது நாட்டுச் சிற்ப வடிவங்களுக்கும், மேலை நாட்டுச் சிற்ப வடிவங்களுக்கும் நிரம்ப வேறுபாடு உண்டு. நமது சிற்ப வடிவத்தை ஒரு சிலர் தவறாகக் கருதுகிறார்கள். மனித உடலின் வெவ்வேறு உறுப்புகளின் அழகை வெவ்வேறு மனித வடிவங்களில் பார்த்து அவ் வாறு தனித்தனியே கண்டு சுவைத்த உறுப்புக் களையெல்லாம் ஒன்று சேர்த்துக் கற்பனை யாக ஒரு முழு வடிவத்தை உருவாக்குவதாக நினைக்கிறார்கள். இஃது ஒரு தவறான கருத் தாகும். மேலைநாட்டுச் சிற்ப வடிவங்கள் மனித உடல் கூறுகளை நூற்றுக்கு நூறுசெம் மையாகக் காட்டி மனித அழகின் புறத்தோற் றத்தையே வலியுறுத்துகின்றன. பெண் தெய் வம் ஒன்றின் வடிவத்தை மிக அழகிய ஒரு பெண்ணின் வடிவமாகவே காட்டியுள்ளார்கள். இவ்வழகில் கூடுதல் குறைவு காணப்படின் அவர்களின் கண்களை அவை உறுத்துகின்றன. எனவே புற அழகையே காட்ட முயலும் பொழுது அதற்கு ஓர் எல்லையும் தோன்றிவிடு கின்றது.

## கலைத்திறன் :

நமது சிற்ப மரபு காவிய மரபை ஒட்டியது. ஒவ்வோர் ஆண், பெண், வடிவத்தையும் ஒவ் வொரு காவியம் என்றே கலாரசிகர்கள் கூறு வார்கள். எடுத்துக் காட்டாக, ஒரு கவிஞன் பெண் ஒருத்தியின் இனிய வடிவத்தைக்காணும் பொழுது அத்தோற்றம் அவனது உள்ளத்தில் இன்ப உணர்வைத் தோற்றுவிக்கிறது. அதனைப் பிறர் உள்ளத்தில் ஏற்றிக் காட்டுவதற்குப் பொருத்தமான சொற்களைக் கொண்டும், உவமை அணிகளைக் கொண்டும் இசைத்துக் காட்டுகிறான். இதே முறையில் சிற்பியும் தம் உணர்வில் நிற்கும் வடிவத்தைக் கல்லிலேஏற்றி அதே உவமை அணிகளை அவர் வடிக்கும் வடி வத்திலும் பொருத்தி, தான் அருவமான உள் ளத்தில் கண்ட வடிவத்திற்கு உருவம் அளிக் கிறான். கவிஞனின் உள்ளத்தில் தோன்றியது ''அருவம்''. இதற்கு அவன் கொடுப்பது 'சொல் வடிவம்'. சிற்பியின் உள்ளத்தில் தோன்றியது 'அருவம்'. இதற்கு அவன்கொடுப்

பது 'கல் வடிவம்'. இவ்விருவரும் தங்கள் உள்ளத்திலே கண்டு இன்புற்ற பெண் வடிவத்தின் முகத்தை முழு மதியிலும், நெற்றியைப் பிறையிலும், புருவத்தைக் கண்களை மலர்களிலும், கூந்தலை மயில் தோகையிலும், இடையைத் துடியிலும், தொடையை யானையின் துதிக்கையிலும், இங்ஙனம் ஒவ்வோர் உறுப்பையும் ஒவ்வோர் இயற்கை வடிவத்திலே காணுகிறார்கள். இவற்றைச் சிற்ப வடிவத்தில் சிறப்பாக அமைத்துக் காட்டுவதே நம் நாட்டுச் சிற்பக்கலை மரபின் ஒப்பற்ற செயலாகும். இங்ஙனம் ஒவ்வொருவரும் வெவ்வேறு வித இயற்கைப் பொருள்களிலும் காணவும் கூடும். இதனால் வடிவங்களும் வெவ்வேறாக மாறும் தன்மை பெறுகின்றன. எனவே நமது கலை மரபிற்கு எல்லையென்பது இல்லை. கற்பனை விரியும் தன்மையுடையது. மேலும் தத்துவக் கருத்துக்களுக்கும், சமய உணர்வுகளுக்கும் வடிவம் காண்பதில் சிற்பக்கலை சிறந்த பணி செய்கிறது. இக்கருத்துக்கள் எல்லையின்றி விரிந்து உயர்ந்து செல்லத்தக்கவை. இத்துறையைச் சிற்பக்கலை பற்றிக் கொண்டால் இத்துறை விரிவும் உயர்வும் பெறுவதாயிற்று. பல நூற்றாண்டுகளையும் கடந்து நமது சிற்பக் கலை வளர்ந்து ஓங்கியதன் இரகசியம் இஃதே.

## முடிவுரை :

இத்தகைய அரும்பெரும் சிறப்பியல்புகள் வாய்ந்த நமது சிற்பக்கலை, மக்கள் கலையாகும். எவ்வாறெனில் சமுதாயத்தின் வாழ்க்கை நெறிகளையும், உயர்ந்த நோக்கங்களையும், பண்பாட்டின் சிறப்பையும், இக்கலை பிரதிபலிக்கிறது. தெய்விக வடிவங்களிலும், அவற்றின் திருவிளையாடற் காட்சிகளிலும் இப்பூவுலகின் இலட்சிய நாயக, நாயகிகளையே சிற்பிகள் சித்தரிக்கிறார்கள். தனிப்பட்ட தங்கள் உணர்ச்சிகளை மட்டுமல்லாது, சமுதாயத்தின் உணர்ச்சிகளையும், உள்ளக் கிடக்கைகளையும் சிற்பிகள் சமைப்பதால், பண்டைப் பெருமக்கள் சிற்பக் கலையைத் தங்கள் கலையாகவே கருதி ஆர்வத்தோடு பேணி வளர்த்தனர்.

---

# 'தேவாரம்' என்பதன் பொருள்

'தேவரம்' என்பது சைவசமய ஆசிரியர்கள் ஆகிய அப்பர், சம்பந்தர், சுந்தரர் என்னும் மூவரும் பாடிய பாடல்களைக் குறிக்கும். இச்சொற்களுக்குப் பலவகைகளிற் பொருள் கூறலாம்.

(அ) தே வாரம். தே-தெய்வம். வாரம்-அன்பு. தெய்வத்தினிடத்து அன்பை விளைவிக்கும் பாடல்கள்.

(ஆ) தம்மை ஓதுபவர்க்குத் தெய்வத்தின் அன்பு, அருள் என்பவற்றை எளிதிற் கிடைக்கும்படி செய்யும் தன்மை வாய்ந்த பாடல்கள்.

(இ) தெய்வத் தன்மை பொருந்திய சிறந்த அன்பின் பயனாகப் பொங்கி எழுந்து வெளிப்பட்டருளிய பாடல்கள்.

(ஈ) தே வாரம். வாரம்-இசை இயக்கம் நான்கனுள் ஒன்று. எனவே தெய்வம் சுட்டிய இசைத்திறன் (வாரம்) அமைந்த பாடல்கள்.

(உ) தே வாரம். வாரம்-உரிமை. தெய்வத்திற்கே உரிமையுடைய பாடல்கள். அதாவது பிற புலவர்கள் பலர் போரும், காதலும் போன்ற பொருள்களைக் குறித்துப் பாடிப் போந்த பாடல்களைப் போல் அல்லாமல், தெய்வத்தினையே தமக்குரிய குறிக்கோட் பொருளாகக் கொண்டு வழுத்துதற்காக வெளிப்பட்ட படைல்கள்.

(ஊ) தே ஆரம். ஆரம்-மாலை. தெய்வத்திற்கு மாலைபோல விளங்கும் சிறந்த பாடல்கள்

(எ) பூமாலை பொன்மாலை மணிமாலை முதலிய மாலைகள் போல்வனவற்றினின்று வேறுபட்டு உயர்ந்து, தெய்வத்தன்மை பொலியும் சிறந்த பாமாலைகள்.

திருப்போரூர்ச் சிதம்பர சுவாமிகள் தம்முடைய உரைநூல்களில், 'தேவாரம்' என்பதைத் திருநாவுக்கரசர் பாடல்களுக்கே யுரிய சிறப்புப் பெயராக வழங்குவர் திருஞானசம்பந்தர் பாடலைத் ''திருக்கடைக்காப்பு' என்றும், சுந்தரர் பாடல்களைத் 'திருப்பாட்டு' என்றும் குறிப்பிடுவது அவர் வழக்கம்.

—ஆசிரியர்.

# சிவஞானபோதத் தெளிபொருட் பதவுரை

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

( சிறப்பு அதிகாரம் : சாதன இயல் )

சிவஞானபோதச் சூத்திரம் பன்னிரண்டனுள் முதல் ஆறு சூத்திரம் பொது அதிகாரமும், பின் ஆறு சூத்திரம் சிறப்பு அதிகாரமுமாகும். பொதுஅதிகாரச் சூத்திரம் ஆறனுள் முன் மூன்றும் பிரமாண இயலும், பின்மூன்றும் இலக்கண இயலும் ஆம். சிறப்பு அதிகாரச் சூத்திரம் முன்மூன்றும் சாதன இயலும், பின் மூன்றும் பயனியலும் ஆகும். பொது அதிகாரம், முப்பொருளின் இயல்பைப் பிரமாணத்தாலும், இலக்கணத்தாலும் உணர்த்துவது. சிறப்பு அதிகாரம், அதனைச் சாதனத்தாலும் பயனாலும் உணர்த்துவது. சிறப்பியல்பு, பொதுவியல்புபோல் இடையே நீங்குதலின்றி, எக்காலத்தும் ஒரு தன்மைத்தாய் இருத்தலினால், அதனைக்கூறும் சிறப்பு அதிகாரம், உண்மை அதிகாரம் எனப்படும்.

ஆராய்ச்சி அறிவால் அறிவது பொது இயல்பும், அனுபவ அறிவால் அறிவது சிறப்பு இயல்புமாம். அன்றியும் பொதுவியல்பு தூல நிலையும், சிறப்புஇயல்பு சூக்குமநிலையும் ஆகும். இவற்றை முறையே தடத்த லட்சணம், சொரூப லட்சணம் என்றும் கூறுவர். பதிக்குப் பொதுவியல்பு உயிர்களோடு அத்துவிதமாய்க் கலந்திருத்தல்; சிறப்பு இயல்பு சத்துச் சித்து ஆனந்தமாய் நிற்றல். பசுவுக்குப் பொதுவியல்பு கருவி கரணங்களோடு கூடியிருத்தல்; சிறப்பு இயல்பு அவற்றினின்றும் நீங்கித் தன்னோடு உடனாய்க் கலந்து நிற்கும் சிவமாகி நிற்றல். பாசத்துக்குப் பொதுஇயல்பு காரிய வடிவமாகி நிற்றல்; சிறப்பு இயல்பு காரண நிலையில் நிற்றல்.

பொது அதிகாரத்தில், பிரமாண இயலினால், பதி பசு பாசம் என்னும் முப்பொருள்களின் உண்மை நிறுவப் பெற்றது. இலக்கண இயலினால், முப்பொருள்களின் இலக்கணம் கூறப்பட்டது.

உண்மை அதிகாரம் ஆகிய இப்பகுதியின், சாதன இயலினால், அம் முப்பொருள்களுள்ளும் விலக்க வேண்டியதை விலக்கி, அதனால் வரும் துன்பத்தினின்று நீங்குதலும், கொள்ளத் தக்கதைக் கொண்டு அதனால் வரும் இன்பத்தை அடைதலும் ஆகிய பயன்பெறுவதற்கு ஏதுவாகிய சாதனம் செய்யுமாறு கூறப்படுகின்றது. பயனியலால், பாசநீக்கமும், சிவப்பேறுமாகிய பயனின் இயல்பு கூறப்படும்.

இவ் ஏழாம் சூத்திரம், உண்மை அதிகாரத்துள் சாதன இயலின் முதற்சூத்திரமாகும். சாதனம் செய்த பின்னரே பயன் உண்டாகும் ஆதலினால், இவ்வதிகாரத்தில் சாதன இயல் முன்னும், பயனியல் பின்னுமாக அமைக்கப் பெற்றன.

பொது அதிகாரத்துள் இலக்கண இயலாகிய ஆறாம் சூத்திரத்தால் 'உணர்உரு அசத்து' எனவும், 'இருதிறன் அல்லது சிவசத்து' எனவும் கூறி, அசத்தின் இலக்கணத்தையும், சிவசத்தின் இலக்கணத்தையும் வரை செய்து உணர்த்திய ஆசிரியர், இது அசத்து-இது சிவசத்து என்று அறிகின்ற பொருள், அவ்விரண்டனுள் ஒன்றோ வேறோ என்னும் ஐயம் நிகழாமை வேண்டி, அச்சூத்திரத்திற்குப் புறனாக, அடுத்த உண்மையதிகாரத்துச் சாதன இயலாகிய இவ்ஏழாம் சூத்திரத்தில், சத்து அசத்து என்னும் அவ்விரண்டையும் அறிவதும், அவ்விரண்டின் வேறாவதும், சதசத்து எனப்படுவதும் ஆகிய உயிரின் இயல்பை உணர்த்தும் முகத்தால், சாதனம் செய்து பயன் பெறுவதற்குரிய சாதகனின் இயல்பை உணர்த்துகின்றார், ஆசிரியர் மெய்கண்டார்!

## ஏழாம் சூத்திரம்

### ஆன்மாவின் சிறப்பிலக்கணம்

( சாதகன் இயல்பு )

யாவையும் சூனியம், சத்துஎதிர் ஆகலின்,
சத்தே யறியாது; அசத்து இலது அறியாது;
இருதிறன் அறிவுளது, இரண்டலா ஆன்மா.

பதவுரை :

சத்துஎதிர்—சத்தாகிய சிவத்தின்முன்,

யாவையும்—(அசத்தாகிய உலகப் பொருள்கள்) எல்லாம்,

சூனியம்—(விளங்கித் தோன்றாத) பாழே யாகும்;

ஆகலின்—ஆதலினால்,

சத்து அறியாது—சத்தாகிய சிவம் உலகத்தை அறிந்து அனுபவியாது;

அசத்து—அசத்தாகிய உலகப் பொருள்கள்,

இலது ஆகலின்—அறிவில்லாதவை ஆதலால்,

அறியா—சிவத்தை யறிந்து அனுபவிக்கமாட்டா.

இரண்டுஅலா ஆன்மா—சத்தும் அசத்தும் ஆகிய இரண்டும் அல்லாமல் 'சதசத்து' என உள்ள உயிரானது,

இருதிறன்—சத்தாகிய சிவம், அசத்தாகிய உலகம் ஆகிய இரண்டையும்,

அறிவு உளது—அறியுந்தன்மை யுடையது.

குறிப்பு:

முப்பொருள்களுள் பதியாகிய சிவமும், பாசம் ஆகிய உலகமும் ஆகிய இரண்டும், ஒன்றினை ஒன்று அறியமாட்டாது என்று விலக்கவே, எஞ்சி நிற்கும் பசுவாகிய உயிரே, அவ்விரண்டினையும் அறியும் என்று பாரிசேட அளவையால் உணரப்பெறும் என்பது, இச் சூத்திரத்தின் கருத்து:

சூனியம்—விளங்கித் தோன்றாத பாழ்ம் பொருள். சத்து—சிவம். அசத்து-உலகம். இலது-அறிவு இல்லாதது. இருதிறன்-சிவம், உலகம் ஆகிய இரண்டும். அறிவு உளது-அறியும் தன்மை உடையது. இரண்டு அலா-இரண்டும் அல்லாத.

உயிர் சத்தாகவேனும், அசத்தாகவேனும் தனித்து நிற்றலின்றிச் சத்தோடு இயைந்து சத்தாகியும், அசத்தோடு கூடிநின்று அசத்தாகியும், சார்ந்தததன் வண்ணமாய் விளங்கி, சத்தாகிய சிவம்-அசத்தாகிய உலகம் என்னும் இரண்டினையும் அறிந்து வரும் தன்மைஉடையதாக இருப்பதால், ஆன்மாவைச் 'சதசத்து' என்று சான்றோர் கூறுவாராயினர். இதனையே, ''சத்து அசத்து அறிவது ஆன்மா; தான் சத்தும் அன்று, அசத்தும் அன்று; நித்தமாய்ச் சதசத்து ஆகி நின்றிடும் இரண்டின் பாலும்'' என்று அருள்நந்தி சிவனாரும், 'அசத்தைச் சத்துடன் நின்று நீக்கும் தன்மையால் சதசத்து ஆமே' என்று உமாபதி சிவனாரும் விளக்கினர்.

''இருதிறன் அறிவுளது இரண்டலா ஆன்மா'' என்றதனால், ஆன்மாவின் சிறப்பிலக்கணம் கூறப்பெற்றது. 'இருதிறன் அறிவு உளது' என்னும் இத்தொடரானது 'இருதிறனையும் அறியும் அறிவுளது' என இரண்டாம் வேற்றுமைத் தொகையாகவும்; 'இருதிறனால் விளங்கிய அறிவுளது' என மூன்றாம் வேற்றுமைத் தொகையாகவும்; 'இருதிறனிலும், உள்ள அறிவுளது' என ஏழாம் வேற்றுமைத் தொகையாகவும் பொருள்படும்.

## 7. முதல் அதிகரணம்

''ஈண்டுச் சத்தின் இடத்து அசத்துப் பிரகாசியாது ; மெய்யின் இடத்துப் பொய் அப்பிரகாசமாய் நிற்றலான் என்றது.''

( வெண்பா )

**அன்னியம்இல் லாமை அரற்குஒன்று உணர்வின்றாம்;**
**அன்னியம்இல் லான்அசத்தைக் காண்குவனேல்,—அன்னியமாக்**
**காணான்; அவன்முன் கதிர்முன் இருள்போல,**
**மாணா அசத்து, இன்மை மற்று.**

பதவுரை:

அன்னியம் இல்லாமை அரற்கு — (தன்னுள் வியாப்பியமான பசு பாசங்களோடு) வேற்றுமையின்றி உடனாய் நிற்றலையுடைய முதல்வனுக்கு,

உணர்வு ஒன்று இன்றுஆம்—சுட்டியறியக் கிடப்பது ஆகிய ஒரு பொருளும் இல்லை ஆதலால்,

அன்னியம் இல்லான் — (பசு பாசங்களோடு) வேற்றுமை இல்லாதவன் ஆகிய முதல்வன்,

அசத்தைக் காண்குவனேல்—அசத்துப் பொருள்களை அறியலுறுவான் ஆயின்,

அன்னியமாக் காணான்—(அறிந்தாங்கு அறிவதன்றி நம்மனோர் போல)வேறாகச் சுட்டியறிவான் அல்லன்;(ஏனெனில்),

கதிர்முன் இருள்போல — ஞாயிற்றின்முன்னே இருளைப்போன்று,

அவன்முன்—அம்முதல்வனின் முன்னிலையில்,

மாணா அசத்து—நன்மையில்லாத பிரபஞ்சம்,

இன்மை (ஆன்) — விளங்கி நிற்றல் இல்லை (ஆதலால்).

குறிப்பு:

ஞாயிற்றின்முன் இருள் முனைத்து விளங்கித் தோன்றாதவாறு போலச் சத்தாகிய சிவத்தின்முன் அசத்தாகிய பசு பாசங்கள் முனைத்துத் தோன்றா ஆதலானும், அசத்தாகிய பசு பாசங்களோடு, சிவம் வேற்றுமையின்றி உடனாய் நிற்றலானும், சிவத்திற்குச் சுட்டியறியக் கிடப்பது யாதொன்றும் இல்லை. சுட்டியறிவதாகிய ஏகதேச உணர்வு முற்றுணர்வைத் தடுப்பது ஆதலான், அஃது இல்லாமை சிவத்திற்கு மேம்பாடு ஆவதன்றி இழுக்காகாது.

சத்தாகிய சிவம் அசத்தாகிய பாசத்தை அறிந்து அனுபவியாது என்பது இவ்வெண்பாவின் கருத்து.

'மாணா அசத்து' என்புழி 'மாணா' என்பது பெயர்எச்ச எதிர்மறை. மாணாமை-வியாபக உணர்விற்கு விடயம் ஆகாமை. இன்மை-விளங்கித் தோன்றாமை. உணர்வு-சுட்டியறியக் கிடப்பது. கதிர்முன்-ஞாயிற்றின் முன்னே. கதிர்முன் இருள் என்றது, ஈண்டு முனைத்து நில்லாமை (விளங்கித் தோன்றாமை) மாத்திரைக்கு ஒருபுடை உவமையாகும்! 'முனைத்திடாது அசத்துச் சத்தின்முன், இருள் இரவி முன்போல்' என்பது சிவஞானசித்தியார். 'மற்று' அசை. இன்மை-இன்மையால்.

## 7. இரண்டாம் அதிகரணம்

''இனி அசத்தினுக்கு உணர்வின்று; அது தான் நிரூபிக்கில் இன்றாகலான் என்றது''

( வெண்பா )

**பேய்த்தேர்நீர் என்றுவரும் பேதைக்கு மற்றணைந்த**
**பேய்த்தேர் அசத்தாகும் பெற்றிமையின், —வாய்த்து அதனைக்**
**கண்டுணர்வார் இல்வழியிற் காணும் அசத்தின்மை**
**கண்டுணர்வார் இல்லதெனக் காண்**

பதவுரை :

பேய்த்தேர்—(பாலை நிலத்தின்கண் காணப்படுவதாகிய) கானல் நீரை,

நீர் என்று வரும்-அருந்துகின்ற நீர் என்றுகருதி உண்ண வருகின்ற,

பேதைக்கு—அறிவற்ற மடவோனுக்கு,

மற்று அணைந்த பேய்த்தேர்—(அதனை அடுத்த வழி) அவனால் அணையப்பட்ட அக்கானல் நீர்,

அசத்து ஆகும் பெற்றிமையின் — நீராதல் இன்றிப்பொய்யாகும் தன்மைபோல,

வாய்த்து—(குருவின் அருளுரை) கிடைத்து,

அதனை—அவ்வசத்தின் இயல்பை,

கண்டுணர்வார் இல்வழியில்—ஆராய்ந்து அறிவார் இல்லாத இடத்தில்,

அசத்து இன்மை காணும்— (அறிவுள்ளதாய் மதிக்கப்படும்) சத்தாந் தன்மையே காணப்படும்.

கண்டுணர்வார்(க்கு) — குருவின் அருள்மொழி கிடைத்து அதன் இயல்பைஆராய்ந்து அறிய வல்லவர்க்கு,

இல்லது எனக் காண்—அவ்வசத்து அறிவு இல்லாததேயாகும் என்று அறிவாயாக.

குறிப்பு :

தொலைவில் காண்பவர்க்குப் பேய்த்தேர் (கானல் நீர்), அருந்துகின்ற நீர்போலத்தோன்றுமாயினும், அருகிற் சென்று கண்டவழி, அப்பேய்த்தேர் நீரன்மை தெளியப்படும். அதுபோல அருட்குரவனது பொருளுரை வாய்க்கப்பெறாதவர்க்கு, உலகமானது சத்துப் பொருள் போலத் தோன்றும் எனினும், அருட் குருவின் பொருளுரை வாய்க்கப் பெற்றவர்க்கு, உலகினது அசத்தாம் தன்மை தெள்ளிதின் உணரப்படும்.

பேய்த்தேர்—கானல்நீர், அசத்து ஆகும் பெற்றிமையின்—பொய்யாகும் தன்மையைப் போல; இன் உவமையுருபு. வாய்த்து-வாய்ப்ப, நேர்பட. அசத்து இன்மை-சத்தாம் தன்மை. கண்டுணர்வார்-கண்டு உணர்வார்க்கு, இல்லது-அறிவு இல்லாதது. காண்—அறிக.

## 7. மூன்றாம் அதிகரணம்

''இனி இருதிறன் இறிவுளது இரண்டலா ஆன்மா என்றது; இவ்விரண்டினையும் அறிவதாய், உபதேசியாய் நின்ற அவ்வறிவு, இரண்டன்பாலும் உளதாய் உள்ள அதுவே, அவ்வான்மாவாம் என்றது''.

( வெண்பா )

**அருவுருவம் தான்அறிதல் ஆய்இழைஆய் ஆன்மா,**
**அருவுருவம் அன்றாகும்; உண்மை—அருவுருவாய்த்**
**தோன்றி உடன் நில்லாது, தோன்றாதும் நில்லாது:**
**தோன்றல் மலர்மணம்போல் தொக்கு !**

பதவுரை :

ஆய்இழை—நுணுகிய நூல்களை,

ஆய் ஆன்மா—ஆராய்வதாகிய உயிரே,

அருவுருவம் (தான்) அறிதல்—சத்து அசத்து என்னும் இரண்டினையும் அறிவது (ஆதலான்),

அருவுருவம் அன்றாகும்—அவ்வுயிர் சத்து அசத்து என்னும் இரண்டுமின்றி அவற்றின் வேறாகும். (அற்றேல் அவ்விரண்டினையும் உயிர்க்குத் தன்னுண்மை அறியப்படுமோ படாதோ என வினவினார்க்கு, அறியப்படும் எனின், தன்னோடு உளப்பட மூன்றனையும் அறிவதென்னாது, அவ்விரண்டனையும் அறிவது என்றல் பொருந்தாது; அறியப்படாது எனின், அறியப்படாத பொருள் சூனியமாய் முடிந்து வழுவாம் எனின்),

உண்மை — அவ்வான்மாவின் உண்மைத் தன்மை,

அருவுருவாய்த் தோன்றி—அருவம் உருவம் ஆகிய அவ்விரண்டும்போல விளங்கித் தோன்றி,

உடன்நில்லாது-அவற்றோடு ஒப்ப நிற்பதும் அன்றாய்,

தோன்றாதும் நில்லாது-விளங்காமல் சூனியமாய் நிற்பதும் அன்றாய்,

மலர் மணம்போல்-மலரின்கண் மணமானது (அவ்விருவகையுமின்றி, அதன்கண் அடங்கித்) தோன்றுமாறு போல,

தொக்குத் தோன்றல்-சத்திலும் அசத்திலும் சார்ந்ததன்வண்ணமாய் அடங்கித் தோன்றுவதோர் இயல்பாம்.

நுணுகிய நூல்களை அறியும் ஆன்மாவே, அருவாகிய சத்தினையும், உருவாகிய அசத்தினையும் அறிவது ஆகலான், அஃது அவ்விரண்டும் அன்றி வேறாகும்; அவ்வான்மாவின் உண்மைத் தன்மை, சத்தும் அசத்தும்போல விளங்கித் தோன்றி அவற்றோடு ஒப்ப நிற்பதும் அன்றாய், விளங்காது சூனியமாய் நிற்பதுமன்றாய், மலரின்கண் வாசம் அவ்விருவகையுமன்றி, மலரின்கண் அடங்கித் தோன்றுமாறு போலச் சத்திலும் அசத்திலும் சார்ந்ததன் வண்ணமாய் அடங்கித் தோன்றுவதோர் இயல்பாகும். ஆகலான் ஆன்மாவின் உண்மைத் தன்மை, சத்து அசத்துப் போலத் தனித்து அறியப்படாமல், அவ்விரண்டினையும் அறியும் முகத்தான் அறியப்படுவதாகும் என்பது, இவ் வெண்பாவின் கருத்து.

அரு—சுட்டுணர்விற்கு விடயம் ஆகாத சத்து. உரு—சுட்டுணர்விற்கு விடயம் ஆகின்ற அசத்து. அறிதல்—அறிவதனால். இழை—நூல், சாத்திரம். 'ஆயிழையாய்' என்பதனைச் சிலர் மகடூஉ முன்னிலை ஆக்குவர், அது தவறு. ஆய் இழை ஆய் ஆன்மா—நுணுகிய நூல்களை ஆராய்கின்ற ஆன்மா. ஆய்தல்—நுணுகுதல். இழை-நூல், சாத்திரம். ஆய்-ஆராய்கின்ற. ஆன்மாவுக்கு அறியும் தன்மை உண்டு. ஆதலான் அன்றே, வேதாகமம் முதலியநூல்கள் உளவாயின என்று, அதனை வலியுறுத்துவார், 'ஆய் இழை ஆய் ஆன்மா' என உடம்பொடு புணர்த்து ஓதினார்! தொக்குத் தோன்றல்-சார்ந்ததன் வண்ணமாய் அடங்கித் தோன்றும் தன்மை. அருவுருவாய்-அருவுருக்கள் போல. 'ஆய்' என்புழி ஆக்கச்சொல், உவமைப்பொருள் குறித்து நின்றது. 'ஆள்வாரிலி மாடுஆவேனோ' என்னும் திருவாசகத்திற் போல. இச் செய்யுள் ஆன்மா, சத்து அசத்து என்னும் இரண்டினையும் அறியும் என்பதனை வலியுறுத்தி, ஆன்மாவானது அவ்விரண்டும் அல்லாமையை உணர்த்திற்று.

(வெண்பா)

**மயக்கமது உற்றும், மருந்தில் தெளிந்தும்,**
**பெயர்த்துணர்நீ சத்தாகாய்; பேசில்-அசத்தும்அலை;**
**நீஅறிந்து செய்வினைகள் நீயன்றி வேறு அசத்துத்**
**தான்அறிந்து துய்யாமை தான்.**

பதவுரை :

மயக்கமது உற்றும்—(அறிவை விளக்குதற்கு உரிய கருவியில்லாத இடத்து அறியமாட்டாமல்)மயக்கத்தைஅடைந்தும்,

மருந்தில் தெளிந்தும்—(உணவினால் பசி தீர்வது போல, மயக்க நோயை நீக்கும் மருந்தாகிய துணை உள்ள இடத்தில்) மயக்கம் தெளிந்து பொருள்களை உணர்ந்தும்,

பெயர்த்து உணர் நீ—(இங்ஙனம்) மாறிமாறி உணர்ந்து வருகின்ற உயிராகிய நீ,

பேசில்—சொல்லுமிடத்து,

சத்து—(துணைக்கருவிகளை வேண்டாமல் என்றும் ஒரேதன்மையில் இயல்பாக அறிகின்ற) சிவம் ஆகிய சத்துப் பொருள்,

ஆகாய்—ஆகமாட்டாய். (அற்றேல் அசத்தன் ஆவேன் போலும் எனின்),

நீ செய்வினைகள்—நீயே முன்பு செய்த வினையின் பயன்களை,

நீயன்றி—இப்பொழுது உன்னைத் தவிர,

வேறு அசத்து—நின்னின் வேறாக உள்ள அசத்தாகிய பாசம்,

அறிந்து துய்யாமை(ஆல்)—அறிந்து அனுபவிக்க மாட்டாமையால்,

அசத்தும்அ(ல்)லை-அவ்வசத்து ஆகிய பாசத்தோடு ஒப்ப, நீ அசத்துப் பொருளும் ஆவாய் அல்லை ;

வேறு—(துணை உள்ளவழி அறிதல், துணை இல்லாதவழி அறியாமை ஆகிய இரண்டும் உடையநீ, சத்து அசத்து ஆகிய அவ் இரண்டிற்கும்) வேறுபட்டவன் ஆவாய்.

குறிப்பு :

உயிரானது, அறிவை விளக்குவதற்குரிய கருவிகள் இல்லாத வழி மயக்கமுற்றும், அக் கருவிகள் உள்ளவழி தெளிவு பெற்றும், இங்ஙனம் மாறி மாறி உணர்ந்து வருவதனால், என்றும் ஒரே தன்மையில் இயல்பாக அறிந்து வரும் சிவசத்து ஆகாது. உயிரானது முன்பு தான் செய்த வினையின் பயன்களைத் தானே நுகர்வதன்றி, அறிவில்லாத அசத்து ஆகிய உலகம் அவற்றை நுகர்வதில்லையாதலின், வினைப்பயனை நுகரப் பெறுகின்ற உயிர், நுகராத அசத்து ஆகாது.

துணை உள்ளவழி அறிதல் ஒப்புமையாற் சத்தாதலும், துணைக்கருவி இல்லாதவழி, அறிவுநிகழாமை ஒப்புமையால் அசத்தாதலும் ஆகிய தன்மையுடைய சதசத்துஆகிய ஆன்மா,

சத்து அசத்து ஆகிய அவ்விரண்டினும் வேறு பட்டதாகும் என்பது, இவ்வெண்பாவின் கருத்து, ஆன்மா சதசத்து ஆகவே, இறைவன் சித்து, உலகம் அசித்து, உயிர் சித்தசித்து, சிவம் அதி சூக்கும சித்து, கட்டு நீங்கிய உயிர் சூக்கும சித்து, கட்டுற்ற உயிர் தூலசித்து, எனப்படும்.

''சத்துஇது என்று; அசத்துத்
தான்அறியாது; அசத்தைச்
சத்துஅறிந்து அகல வேண்டா;
அசத்துஇது சத்துஇது என்று, ஓர்
சத்து,இருள் ஒளி அலாக்கண்
தன்மையதாம்; அசத்தைச்
சத்துடன் நின்று நீக்கும்
தன்மையாற் சதசத்து ஆமே''

எனவரும் சிவப்பிரகாசச் செய்யுள், இங்குச் சிந்தித்து உணரற்பாலது.

(வெண்பா)

**மெய்ஞ்ஞானம் தன்னில் விளையாது, அசத்துஆதல்;**
**அஞ்ஞானம், உள்ளம் அணைதல்காண்;–மெய்ஞ்**
**ஞானம்**
**தானே உளஅன்றே, தண்கடல்நீர் உப்புப்போல்,**
**தான்ஏய் உளம்,உளவாய்த் தான்''**

பதவுரை :

அஞ்ஞானம்—மயக்கமானது,
மெய்ஞ்ஞானம் தன்னில்—ஒருபெற்றித்தாகிய மெய்யறிவு எனப்படும் சிவத்தின் முன்னர்,

அசத்து ஆதல்—(சூரியன் முன்னர் இருள் இல்லாதவாறு போல) நிற்பது இல்லையாதலால்,

விளையாது—உளதாவது இல்லை;

மெய்ஞ்ஞானம் உள அன்றேதானே—அச்சிவம் உள்ள அன்றே,

தான் ஏய் உளம் உளவா—தான் பொருந்துவதற்கு உரிமை உடைய உயிர்கள் உள்ளனவாக,

உள்ளம் அணைதல்—அவ்வுயிர்களைப் பாசங்கள் பற்றி நிற்றல்

தண்கடல்நீர் உப்புப்போல்காண்—குளிர்ந்த கடலின்கண் உளதாதல் இன்றி, அக்கடலிடத்தில் உள்ளதாகிய நீரைப் பற்றி நிற்கும் உப்புப் போல என்று அறிவாயாக.

குறிப்பு :

மேலே, 'இருதிறன் அறிவு' என்பதற்குக் கூறப்பெற்ற பொருள்கள் மூன்றனுள், இரு திறனிலும் உள்ள அறிவு என்பதனை வலியுறுத்த வேண்டி, உயிருக்கு உண்டு என்று கூறிய மயக்கம், அவ்வுயிரோடு சம்பந்தம் உடைய முதல்வனுக்கு உண்டாகாதோ? எனவும்; அம்மயக்கம்தான் உயிர்க்கு எக்காலத்தில் வந்தது எனவும் ஐயப்பாடு நிகழாதவண்ணம், இறைவனுக்கு மயக்கம் இல்லை என்பதும், இறைவன் என்று உண்டோ அன்றே உயிர்களும் உளவாயிருத்தலால், அம்மயக்கம் உயிர்களுக்கு அநாதியாகவே உள்ளதென்பதும், இதன்கண் விளக்கப்பட்டன.

மெய்ஞ்ஞானம்-சிவம். அசத்து-நிலைபேறு இல்லாதது. ஆதல்-ஆதலால். விளையாது—உள்ளது ஆகாது. ''மெய்ஞ்ஞானம் தன்னில், அஞ்ஞானம் விளையாது, அசத்து ஆதலால்'' எனக் கூட்டுக. உள்ளம்-உயிர்கள். உள்ளம் அணைதல்-உயிர்களைப் பற்றி நிற்றல். தான் ஏய்-தான் பொருந்துதற்கு உரிய; வினைத்தொகை. ''அன்றே உளம் உளவா, அஞ்ஞானம் உள்ளம் அணைதல் காண்'' என இயைக்க.

''தண்கடல் நீர் உப்புப் போல்'' என்றதனால், பதி பசு பாசம் என்னும் முப்பொருள்களும் வியாபக வியாப்பியங்களாய் நிற்குமாறு பெறப்பட்டது. கடலும் நீரும் உப்பும் அநாதியே உள்ள பொருள்கள்; அதுபோலப் பதியும் பசுவும் பாசமும் ஆகிய முப்பொருள்களும், அநாதி நித்தியப் பொருள்கள் என்பது பெறப்படும். கடல் சிவம், நீர் உயிர், உப்பு மலம். கடல் வியாபகம், நீர் வியாப்பியம், உப்பு வியாத்தி. உப்பு நீரைப்பற்றி நிற்குமேயன்றி, அஃது உளதாகும் இடவெளி ஆகிய கடலைப் பற்றாது. அதுபோல மலம் உயிர்களைப் பற்றுமே யன்றி, உயிர்களை வியாப்பியமாகக் கொண்டுள்ள சிவம் ஆகிய வியாபகப் பொருளைப் பற்றமாட்டாது என்பது உணர்தற்குரியது.

''சுத்தமெய்ஞ் ஞான மேனிச்
சோதிபால், அசத்து அஞ்ஞானம்
ஒத்துறா; குற்றம் எல்லாம்
உற்றிடும் உயிரின் கண்ணே;
சத்துஉள போதே வேறாம்
சதசத்தும், அசத்தும் எல்லாம்
வைத்திடும் அநாதி யாக;
வாரிநீர் லவணம் போலும்!''

எனவரும் சிவஞானசித்தியார் செய்யுள் (251), இங்கு அறிந்து இன்புறுதற்குரியது.

## எட்டாம் சூத்திரம்

### (ஞானத்தினை உணரும் முறை)

**ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்,**
**தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தவிட்டு,**
**அன்னியம் இன்மையின், அரன்கழல் செலுமே!**

பதவுரை :

தம்முதல்—(உயிரானது, தனக்குள் நின்று இதுவரையும் அறிவித்து வந்த) பரம்பொருள்,

தவத்தினில்—(தான் முன்னே செய்து வைத்த) புண்ணியத்தின் மிகுதியினால்,

குருவுமாய் — குருவடிவாகவும் எழுந்தருளி வந்து (சிவதீக்கை செய்து),

ஐம்புல வேடரின் வளர்ந்து — (அரசகுமாரன் ஆகிய நீ), ஐம்பொறிகள் ஆகிய வேடர்களுடன் சேர்ந்து பழகி வளர்ந்ததனால்,

அயர்ந்தனை—(அரசனின் மகன் என்னும் நின் பெருந்தகைமையை அறியாமல்) மயங்கித் துன்புற்றாய்,

எனஉணர்த்த—என்று அறிவிக்க,

விட்டு — (அவ்வளவிலேயே) ஐம்பொறிகள் ஆகிய வேடர்களை விட்டு நீங்கி,

அன்னியம் இன்மையின்—முதல்வனுக்கு வேறாகிய பொருளாக இல்லாமையினால் (பிரிப்பின்றி நிற்கும் தன்மையில் நிலைபெற்று),

அரன்கழல் செலும்—அம்முதல்வனது திருவடிகளை அணைந்து நிற்கும்.

குறிப்பு :

இச்சூத்திரத்தால் தவநலஞ்சான்ற ஆன்மாக்களுக்கு இறைவன் மானுடச் சட்டை தாங்கிக் குருவாய் எழுந்தருளிப் போந்து, அவைகள் புலன்களின்வழி மயங்கி நின்ற தன்மையினையும்; அவை சிவானந்தப் பெருஞ் செல்வம் துய்த்தற்குரிய சித்துப் பொருள் என்பதனையும் உணர்த்தி அருள்வான் என்றும்; அவ்விதம் உணர்த்திய வழி ஆன்மாக்கள் உலக முகப்படாமல் நீங்கி ஆண்டவனின் திருவடியை அடையும் என்றும்; கூறப்பட்டது. திருவருள் பெறுவதற்குக் குருவருள் மிகவும் இன்றியமையாததொன்று என்பது இந்நூற்பாவினால் உணர்த்தப் பெறுகின்றது. இச்சூத்திரம், ஐம்புலன்களை வேடர்கள் என்று உருவகம் செய்து அதற்கு ஏற்பத் தம்முதலை அரசன் என்றும், ஆன்மாவை அரசகுமாரன் என்றும் உருவகம் செய்யாமல் விடுத்ததனால், ஏகதேச உருவகம் எனப்படும்.

இதன்கண், ஆன்மா என்பது மேலைச் சூத்திரத்தினின்றும் வருவிக்கப்பட்டது. 'தவத்தினில் தம்முதல் குருவுமாய், ஐம்புல வேடரின் வளர்ந்து அயர்ந்தனை என உணர்த்தவிட்டு, அந்நியம் இன்மையின் அரன்கழல் செலும்' எனக் கூட்டுக. 'அயர்ந்தனை வளர்ந்து' என்பது 'வளர்ந்து (வளர்ந்ததனால்) அயர்ந்தனை' என மாற்றிப் பொருள் கொள்ளப்படும். இஃது 'ஈந்து (ஈந்ததனால்) புகழ் பெற்றான்' என்புழிப் போலக் காரணகாரியப் பொருட்டாய் நின்றது. 'வளர்ந்ததனால் அயர்ந்தனை' என்க. அயர்த்தல்-மறத்தல். 'குருவும்' என்ற உம்மை, இதுகாறும் உயிர்க்குயிராய் உள் நின்று உணர்த்தியதும் அன்றி என, இறந்தது தழுவியது; சிறப்புமாம். 'அன்னியமின்மையின்' என்பது 'அயரா அன்பின்' என்பதுபோல, அரன்கழல் செல்லுதற்கு ஏதுவாய் நின்றது. 'அன்னியம் இன்றாம் தன்மை உடையவன் ஆகிச்செல்லும்' என்பது கருத்து. 'அரன்' என்பது சுட்டுப் பெயர் மாத்திரையாய் நின்றது; 'கற்பாடு அளித்த கனமாமணிப் பூண்செய் தோளான்' என்னும் சிந்தாமணிச் செய்யுளிற் போல. அரன்-பசுக்களின் பாசங்களை அரிப்பவன். தம்முதல்-உயிர்களுக்கு முதல்வனாக, விளங்குபவன். விட்டு-ஐம்புல வேடர்களை விடுத்து நீங்கி. அந்நியம் இன்மையின்-வேறு அல்லாமையினால்.

''மன்னவன்தன் மகன்வேடர் இடத்தே தங்கி
வளர்ந்து, அவனை அறியாது மயங்கி நிற்பப்
பின்னவனும் என்மகன்நீ, என்றவரிற் பிரித்துப்
பெருமையொடும் தான்ஆக்கிப் பேணுமா போல்,
துன்னியஐம் புலவேடர் சுழலிற் பட்டுத்,
துணைவனையும் அறியாது துயருறும் தொல் உயிரை,
மன்னும்அருட் குருவாகி வந்து, அவரின் நீக்கி
மலம்அகற்றித், தான்ஆக்கி மலரடிக்கீழ் வைப்பன்''

எனவரும் சிவஞானசித்தியார் சுபக்கப் பாடல், இதனையே முற்றுருவகமாக விரித்தோதி விளக்குகின்றது.

## முதல் அதிகரணம்

''ஈண்டு இவ்வான்மாக்களுக்கு முற்செய் தவத்தான் ஞானம் நிகழும் என்றது; மேற் சரியை கிரியா யோகங்களைச் செய்துழி நன்னெறியாகிய ஞானத்தைக் காட்டி யல்லது மோட்சத்தைக் கொடா ஆகலான்''.

(வெண்பா)

தவஞ்செய்தார் என்றும் தவலோகம் சார்ந்து
பவம்செய்து பற்றறுப்பார் ஆகத்-தவஞ்செய்த
நற்சார்பில் வந்துதித்து ஞானத்தை நண்ணுதலைக்
கற்றார்சூழ் சொல்லுமாம் கண்டு

பதவுரை :

தவம்செய்தார்—சரியை கிரியை யோகம் எண்பவற்றைச் செய்தவர்கள்,

என்றும்—எக்காலத்தாயினும்,

தவலோகம் சார்ந்து—அவ்வத் தவப்பயன்களை எய்துதற்குரிய உலகத்தினை எய்தி,

பவம்செய்து—மீளவும் உலகத்தில் வந்து பிறத்தலைச் செய்து,

பற்றறுப்பார்ஆக—எஞ்சிய வினைப்பயன்களை நுகர்ந்து விடயப் பற்றறுத்தற் பொருட்டு,

தவஞ்செய்த—அவ்வாறு தவஞ்செய்துதோன்றிய,

நற்சார்பில் வந்துதித்து—நல்ல இனிய சூழலில் வந்து பிறந்து

(தவத்தால் விடயப் பற்று அறுத்து),

ஞானத்தை நண்ணுதலை — ஞானத்தினைத் தலைப்படுவர் என்பதனை,

கற்றார்சூழ்—வீட்டுநூலைக் கற்றுணர்ந்தவர்களின் ஆராய்ச்சி,

கண்டுசொல்லும் — அந்நூலின் கருத்தை உணர்ந்து விளக்கும்.

குறிப்பு :

தவமுதிர்ச்சி உடையாருக்கு அன்றி, ஞானத்தை நண்ணுதல்கூடாது. இவ்வுலகத்தில் உடம்பொடு நின்று ஈட்டிய வினைகள், மறுமை உலகிற் செலுத்தித் தத்தம் பயன்களை நுகர்விக்கும். தவம் செய்த வழியும் ஞானம் நிகழ்ந்தாலன்றி, ஏகதேசப் பற்றறுதல் இயலாது. உடம்பு இறக்கும் ஞான்று, மனம் ஒரு பொருளைச் சென்று பற்றியதாயின், அதனை அனுபவித்தற்குத் துணையாகி எஞ்சிநின்ற உடல் வினையோடும் பிறந்து அனுபவித்தன்றி, அவ்விடயப் பற்றறுதல் இயலாது. தவம்செய்தார் மனம் நல்விடயங்களையே பற்றுமாதலின் அவற்றை அனுபவித்தற்குரியதாய்ச் சிறந்த பிறவியை எய்துவர். தவமுதிர்ச்சி உடையார்க்கு எழுந்த நுகர்ச்சியானது, மெலியதாய்க் கழிந்தொழிவதன்றி, ஏனோர்க்குப் போல முறுகுதல் இன்மையின் இடையீடின்றி ஞானம் நிகழும். இவையல்லாம் வேதாகம நூற் றுணிபு என்பது, இப்பாடலின் திரண்ட கருத்து.

''பற்றறுப்பார் ஆக'' என்னும் செயவென் எச்சம் ''உண்ண(உண்ணுதற்பொருட்டு) வந்தான்'' என்புழிப்போலப், பற்றறுத்தற் பொருட்டு என்னும் பொருள் தந்தது. கற்றாரது சொல்லுதற்றொழில், அவர் தம் சூழ்ச்சியின் மேல், ஏற்றிக் கூறப் பெற்றது. கற்றவர்கள் தமது சூழ்ச்சியான் உணர்ந்து சொல்லுவர் என்பது கருத்து. சூழ், சூழ்ச்சி-ஆராய்ச்சி. 'ஆம்' அசை. ஈண்டுத் 'தவம்' என்றதுசரியை கிரியை யோகங்களை. 'தவஞ்செய்தார் என்றும் தவலோகம் சார்ந்து' எனப் பொதுப்படக் கூறினாராயினும், முறையே சரியைக்குச் சாலோகமும், கிரியைக்குச் சாமீபமும், யோகத்திற்குச் சாரூபமும், ஆகிய பதமுத்திகள் கொள்ளப்படும்.

நற்சார்பில் வந்து உதித்து ஞானத்தையடைதல், முற்பிறவிகளிற் செய்த தவமுயற்சி உடையார்க்கேயாம் என்பார் ''தவஞ் செய்தார்'' என்றனர். இவ்வுலகத்தில் உயிர்களாற் செய்யப்படும் வினைகள் (தவவினையாயினும் ஏனைய வினையாயினும்), தத்தமக்குரிய உலகங்களிற் செலுத்தித் தத்தம் போகங்களைக் கொடுப்பது, எக்காலத்தும் தவறாது என்பதை உணர்த்துவார் ''என்றுந் தவலோகஞ் சார்ந்து'' என்றார். பற்றறுத்தற் பொருட்டு வந்துதிப்பர் என்றதனால், விடயங்களிற் பற்றுச் செல்லவில்லையாயின், இவ்வுலகத்தில் மீள வந்து பிறவாமல் மேற்கூறிய சாலோகம் சாமீபம் சாரூப்பியம் எனும் பதமுத்திகளிலிருந்தே ஞானத்தை அடைதலுங்கூடும் என்பதறிக. எனினும் தவஞ்செய்யினும் ஞானம் உண்டாயினன்றிப் பற்று முற்றிலும் அறாது. ஆதலால் ஞானமடையாதவர்களின் மனம், இறக்கும் போது விடயத்திற் பற்றும். பற்றவே, அதனை அனுபவித்தற்குத் துணையாகி எஞ்சி நின்ற உடல் வினையோடும் பிறந்து, அவ்விடயத்தை அனுபவித்த பின்னரே, அப்பற்றறுதல் கூடும். ஆதலால் ''பவஞ் செய்து பற்றறுப்பார்'' என்றார். தவஞ் செய்தார் மனம் நற்பொருள்களையே பற்றும். அவர்கள் நற்பற்றுக் காரணமாகப் பிறந்திடில் நல்லவர்கள் சூழலிலேயே சிறந்த பிறவியை எய்துவர். ஆதலால் ''தவஞ்செய்த நற்சார்பில் வந்துதித்து'' என்றார்.

நற்சார்பு வாய்க்கப் பெற்றவர்களுக்கு ஞானம் கிடைத்தல் விரைவும் தெளிவுமாம் என்பார், 'ஞானத்தை நண்ணுதல்' என்றார். இவையெல்லாம் வேதாகம நூற்றுணிபும், அருளாளர்கள் தம்முடைய வாழ்க்கையிற் கண்டுணர்ந்து தெளிந்த அனுபவமுமாம் என்பார் ''கற்றார் சூழ் கண்டு சொல்லும்'' என்றார். ஆம்—அசை.

(வெண்பா)

**"பசித்துண்டு பின்னும் பசிப்பானை ஒக்கும்,**
**இசைத்து வருவினையின் இன்பம்;-இசைத்த**
**இருவினை ஒப்பில், இறப்பில் தவத்தான்,**
**மருவுவன்ஆம் ஞானத்தை வந்து"**

பதவுரை :

இசைத்து-அறநூல்களிலே சொல்லப்பட்டு, வருவினையின் இன்பம்-வருவனவாகிய வினைப் பயனாகிய இன்பங்கள்,

பசித்து உண்டு—முன்னர்ப் பசியெடுத்து அது தீர உணவுகொண்டு,

பின்னும்—அதன்பிறகும்,

பசிப்பானை ஒக்கும்—பசிப்பவனுக்கு அவ்வுணவால்வரும் நிலையில்லாத இன்பத்தையே போலும். (ஆதலால்)

இசைத்த இருவினை—சொல்லப்பட்ட புண்ணிய பாவங்கள் இரண்டும்,

இறப்பில் தவத்தால்—அழிதல் இல்லாத சரியை கிரியை யோகங்கள் ஆகிய தவத்தினால்,

ஒப்பில்—சமமாகும்நிலை(இருவினையொப்பு) நேர்ந்தால்,

ஞானத்தை மருவுவன்—ஞானத்தைத் தலைப்படுவான்.

குறிப்பு :

அறநூலில் கூறப்படும் நல்வினையின் பயன்களெல்லாம் அழிவெய்துவன என்பதற்கு, அவ்வறநூலே சான்று என்பார், 'இசைத்து வருவினை' என்றார். வேள்வி முதலியனவற்றை விரித்த அறநூலே, அவற்றிற்குப் பயன் வேட்டன அளித்தல் (காமியம்) என்பதும் உடன்கூறுதலின், வேட்கப்பட்ட பொருள்கள் எல்லாம் அழிவெய்தும் என்பது பெறப்படும். ஒருவனைப் பந்தம் அடைவித்தலில் நல்வினைகள் பொன் விலங்கும், தீவினைகள் இரும்புவிலங்கும் போல்வன ஆகும். அழிவின்றி நிலை பேறுடைய ஞானத்தை, நிலைபேறின்றி அழிந்தொழியும் நல்வினைகள் அளிக்கமாட்டா. இறப்பில்தவம் -அழிவு அற்ற சரியை கிரியை யோகங்களால் வரும் பயன்கள். 'பின்னும்' என்ற உம்மை இறந்தது தழுவிய எச்சம். 'ஒப்பில்' என்பது செய்யின் என்னும் வினையெச்சம். 'தவத்தான் என்பதனைத் 'தவத்து ஆன்' எனப் பிரித்துத் தவத்தினால் அவ்வுலகத்தில் எனப் பொருள் கொள்க. ஆன்-அவ்விடம்.'ஒப்பில்' என்றதனால் ஒவ்வாவிடில் என்பது வருவித்துக் கொள்ளப் படும். ஆம்-அசை.

இசைத்து வருவினைகள் எல்லாம் ,பசுக்கள் எனப்படும் ஆன்மாக்களை நோக்கிச் செய்யப்படுதலில் பசுபுண்ணியம் எனவும், இறப்பில் தவங்கள் எல்லாம் சிவபெருமானையே நோக்கிச் செய்யப்படுதலில் சிவபுண்ணியம் எனவும் பெயர்பெறும். பசுபுண்ணியம் சிவபுண்ணியம் எனப் பாகுபாடு செய்தது, செய்வாரது கருத்து வேறுபாடு பற்றியே அன்றி, ஏன்று கோடல் பற்றி அன்று. செய்வாரது கருத்து வேறுபாடு உணர்ந்து, அதற்கு ஏற்பவே இறைவன் பயன் கொடுப்பான். பசுபுண்ணியங்களால் அன்றிச் சிவ புண்ணியங்களாலேயே ஞானம் கிடைக்கும் என்பது, இவ்வெண்பாவினால் அறிவுறுத்தப் பெற்றது.

## 8. இரண்டாம் அதிகரணம்

''இனி இவ்வான்மாக்களுக்குத் தமது முதல் தானே குருவுமாய் உணர்த்தும் என்றது; அவன் அந்நியமின்றிச் சைதன்னிய சொரூபியாய் நிற்றலான்''.

(வெண்பா)

"மெய்ஞ்ஞானம் தானே விளையும்விஞ் ஞானகலர்க்கு;
அஞ்ஞான அச்சகலர்க்கு அக்குருவாய்,-மெய்ஞ் ஞானம்
பின்உணர்த்தும்; அன்றிப் பிரளயா கலருக்கு
முன்உணர்த்தும் தான்குருவாய் முன்''

பதவுரை :

விஞ்ஞானகலர்க்கு-ஆணவமலம் ஒன்றேயுடைய விஞ்ஞானகலர்களுக்கு,

தானே—முதல்வன் தன்மையில் நின்றவாறே,

மெய்ஞ்ஞானம்—தத்துவ ஞானத்தை,

விளையும்—விளைவிப்பன்;

அன்றி—அவ்வாறு அல்லாமல்,

பிரளயாகலருக்கு—ஆணவம் மாயை என்னும் இருமலங்களையுடைய பிரளயாகலருக்கு,

தான்—முதல்வன்,

குருவாய்—தன்னுடைய இயல்பான வடிவையே குருவடிவமாய்க் காட்டி

முன்உணர்த்தும் — முன்னிலையில் நின்று தத்துவ ஞானத்தை உபதேசித்து உணர்த்துவான்.

அஞ்ஞான அச்சகலர்க்கு—அவிச்சையைஉடைய அந்தச் சகலர்களுக்கு,

அக்குருவாய்—அவர் வடிவம்போலும் வடிவு உடைய குருவாகி வந்து,

பின்—அவ்வடிவின் பின்னாக மறைந்துநின்று,

மெய்ஞ்ஞானம் உணர்த்தும்—முதல்வன் தத்துவ ஞானத்தை உணர்த்துவான்.

முன்—இவ்வேறுபாட்டை அறிவாயாக!

குறிப்பு :

எளிதின் அடப்படுதல் நோக்கி ''அரிசி தானே அட்டது'' என்றாற்போல, எளிதின் விளைவிக்கப்படுதல் நோக்கி, 'மெய்ஞ்ஞானம் தானே விளையும் 'என்றார். 'அரசன் எடுத்த (எடுப்பித்த) ஆலயம்' என்புழிப்போல, பிற வினை விகுதி குன்றி நின்றது எனினுமாம். மெய்ஞ்ஞானம்-வீடுபயக்கும் உணர்வு. அச்சகலர்-மேற்கூறிய சரியை கிரியா யோகங்கள் செய்து முற்றிய சகலர். அஞ்ஞானம்-அவிச்சை, மாயாமலத்தின் காரிய மாகிய மயக்கம். ஈண்டு மாயாமலம்'அஞ்ஞானம்' எனப்பட்டது. விஞ்ஞானகலர்-விஞ்ஞானத்தால் கலையற்றவர்; விஞ்ஞானா கலர் என்பது விஞ்ஞானகலர் என மருவியது. பிரளயாகலர்-பிரளயத்தில் கலையற்றவர்; சகலர்-கலையோடு கூடியவர். இவர்கள் முறையே ,ஒருமலமும் இருமலமும் மும்மலமும் உடையவர்கள்.

விஞ்ஞானகலர்க்குத் தன்மையில் உள்ளத்துள் நின்றும், பிரளயாகலர்க்கு நாற்றோள் முக்கண் நீலகண்டம் மான்மழு முதலியன உடைய திருவுருவத்துடன் முன்னிலையிலும், சகலர்க்கு அவர் போலும் வடிவுடைய குருவாய் மானிடப் போர்வையில் மறைந்து நின்று படர்க்கையிலும், இறைவன் ஞானத்தை உணர்த்துவன் என்பது, இப்பாடலின் கருத்து.

இம்மூவருள், சகலர்க்கு உணர்த்துங்கால் இயற்கை வடிவை ஒழித்துப் பிறிதொரு மானுட வடிவம் ஆதாரமாக நின்று உணர்த்துதலின், அது சாதாரம் (ஆதாரத்துடன் கூடியது) என்றும்; ஏனைய இரண்டும் நிராதாரம் (ஆதாரம் இல்லாதவை) என்றும் கூறப்படும்.

(வெண்பா)

அறிவிக்க அன்றி அறியா உளங்கள்;
செறியுமாம் முன்பின் குறைகள்;-நெறியிற்
குறையுடைய சொற்கொள்ளார்; கொள்பவத்தின்
வீடுஎன்;
குறைவில்சகன் சூழ்கொள் பவர்க்கு.

பதவுரை :

உளங்கள்—உயிர்கள் எல்லாம்,

நெறியின்—தமக்குரிய படிவழியில் வைத்து,

அறிவிக்க அன்றி—முதல்வன் அறிவித்தால் அறியும் இயல்பின அல்லாமல்,

அறியா—ஒன்றுபோல் அறிவிக்க அறியும் இயல்பின அல்ல; (ஆதலால்),

குறைவுஇல்—அறிவால் குறைபாடு இல்லாத,

சகன்—சகக் கடவுளது,

சூழ்கொள்பவர்க்கு—அருள்மொழியைக் கொண்டு உணரும் இயல்பினராகிய பிரளயாகலர் சகலர்க்கு,

குறைகள்—அறிவித்தால் அறிதல் ஆகிய உபதேசமொழிகள்,

முன்பின் செறியுமாம்—முன்னிலையிலும் பின்னிலையிலும் நிகழ்வன ஆகும்.

குறையுடைய சொற் கொள்ளார்க்கு—குறைவில் சகனால் ஆகிய குறைவினையுடைய உபதேசமொழிகள்கொண்டு உணரவேண்டாத விஞ்ஞானகலர்க்கு,

கொள்பவத்தின்—முதல்வனால் கொள்ளப் பட்ட தன்னுண்மை மாத்திரத்தில்,

வீடு என்—வீடு பயக்கும் உணர்வு உண்டாகும் என்று அறிக.

குறிப்பு :

அறிவித்தற்கு எழுவாய் (முதல்வன்), மேலை வெண்பாவினின்றும் வருவிக்கப்பட்டது. 'அன்றி அறியா' என எதிர்மறையாற் கூறினார், இன்றியமையாமை உணர்த்துதற்கு. 'நெறியின்' என்புழி இன் உவமஉருபாய் வந்தது 'முன்பின்னாக' என்று ஆக்கச் சொல் வருவித்து உரைக்க. குறை-இன்றியமையாப் பொருள். குறைவுடையார்களைக் குறைகள் என உபசரித்தார். 'போல' என்பது சொல் லெச்சம். சொல்லும் சூழும் ஆகுபெயர், சொல்-உபதேசமொழி, சூழ்-உபதேசமொழி. 'கொள் பவம்' என்பதில், பவம் என்பது உண்மை, நிராதாரம் என்னும் பொருள் குறித்தது. சகம்-நிலவுலகம். 'சகன்சூழ் கொள்பவர்க்கு' என்புழி சகனால் என மூன்றன் உருபு விரித்துரைக்க. நூல் குறைவுடையதாயினும், அதனைக் கேட்பித்துச் சிந்திப்பித்துத் தெளிவிக்கும் குருவினது அறிவாற்றலில் குறைபாடு இன்மையின் தெளிந்து வீடு எய்துதல் கூடும் என்பார், 'குறைவில் சகன்' என்று சிறப்பித்தார். 'சொற் கொள்ளார்க்கு' என்று நான்கன் உருபு விரித்துக் கொள்க.

உயிர்கள் அறிவித்தாலன்றி அறியும் இயல்பின அல்ல. அறிவித்த வழியும் ஒன்று போல் மற்றொன்று அறியும் தகையன அல்ல. உயிர்களுக்கு இறைவன் துணையாய் நின்று அவ்வவற்றின் தகுதிக்கு ஏற்பப் படிமுறையே வைத்துத்தான் அறிவித்தல் வேண்டும். அதனாலேயே விஞ்ஞானகலர்க்கு உயிர்க்குயிராய் உள்நின்று அறிவினால் தன்மையிலும், பிரளயாகலர்க்குத் திருவருள் உருக்கொண்டுஅறிவாலும் ஆற்றலாலும் முன்னிலையிலும், சகலர்க்கு அறிவு ஆற்றல் அன்பு என்னும் மூன்றாற் படர்க்கையிலும், இறைவன் அறிவித்தல் இன்றியமையாததாயிற்று.

(வெண்பா)

இல்லா முலைப்பாலுங் கண்ணீரும், ஏந்திழைபால்
நல்லாய்! உளவாமால்: நீர்நிழல்போல்-இல்லா
அருவாகி நின்றானை, யார்அறிவார்? தானே
உருவாகித் தோன்றானேல் உற்று.

பதவுரை :

நல்லாய்—அறிவால் நன்மையுடைய மாணாக்கனே!

ஏந்திழைபால்—ஏந்திய இழைகளை அணிந்த ஒரு பெண்ணுக்கு,

முலைப்பாலும் கண்ணீரும்—(அவள் தன் குழந்தையின்பாற் கொண்ட அருவாகிய அன்பினைப் பிறர் அறியும்பொருட்டு வெளிப்படுத்தும் அன்பின் உருவமாகிய) முலைப்பாலும் கண்ணீரும்,

இல்லா—(அவள்தன் குழந்தையைக் காணும் முன்பு) இல்லாதனவாய்,

உளவாம்—பின்பு உண்டாகும்;

நீர்நிழல்போல்—நீரின்கண் பொருந்தியுள்ள நிழலைப்போல,

இல்லா அருவாகி நின்றானை—(உயிர்கள்மாட்டுப் பொருந்திப் புலப்படுதல்) இல்லாமல், அருவமாய் நின்ற முதல்வனை,

தானே—அம் முதல்வனே,

உருவாகி உற்றுத் தோன்றானேல்—குருவடிவம் கொண்டுவந்து தோன்றி நின்று உணர்த்தானாயின்,

யார் அறிவார்—யார்தான் அறியவல்லார்?

குறிப்பு :

ஒரு பெண் தன்னுடைய குழந்தையின் இடம், தனக்கு உள்ள அருவாகிய அன்பினை வெளிப்படுத்துவதற்கு, அவ் அன்பின் வடிவாகிய முலைப்பாலும் கண்ணீரும், குழந்தையைக் காண்பதற்கு முன்பு அவள்மாட்டு இல்லாமற் பின்னர் உளவாகும். அதுபோல, நீரின்கண்

நிழல்போல, ஆன்மாவின்பாற் பொருந்தி வெளிப்படுதல் இல்லாமல் அருவமாய் நின்ற முதல்வன், முன்னே வெளிப்படான் ஆயினும் பின்னே குருவடிவமாய்த் தோன்றி வந்து மெய்ப் பொருளை உணர்த்துவன். அங்ஙனம் முதல்வனே உணர்த்தானாயின், அவனை உணர்வார் உலகில் ஒருவரும் இல்லை என்பது இப்பாடலின் கருத்து.

நூல் கொள்பவராகிய சகலர்க்கு அந் நூலானே அறிதலே அமையும். குருவின் உபதேசம் மிகை என்னும் ஐயத்தை நீக்கும் முகத்தால், அருவாய் நின்ற முதல்வனை அறிவித்தற்கு நூல்மட்டும் அமையாமையின், அம்முதல்வனே குருவாய்த் தோன்றிவந்து உணர்த்துதல் வேண்டும் என்பார், ''யார் அறிவார், தானே உருவாகித் தோன்றானேல் உற்று?'' என்றார். எதிர்மறையாற் கூறினார், இன்றியமையாமை உணர்த்துதற்கு.

முலைப்பாலும் கண்ணீரும் அன்பை விளக்கும் என்பது, ''சுரந்த திருமுலைக்கே துய்ய சிவஞானம், சுரந்துண்டார் பிள்ளை எனச் சொல்லச் - சுரந்த, தனமுடையாள் தென் பாண்டி மாதேவி தாழ்ந்த-மனமுடையாள் அன்பிருந்தவாறு'' என்பதனாலும், ''அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ்? ஆர்வலர் புன்கண்ணீர் பூசல் தரும்'' என்பதனாலும் அறியப் பெறும்.

அருவப்பொருள்போற் புலப்படாத இயல்பு பற்றி முதல்வனை 'அரு' என்றல் சாலும் என்பார், ''இல்லா அருவாகி நின்றான்'' என்றார். இச்சூத்திரம் எடுத்துக்காட்டு உவமை. 'யார் அறிவார்?' என்றது, ஒருவரும் அறியமாட்டார் என்னும் பொருளது. இல்லா-இல்லாவாய்; வினையெச்சக் குறிப்பு முற்று. 'இல்லாவாய், உளவாம்' என இயையும். 'ஆல்' அசை.

## மூன்றாம் அதிகரணம்

''இனி இவ்வான்மாக்கள் ஐயுணர்வுகளால் மயங்கித் தம்மை உணரா என்றது; அவைதான் பளிங்கில்இட்ட வன்னம்போல் காட்டிற்றைக் காட்டி நிற்றலான்''.

(வெண்பா)

''பன்னிறங் காட்டும் படிகம்போல், இந்திரியம்
தன்னிறமே காட்டுந் தகைநினைந்து-பன்னிறத்துப்
பொய்ப்புலனை வேறுணர்ந்து பொய்பொய்யா
மெய்கண்டான்
மெய்ப்பொருட்குத் தைவமாம் வேறு''

பதவுரை:

பன்னிறம் காட்டும் படிகம்போல்—தன்னைச் சார்ந்த பல நிறங்களின் இயல்பையே தன்மாட்டுக் காட்டிநிற்கும் இயல்பை உடைய பளிங்கு போல,

இந்திரியம் தன்னிறமே காட்டும்—தன்னைச் சார்ந்த இந்திரியங்களின் இயல்பையே, சார்ந்ததன் வண்ணமாய்த் தன்பாற் காட்டுகின்ற,

தகை நினைந்து—தனது இயல்பை (ஆன்மா) முன்னர்ச் சிந்தித்து அறிந்துகொண்டு,

பன்னிறத்துப் பொய்ப் புலனை—(படிகம் பல நிறங்களைக் காட்டினலும், அப் பல நிறங்களும் படிகத்திற்கு வேறு என்று அறியுமாறுபோல்) பலவகை இயல் புடைய இழிந்த பொறிகளை,

வேறு உணர்ந்து—தன்னின் வேறுபட்டவை என்று தெளிந்து,

பொய் பொய்யாக—அவற்றின் பொதுவியல்பு பொய்யாய் ஒழியுமாறு,

மெய்கண்டான்—தனது சிறப்பியல்பை உணர்ந்தவன்,

வேறு—அவ் அசத்தாகிய பொறிகளுக்கு வேறான,

மெய்ப்பொருளுக்கு—சிவசத்து ஆகிய பரம் பொருளுக்கு,

தைவம் ஆம்—அடிமை ஆவன்.

குறிப்பு:

பளிங்கானது, தன்னைச் சார்ந்த பலவகை நிறங்களையும் தன்பாற் காட்டிநிற்கும்; அதுபோல உயிரானது தன்னைச் சார்ந்துள்ள இந்திரியங்களின் இயல்பையே தன்பாற் காட்டி நிற்கும். பளிங்கானது தன்னைச் சார்ந்த பல் வேறு நிறங்களின் வேறாதல் போல, உயிரும் தன்னைச் சார்ந்துள்ள இந்திரியங்களின் வேறுபட்டது. நிறங்கள் பளிங்கின் வேறானவை என்று கண்டு பளிங்கின் சிறப்பியல்பை உணர்தல்போல, இந்திரியங்கள் தன்னின் வேறுபட்டவை என்று, உயிரானது உணர்ந்துகொண்டால், அவ்வுயிர் தன் சிறப்பியல்பை உணரப் பெறும்; அங்ஙனம் உணர்ந்தால், உயிரானது சிவபரம்பொருளுக்கு அடிமையாய், அப்பரம் பொருளின் இயல்பு தன்னிடத்தில் விளங்கப் பெறும் என்பது, இப்பாடலின் கருத்து.

படிகம்-பளிங்கு, தகை நினைந்து- தனது இயல்பைச் சிந்தித்து அறிந்துகொண்டு. பொய்ப் புலனை-பொதுவியல்பைச் செய்யும் இந்திரியங்களை. பொய்-இடையே விளங்கி மறைவதாகிய பொதுவியல்பு. மெய்-எக்காலத்தும் நிலைபெற்றுள்ளதாகிய சிறப்பியல்பு. தைவம் -தேவனது உடைமை. 'ஆக' என்பது 'ஆ' எனக் கடைக்குறைந்து நின்றது. பொய் பொய்யாக-பொதுவியல்பு பொதுவியல்பேயாய் ஆகி ஒழியுமாறு. மெய்கண்டான்-சிறப்பியல்பை உணர்ந்தவன். மெய்ப்பொருள் - சிவபரம் பொருள். தைவம் - தேவனது உடைமை, அடிமை. ஆம்-ஆகும்.

''பன்னிறங்கள் அவைகாட்டும் படிகம்போல், உள்ளம்
பலபுலன்கள் நிறங்காட்டும் பரிசு பார்த்திட்டு,
இந்நிறங்கள் என்நிறம்அன்று என்று, தன்தன் எழில்நிறம்கண்டு அருளினால் இந்நிறத்தின் வேறாய்ப்,
பொய்ந்நிறஐம் புலன்நிறங்கள் பொய்எனமெய் கண்டான்,
பொருந்திடுவன் சிவத்தினொடும், போதான் பின்னை;
முன்நிறைநீர் சிறைமுறிய முடுகி ஓடி
முந்நீர்சேர்ந்து, அந்நீராய்ப் பின்நீங்கா முறைபோல்''

எனவரும் சிவஞான சித்தியார் செய்யுள்(259), இங்கு உணரற்பாலது.

## நான்காம் அதிகரணம்

''இனி இவ்வான்மாத் தன்னை இந்திரியத்தின் வேறாவான் காணவே தமது முதல்வன் சீபாதத்தை அணையும் என்றது; ஊசல் கயிறு அற்றால் தாய் தரையேயாம் துணையான்''.

(வெண்பா)

**சிறைசெய்ய நின்ற செழும்புனலின், உள்ளம்**
**சிறைசெய் புலன்உணர்வில் தீர்ந்து,-சிறைவிட்டு**
**அலைகடலிற் சென்றடங்கும் ஆறுபோல், மீளாது**
**உலைவில் அரன் பாதத்தை உற்று**

பதவுரை :

சிறைசெய்ய—ஒருவன் அணைகட்டித் தடைசெய்ய,

நின்ற—அதனால் தடையுண்டு தேங்கி நின்ற,

செழும்புனலின்—ஆற்றின் வெள்ளநீர் போல,

உள்ளம்—(கருவிகளால் ஆகிய பாசஞானம் தனது வியாபகத்தைத் தடைசெய்ய அதன்கண் ஏகதேசமாய் அடங்கித் தடையுண்டு கிடக்கின்ற) உயிர்,

சிறைவிட்டு—அவ் அணைமுறிந்து தடைதீர்ந்த வழி,

அலைகடலில் சென்று—(இடையீடுஇன்றிக்)கடலின்கண் முடுகிச்சென்று,

அடங்கும் ஆறுபோல்—அக்கடல் நீரேயாய், அதனுள் அடங்கி மறிந்து வாராத ஆற்றுநீர்போல,

சிறைசெய்—தனது வியாபகத்தைத் தடைசெய்து வந்த,

புலன் உணர்வில் தீர்ந்து—பாசஞானத்திலிருந்து விடுபட்டு,

உலைவுஇல்—கேடு இல்லாத,

அரன் பாதத்தை உற்று—சிவபிரானது திருவடியைத் தலைக்கூடி,

மீளாது—அத் திருவடி நிறைவேயாய், அதன்கண் அடங்கிப் பின்பு மீளுதல் செய்யாது.

குறிப்பு :

அணையால் தடைசெய்யப்பட்டுத் தேங்கி நின்ற ஆற்றுவெள்ள நீர்போல, கருவிகளால் ஆகிய பாசஞானம் தனது வியாபகத்தைத் தடுக்க, அதனால் ஆன்மா தடையுண்டு நிற்கும்.

அணைமுறிந்து தடைநீங்கிய வழி, அவ்வாற்று வெள்ளநீர் கடலிற் சென்று அடங்கிக் கலந்து, அந்நீரேயாய்ப் பின்பு அதனினின்று மீளுதல் செய்யாது. அதுபோலக் கருவிகளான் ஆகிய பாசஞானத் தடையினின்று விடுபட்டு நீங்கியவழி, ஆன்மாவானது சிவபிரானின் திருவடியிற் பொருந்தி, அத் திருவடி நிறைவேயாய் அடங்கிப் பின்பு அதனினின்று மீளுதல் செய்யாது நிலைபெறும்.

மலசத்திக்குக் கேடுண்மையின் அதனினின்று விடுபட்ட உயிர், கருவிகளின் மீளுதல்கூடும்; சிவசத்திக்கு அவ்வாறு கேடின்மையின் சுத்த நிலை எய்திய உயிர், அதுபோல் மீளுதற்கு ஓர் இயைபும் இல்லை என்பார் ''உலைவில் அரன் பாதம்'' என்றார். சிறை செய்ய-அணைகட்டித் தடுக்க. நின்ற -தேங்கிநின்ற. செழும்புனலின்-ஆற்றுவெள்ளம்போல; இன் உவமை உருபு. உள்ளம்-உயிர். புலன் உணர்வில் தீர்ந்து-பாசஞானத் தடையினின்று விடுபட்டு. உலைவு-கேடு. உலைவுஇல்-கேடுஇல்லாத .அரன்-உயிரின் பாசங்களை அரிப்பவன்.

(வெண்பா)

**எவ்வுருவும் தான்என்னில் எய்துவார் இல்லைதாள்;**
**இவ்வுருவின் வேறேல் இறைஅல்லன்;-எவ்வுருவும்**
**கண்போல் அவயவங்கள் காணா; அக் கண்ணில்லார்**
**கண்பேறே காண் அக் கழல்**

பதவுரை :

எவ்வுருவும்—(உயிர் உணர்வே அன்றி) எவ்வகைப்பட்ட புலனுணர்வும்,

தான் என்னில்—சிவமேயாகும் என்றால்,(அதில் சிறப்பு ஏதும் இல்லாமையால்),

தாள் எய்துவார் இல்லை—புலன்வழி ஒழுகும் சகலநிலையைக் கைவிட்டுத் திருவடியைத் தலைக்கூட விரும்புவார் ஒருவரும் இரார்.

இவ்வுருவின்வேறேல்—(அதுபற்றி முதல்வன்) இப்புலனுணர்வுகளுடன் (இயைபின்றி) வேறாக நிற்பன் என்றால்,

இறைஅல்லன்—(அப் புலனுணர்வுக்கு அவனால் ஆகற்பாலது ஒன்றும் இல்லையாய்), அவன் ஆண்டைக்கு),இறைவன் அல்லன் எனப்பட்டு இழுக்காய் முடியும்.

எவ்வுருவும்—உயிருணர்வுபோலப் புலனுணர்வு களும், (கலப்பினால் சிவமேயாம் ஆயினும் இரண்டும் தம்முள் ஒப்பன அல்ல);

அவயவங்கள் கண்போல் காணா-உயிர் ஐம் பொறிகளிலும்ஒப்ப நிற்பினும், அவற் றுள் மெய் வாய் மூக்கு செவி என் னும் நான்கு அவயவங்களும், கண் இந்திரியம் ஒளியால் ஆன்ம போதத் தோடு விரவிச் சேய்மைக்கண்ணதா கிய விடயத்தையும் வியாபித்து அறியுமாறு போல, வியாபித்து அறிய மாட்டாவாய்த் தம்மாட்டு வந்த விடயங்களை மட்டும் நின் றாங்கு நின்று இயைந்து அறியும் தன்மையவாம்.

அக்கழல்—அக்கண்ணினது வெற்றிப்பாட்டை,
அக்கண்ணில்லார்—அக்கண் ஒளி இழந்தாரது,
கண்பேறே—கண்பேற்றின்கண்,

காண்—கண்டு அறிவாயாக.

குறிப்பு :

உயிர் உணர்வேயன்றிப் புலன்உணர்வும் கூடச் சிவமேயாகும் என்றால், புலன்வழி ஒழு கும் சகல நிலையைக் கைவிட்டுத் திருவடியைத் தலைக்கூடும் சுத்த நிலையை அடைய விரும்பு வோர் ஒருவரும் இரார். முதல்வன் புலனுணர் வோடு எத்தகைய இயைபும் இன்றி வேறாய் நிற்பவன் என்றால், அப்புலன் உணர்விற்கு அவனால் ஆகற்பாலது யாதொன்றும் இல்லை யாய், இறைவனின் முதன்மைக்கு இழுக்காய் முடியும். உயிருணர்வு போலப் புலன்உணர்வும் கலப்பினால் சிவமேயாகும். எனினும், இரண் டும் தம்முள் ஒப்பன அல்ல. எதுபோல எனில், உயிர் ஐம்பொறிகளிலும் ஒப்ப நிற்பினும், மெய் வாய் மூக்கு செவி என்னும் நான்கும், கண் இந் திரியம் ஒளியால் உயிர் உணர்வோடு விரவி நின்று, சேய்மைக்கண்ணதாகிய பொருளையும் வியாபித்து அறியுமாறு போல, வியாபித்து அறியமாட்டாவாய் நிற்கும். கண் இந்திரியம் பொருள்களைச் சென்றும் நின்றும் பற்றி அறி யும். ஆனால் ஏனைய பொறிகள் நான்கும் தம்மாட்டு வந்த பொருள்களை மட்டுமே நின் றாங்கு நின்று அறியும். கண்ணிற்கு வெற்றிப் பாடு ஆவது, இங்ஙனம் ஏனைய நான்கு பொறி களிலும் மேம்படுதல். கழல் என்பது காலணி மணிவடம். அணிவார்க்கு உளதாகும் வெற்றிப் பாட்டைக் 'கழல்' என்று சிறப்பித்தார்.

'எவ்வுருவும்-இவ்வுருவின்' என்பவற்றுள், உரு என்பது பொருட்டன்மையை உணர்த் திற்று. 'எவ்வுருவும் கண்போல்' என்புழி, உரு என்னும் சொல், உறுப்பு என்னும் பொருளில் வந்தது. உறுப்பு ஆதாரமாக நிற்றலானும், உறுப்புப் போறலானும் ,இந்திரியங்களை உறுப்பு என்றார். கழல் அணிதற்கு ஏதுவாகிய வெற்றிப்பாட்டைக் கழல் என்று சிறப்பித்தார். கழல்-காலணி மணிவடம். 'அக்கண்' என்புழி அகரச் சுட்டுச் சிறப்பின்கண் வந்தது. காண்- முன்னிலை ஏவல். பேறே-பேற்றின்கண்; ஏகா ரம் ஏழன் உருபுப் பொருள் உணர்த்தியது.

''கண்போல் அவயவங்கள் காணா: அக் கண்ணில்லார் கண் பேறே காண் அக்கழல்'' என்பது, முதல்வன் உயிருணர்வு புலனுணர்வு என்னும் இரண்டினும் ஒப்ப விரவி நிற்பினும், உயிருணர்வு போலப் புலனுணர்வு வியாபக விளக்கமாதல் இன்றி, ஏகதேச விளக்கமாம். உயிருணர்விற்கு உளதாகிய அம் மேம்பாடு அவ்வியாபக வுணர்வை இழந்த பசுத்துவ முடையார்மாட்டு அறியப்படாதாயினும், அவ ரது பசுத்துவம் நீங்கிய சிவப்பேற்றின்கண் அறியப்படும் என்பது புலப்பட வைப்பதனால், ஒட்டு என்னும் பிறிது மொழிதல் அணியாகும்.

( வெண்பா )

**ஐம்பொறியின் அல்லைஎனும் அந்ததர! சிவனை**
**ஐம்பொறியை விட்டங்கு அணைசகலன்,-ஐம்பொறி யின்**
**நீங்கான்; நீர்ப் பாசிபோல் நீங்கும்மல கன்மம்வரின்,**
**நீங்கானை நீங்கும் நினைந்து**

பதவுரை :

ஐம்பொறியின்—ஐம்பொறிகள்போல,

அல்லை—ஏகதேச விளக்கம் உடையவன் அல்லை(வியாபக விளக்கம் உடையை),

எனும்—என்று அறிவுறுத்தப்படுகின்ற,

அந்ததர—சித்தாந்த மகாவாக்கியத்தைப் பெற் றுடைய மாணவனே!

அங்கு—மேற்கூறியபடி,

ஐம்பொறியைவிட்டு—ஐம்பொறிகளால் ஆகிய புலன்உணர்வில் நீங்கி,

அணைசகலன்—சிவபிரான் திருவடியை அணை கின்ற சகலான்மா,

ஐம்பொறியின் நீங்கான்—அவ் ஐம்பொறிகளால் மீளவும் அத் திருவடியை நீங்குவான் அல்லன்;

நீர்ப்பாசிபோல்—கல்எறியும் வழி நீங்கிய நீர்ப் பாசி, அது விடும்வழிப் பரக்குமாறு போல;

நீங்கும் மலகன்மம் வரின்—சிவபிரான் திரு வடியை அணைந்து நிற்குங்கால் நீங்குகின்ற மலகன்ம மாயைகள் , வாதனை வயத்தால் நிகழும் பயிற்சி பற்றி மீளவும் வந்து கூடுமாயின்,

நீங்கானை—அவ்வழியும் தன்னைவிட்டு நீங்கா மல் நிற்கும் முதல்வனை,

நினைந்து—சிந்தித்துத் தியானித்து,

நீங்கும்—அம் மலகன்ம மாயைகளை நீக்கிக் கொள்ளும்.

குறிப்பு :

ஆற்றுநீரானது கடலிற் சென்று கலந்து அடங்கும்; அடங்குமாயினும் அவ்வாற்றின் வழியாக அதனின்று மீளுதலும் கூடும். அது போலவே, சிவபிரான் திருவடியை அடைந்த

உயிர், அத்திருவடியில் அடங்கியிருத்தலே யன்றி, ஒரோஒருகால் புலன்களின் வழியில் மீளுதலும் கூடும். ஆதலால் ஒருபோதும் மீளாது என்பது பொருந்தாது என்று கூறு வோரை மறுத்து, அவ்வாறு மீளுதற்குக் காரணம் பழைய மலவாசனை என்றும், அப் பழைய மல வாசனையால் புலன்களின் வழியில் மீள நேரின், ஆற்றுநீர் ஆற்றுநீராகவே திரும் பாது, கடல்நீராகத் திரும்பி மீண்டும் அக்கடலிற் சென்று அடங்குமாறு போல, திருவடியை மறவாத அன்பினால் அக்கருவிகளை விட்டு நீங்கி, மீண்டும் திருவடியை அடைந்து, அதன் கண்ணேயே அடங்கி நிற்கும் என்று கூறி, மீளாமையை வலியுறுத்தியவாறு.

ஐம்பொறிகளை விட்டன்றி, ஆன்மா இறைவனை அணைதல் கூடாது என்பார் ''ஐம்பொறியை விட்டு அங்கு அணை சகலன்'' என்றும்; ஐம்பொறியைவிட்டு நீங்கிய இடத்தில் சிவன் மீளாமையை வலியுறுத்துவார் 'சகலன்(ஐ) ஐம்பொறியின் (ஆல்) நீங்கான்' என்றும்; ஒருகால் மீளுமாயின் அதற்குக் காரணம் இஃது என்று உவமை முகத்தால் உணர்த்துவார் 'நீர்ப் பாசிபோல்' என்றும்; ஐம்பொறியின் மீளுமாயின் அவற்றிற்கு மூலமாகிய மல கன்ம மாயைகளும், அதுபற்றாக வந்துகூடும் என்பார் 'மலகன்மம் வரின்' என்றும்; அம் மீட்சியை நீக்குதற்கு உபாயம் கூறுவார் 'நீங் கானை நினைந்து நீங்கு' என்றும் கூறினார். 'அந்தம்' என்றது தீவிர சத்திநிபாதத்தை. மேம்பட்ட சத்திநிபாதம் உடையாய் என்பார் 'அந்ததர!' என்றார். சகலனை என்னும் இரண்டன் உருபு விகாரத்தால் தொக்கது. மலகன்மம் எனவே இனம் பற்றி மாயையும் கொள்ளப் படும். 'மலகன்மம் வரின்' என்றதனால் வருதல் ஒருதலையன்று; வருதல் வாசனாமலம் உள்ள வழியே என்பது பெற்றாம்.

''எங்கும்தான் என்னில்நாம் எய்த வேண்டா;
எங்கும்இலன் என்னின்வேறு இறையும் அல்லன்;
அங்கம்சேர் உயிர்போல்வன் என்னின், அங்கத்து
அவயவங்கள், கண்போலக் காணா; ஆன்மா
இங்குநாம் இயம்பும்தத் துவங்களின்வைத்து அறிவது;
இறைஞானம் தந்துதாள் ஈதல், சுடர் இழந்த
துங்கவிழி, சோதியும்உட் சோதியும்பெற் றாற் போல்,
சோதிக்குட் சோதியாய்த் தோன்றிடுவன் கானே.''(1)

''பாசிபடு குட்டத்திற் கல்லினைவிட்டு எறியப்
படும்பொழுது நீங்கி, அது விடும்பொழு திற் பரக்கும்;
ஆசுபடு மலமாயை அருங்கன்மம் அனைத்தும்
அரன்அடியை உணரும்போது அகலும், பின் அணுகும்;
நேசமொடும் திருவடிக்கீழ் நீங்காதே தூங்கும்
நினைவுடையோர், நின்றிடுவர் நிலையதுவே ஆகி;
ஆசையொடும் அங்கும்இங்கும் ஆகிஅல மருவோர்,
அரும்பாசம் அறுக்கும்வகை அருளின்வழி உரைப்பாம்''(2)

எனவரும் சிவஞானசித்தியார் செய்யுள்கள், இச் சிவஞானபோத வெண்பாவினை அடியொற்றி அமைந்தனவாகும்.

---

# திருவாய்மொழி உரையாசிரியர்கள்

திருவாய்மொழிக்குப் பல வியாக்கியானங்கள் உள்ளன. அவற்றுள் ஆறாயிரப்படி என்பதனைத் திருக்குருகைப்பிரான்பிள்ளான் எழுதியருளினார். விஷ்ணுபுராணம் 6,000 கிரந்தங்களைக் கொண்டிருத்தலை ஒட்டி, அவர்தம் வியாக்கியானத்தை அவ்வளவில் அமைத்தார். பாஷ்யம் 9,000 கிரந்தங்கள் உடையதாக விளங்குதலை நினைந்து நஞ்சீயர் என்பவர் ஒன்பதினாயிரப்படி வியாக்கியானம் வகுத்தார். பாகவதபுராணம் 12,000 கிரந்தங்களில் அமைந்திருத்தலை எண்ணி, வாதிகேசரி அழகிய மணவாள ஜீயர் திருவாய்மொழிக்குப் பன்னீராயிரப்படி வியாக்கியானம் வரைந்தார். வால்மீகி ராமாயணம் 24,000 சுலோகங்கள் கொண்டதாக விளங்குதலை உன்னி, பெரியவாச்சான்பிள்ளை அவர்கள் இருபத்து நாலாயிரப்படி வியாக்கியானம் செய்தருளினார். பிரமசூத்திரத்திற்கு இராமாநுசர் வகுத்தருளிய பாஷ்யம் என்னும் பேருரைக்குச் சுதரிசனபட்டர் என்பவர் எழுதிய சுருதப்பிரகாசிகை என்னும் விளக்கவுரை 36,000 கிரந்தங்களாக விரிந்திருத்தல் கருதி, வடக்குத் திருவீதிப்பிள்ளை என்பவர் திருவாய்மொழிக்கு முப்பத்தாறாயிரப்படி வியாக்கியானம் விரித்துரைத்தருளினார். இம்முப்பத்தாறாயிரப் படிக்கு ஜீயர் அரும்பதம், அடையவளைந்தான் அரும்பதம் என்னும் இரண்டு குறிப்புரைகளும் உண்டு.

பிள்ளான் நஞ்சீயர் பெரியவாச் சான்பிள்ளை
தெள்ளார் வடக்குத் திருவீதிப்—பிள்ளை
மணவாள யோகி திரு வாய்மொழியைக் காத்த
குணவாளர் என்றுநெஞ்சே கூறு.

—உபதேசரத்தினமாலை, மணவாளமாமுனிகள்

# இராமனும் - கதிரவனும்

திரு. ச. வே. சுப்பிரமணியன், M.A., Ph.D.
இயக்குநர்: உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை.

இராமாயணத் தலைமைப் பாத்திரமான இராமனைக்கதிரவனோடு இணைத்துக்காட்டும் நிலை கம்பனிடம் பல்கியமைகின்றது. செஞ் ஞாயிற்றுக்கு முரணான ஒரு கருஞாயிறாக அவனைக் காட்டும்போது கவிஞரின் கற்பனை உள்ளம் வெளிப்படுகின்றது. கரிய திருமேனி யனானமையால் மட்டுமே அவ் அடைகொடுத் துக் குறிக்கின்றார். ஞாயிற்றின் ஆற்றலும் ஒளியும் போன்ற பிற இயல்புகள் பொருந்தி யுள்ளதோடு, ஆதித்தன் குலமுதல்வனானமை யும், நீலநிற ஞாயிறன்ன நெடியவனைக் கம்பர் படைக்கக் காரணமாயின எனலாம். பிற்காலத் திய சூரிய நாராயண வழிபாடும், கதிரவனின் பண்டை வடிவும் விஷ்ணு ஆவார் எனும் கருத் தும் இம் முரணிணைவில் நினைத்ததற்குரியன.

இயற்கையின் ஒரு கூறான கதிரவனைக் காப்புக் கடவுளோடு ஒப்பிட்டுக் காட்டுவதன் வன்மை மென்மைகளை அறிந்த கம்பன் சில விடங்களில், அம்மாலின் திருஅவதாரமான இராமனை, கதிரிலும் சிறந்தான் எனக் கற் பித்து நிறைவு காண்கின்றான். இராமன் சீதை யோடு இலக்குவனோடும் அழகே உருவாக வழி நடத்தலைக் காட்டும்போது, 'வெய்யோன் ஒளி தன் மேனியின் விரிசோதியின் மறைய... போனான்' என்கின்றான் கம்பன். எந்தச் சிறு இருளும் இல்லாதபடி உலகம் முழுவதற்கும் பேரொளியளிக்கும் கதிரவனின் ஒளி இராம னுக்கு முன் கைவிளக்கு ஒளிபோல்-மின்மினி போல் மறையும்படி, இராகவன் ஒளிவடிவமாக அமைகின்றான். சோதி வடிவாகக் கடவுளைக் கற்பித்தான் மனிதன்; அதே பெருஞ்சோதி யாக இராமனைக் கண்டான் கம்பன். தன்னில் எள்ளளவும் இருள் இல்லாத இராமனின் ஒளி விடும் வதனத்தின்முன், உருவத்தின் முன் கதிரவன் ஒளிகுன்றி, ஒளியற்று அமைகின்றான்.

கம்பன் மட்டும்தான் இராமனை இவ் வாறு கண்டானோ எனின், இல்லை; கரிய செம்மலைக் கண்டு காமுற்றுப் பெற விழைந்த சூர்ப்பணகையும், கதிரின்மிக்க அவன் ஒளி யிலேயே கருத்துக் கொண்டாள். இராமன் அழகைவியந்துரைக்கும் அவள் ஓர் ஐயம் கொள் கின்றாள். கதிரவன் இவ் வடிவழகனைக் கண்டிருப்பானோ அல்லனோ? கண்டானா யின் அவன் தன் விண்செலவு ஒழித்திருப்பான். இப்பெருஞ் சோதியைக் கண்ட பின்னும் அக் கதிரவன் இறுமாந்து வான்செல முடியாது. ஆனால் மறைக்க முடியாத, மறையாத இப் பேரொளி வடிவை அவ்வெய்யவன் காணா தும் இருக்க இயலாது; அவ்வாறாயின் கண்ட பின்னுமா தன் புல்லிய ஒளி பற்றி நாணமுறாது நடக்கிறான் - எனக் குழம்புகின்றாள் சூர்ப் பணகை. தீய பாத்திரமாயினும் அதன் வாயி லாகக் கம்பனின் கவியுள்ளமே வெளிப்படக் காண்கின்றோம்.

வாள் நிலா முறுவலன் வயங்கு சோதியைக்
காணலனே கொலாம் கதிரின் நாயகன்
சேண் எலாம் புல் ஒளி செலுத்திச் சிந்தையில்
நாணலன் மீமிசை நடக்கின்றான் என்றாள்
(2751)

ஒரு சூரியன் ஒளியோடு, அன்றி அதனை மேற்கொள்ளும் சிறிது மிக்க ஒளியோடு இரா மனைப்படைத்து அமைதிகாணவில்லை. கம்பன் இருளை நீக்கும் பல்லாயிரம் கதிரவன்களை இணைத்து இராமனில் காண்கின்றான். இராமனை எதிர்த்துக் கரனின் படைத்தலைவர் பதினால்வர் பெரும் படையுடன் வந்து பொருகின்றனர்.

பல்ஆயிரம் இருள்கீறிய பகலோன் என ஒளிரும்
வில்லாளனை முனியா வெயில் அயில் ஆம் என
விழியா
கல்ஆர் மழை கணமா முகில் கடைநாள் விழு
வன போல்
எல்லாம்ஒரு தொடையா உடன் எய்தார்
வினை செய்தார்
(2963)

இங்குப் பகலோன் ஒரு குறியீடாக நிற்கின்றது எனலாம். என்றும் அழியாத இறைவனை ஊழி யிறுதியில் உலகம் அழியினும் அழியாது நிற்கும் கதிரவனில் காண்கின்றான் கம்பன். எத்துணை காரிருள் வந்தாலும் அது தினகரனை அவிக்க முடியாது; எவ்வளவு கார் மேகங்கள் குமுமிக் குமுறி மழையாகச் சீறினும் அவை தற்காலிக மாக மட்டும் கதிரை மறைக்கின்றனவேயன்றிக் கதிர் பாரிக்கப்படுவதில்லை. இராமன் கதிர் போன்றான்; பல்லாயிரம் பகலோன் இணைந் தது போன்றவன். அரக்கர் எனும் காரிருள் அவன்முன் உருவிழந்து உயிரிழந்து போதலை

இக் குறியீட்டால் கம்பன் உணர்த்தினான் என லாம்.

கதிரினும் மிக்கோனாக இராமனைக்காட்டு வது இவ்வாறாக, இருவரையும் ஒப்புமைப்படுத் திக் கம்பன் கற்பிப்பதில் மூன்று நிலைகள் அமைகின்றன. ஒன்று, கதிரின் எழுச்சி, மறைவு, செலவு போன்றவற்றிற்கு உவமையாக இராமன் அவன் ஆற்றல் செயல் முதலியன கையாளப் படல். இராமனுக்கும் அவனைச் சார்ந்தவற் றிற்கும் உவமையாகக் கதிரவனும் அதன் சார்புக் கூறுகளும் பயன்படல் இரண்டாம் நிலை. மூன்றாவது, கதிரவன் செயலும் இராமன் செய்கையும் இணையாக அல்லது ஒன்றையொன்று அடுத்துத்தரப்படல் ஆகியன.

சூர்ப்பணகைப் படலம் ஒரு காலைக் கதிரெழுச்சியைக் காட்டும்போது இராமனை உவமையாக்குகின்றது. பொருளும் உவமமும் தடுமாறி வரும் நிலையை இங்குக்காண்கின் றோம். கதிரவன் பல்நிலைகளில் இராமனுக்கு உவமையாகும் நிலை கம்பனில் பரந்து காணப் பட, இங்கு இராமன் கதிரவனுக்கு ஒப்பாகி உவமையாகக் கற்பிக்கப்படுகின்றான். அரக்கர் அழிவுக்கு முன்னோடியாக ஒரு அறிகுறியாகச் சூர்ப்பணகை உறுப்புக் குறைபடுமுன் கதி ரெழுச்சி இவ்வாறு உவமைநயம் பெறுகின்றது.

ஆன்ற காதல் அஃது உற எய்துழி
மூன்று உலோகமும் மூடும் அரக்கர் ஆம்
ஏன்ற கார்இருள் நீக்க இராகவன்
தோன்றினான் என வெய்யவன் தோன்றினான்

இப்பூலோகத்தில் மட்டுமின்றித் தேவருலகிலும் பாதாளத்திலும்கூடப் பரந்து படர்ந்துவிட்ட அரக்கர் ஆட்சியை அழித்தொழிக்க வேர் முதற் கொண்டு களைய அவதரித்த இராகவன் இருள்நீக்கும் இரவிக்குப் பொருத்தமான உவமையாகின்றான். அரக்கர் அழிவு எனும் கருவைச் சுற்றி எழுந்த இராமாயணக் கதை யில் பாவினமாக இவ் அரக்கர் பேரிருளும் இருள் நீக்கும் இராகவனும் அமையும் இயைபும்கம்பன் அதைக்கூறும் திறனும் எண்ணி இன்புறற் குரியன. காப்பியக் கருவோடு இணைந்த கதிர்க் காட்சியை இங்குக் காண்கின்றோம்.

சீதை சிறைப்பட்டிருந்த இடத்தையும் விதத்தையும் அறிந்து வந்த மாருதி, தன் வரவு காத்திருந்த வானரர்களுடன் கிட் கிந்தை மீள்கின்றான். நற்செய்தி காத்து, கிட்கிந்தைப் புறத்துத் தங்கியிருந்த இராமனைச் சேர விரையும் வானரரைக் காட் டும்போது, பின்புல வருணனையில் கதிரவன் செலவும் காட்டப்படுகின்றது. அதன்கண் உவமை வாயிலாக இராகவன் பகழிச்செயல் பகலவனின் போக்குக்கு விளக்கமாகக் கற் பிக்கப்படுகின்றது.

போயினர் களிப்பினோடும் புங்கவன் சிலையில்
நின்றும்
ஏயின பகழி என்ன எழுந்து விண் படர்ந்து
தாவி
காய்கதிர்க் கடவுள் வானத்து உச்சியில் கலந்த
காலை
ஆயின வீரரும் போய் மதுவனம் அதில்
இறுத்தார்

இரவிக்கு ஆற்றலால் இராமனும், செயலால் அவன் பகழியும் உவமையாதலை இங்குப் பார்க்கின்றோம்.

இராமனும் கதிரவனும் தொடர்புறுத்தப் பெறும் இரண்டாம் வகையில் இராமன் பொரு ளும் கதிர்உவமையும் ஆகின்றனர். இதில் இருநிலைகள் அமைகின்றன. இளைஞனும் வீரனுமான இராமனைப் பாலகாண்டத்தில் படைக்கும்போது கதிரவனை மட்டும்காட்டிக் காட்சியமைக்கின்றார் புலவர். முடியும்நாடும் துறந்து கானில் அரக்கரை எதிர்க்கும் காட்சி களைக் காட்டும்போது கதிரவனையும் அதற்குப் பகையான இருள்போன்ற சூழல்களையும் காட்டி வேறுபடுத்துகின்றார். கம்பன் இராம னின் வாழ்வின் இருநிலைகளை இம்மேற் காட்டிய வேறுபட்ட நிலையில் கதிரோடு இணைத்துக் காட்டுகின்றார் எனலாம். முன் னது பகையற்ற நிலை; பின்னது பகைதெறும் நிலை.

கடிமணப் படலத்தில் தேரேறி வரும் இராமனைக் கவினுறப் புனைகின்றான்கம்பன். பொன்னச்சும் வயிரத்தட்டும் நவமணிகளும் பொருந்தி எழிலோவியமாக அமைந்த தேர் 'ஒற்றை ஆழிக் கதிர்த் தேரோடு ஒப்பதே' எனத் தொடர் காட்சியின் முதற்களத்தைக் காட்டுகின்றான். ஒற்றை ஆழிந்தேரில் வரும் கதிரவனுக்கு அருணன்தான் சாரதி. இப்போது இக்கவின் தேர் ஏறிவரும் எழிலோன் இராம னுக்குப் பரதனே கோலேந்திய தேரோட்டி யாகின்றான். ஏழுநாள் போன்று ஏழு புரவி பூண்ட தேர் கதிரவனுக்குரியது; அறம்பொருள் இன்பம் வீடு என்ற வாழ்வுப் பொருண்மை நான்குமே போன்று அமைகின்றன இராமன் ஏறிய தேரின் குதிரைகள். எழுபரி பூண்ட ஒற்றையாழித் தேரை அருணன்" செலுத்த, மேருவை நோக்கிப் பயணம் செய்பவன் செங் கதிரோன் தானே! இதோ, திருமண மண்ட பத்தை நோக்கித் தேர்மேல் செல்லும் இராகவ னும் வெஞ்சுடர்க் கடவுளே போன்று வரு கின்றான்.

எஞ்சல் இல் உலகத்து உள்ள எறிபடை அரச
வெள்ளம்
குஞ்சரக் குழாத்திற் சுற்றக் கொற்றவன்
இருந்த கூடம்
வெஞ்சினத் தனுவலானும் மேருமால் வரையில்
சேரும்
செஞ்சுடர்க் கடவுள் என்னத் தேரிடைச்
சென்று சேர்ந்தான்
(1236)

அலர்மகளாம் திருமகளின் கரம்பற்றக் கதிரவ னாம் இராமன் செல்லும் இக்காட்சி, தாமரை முகையவிழச் சூரியன் உதயம் செய் யும் காலைக் காட்சியின் எழில்கொண்டுள்ளது.

இராமனை எதிர்க்கத் துணிந்து புறப் பட்ட கரனின் பெரும்படைக் காட்சியைக் கதிர் மேல் போரிடப் போன காரிருளாகக் காட்டு கின்றான் கம்பன். கதிரவனை யாரும் எதுவும் செய்ய முடியாது; காரிருள் என்ன செய்து விடும்? சாதாரணக் கதிரவன் நிலையே இது வெனில் அருளே திரண்டு உருவாகிய அருக் கனை யார்தான் வெல்ல முடியும். அன்புக்கு முன், அருளுக்கு முன் எத்தீமையும் உருகி இல் லாதாகி விடுமே. கதிரவன் ஒருவனே ;தனித் தவனே. ஆயின் அதே வேளை ஒப்பற்றவன்; தன்னிகரில்லாதவன். கதிரவன் எழுமுன்வரும் ஒளியாலேயே கரைந்து ஓடிவிடும் இருட்டு எவ் வாறு பகையாக முடியும். கம்பனின் கற்பனை உள்ளம், இருளே உருவாகவே கண்டது. நாகம் உயிர்ப்பக் கெடும் எலிப்பகை போல, கதிர் பார்க்கக் கெடும் இருட்பகையை எண்ணி இணைக்கின்றான். இரண்டின் முரண், கற் பனைக்குக் கவின் அளிக்கின்றது. இராமன் அருட்கதிரவன் ஆகின்றான்; பறைகொட்டிப் படை திரண்டுவரும் அரக்கர்இருட்பகையாகின் றனர்.

முருடு இரண்டு முழங்குறத் தாக்கஒலி
உருள் திரண்டு எழும் தேர் ஒலியுள் புக
அருள் திரண்ட அருக்கன் தன்மேல் அழன்று
இருள் திரண்டு வந்து ஈண்டியது என்னவே
(2902)

இராமனைப் பகை தெறுதலில் கதிராகவே காட்டி வரும் கம்பன், அவனை எதிர்க்கும் அரக்கரை இருளாகக் காட்டியது போன்று பனி யாகவும் படைக்கின்றான். கதிரவனின் முன் எவையெவை நிற்கும் ஆற்றலற்று மறைந்து விடுகின்றனவோ அவையெல்லாம் இராமனை எதிர்ப்பவர்க்கு உவமையாகி, ஒரே படிவம் மீண்டும் மீண்டும் வரினும், கூறுகள் வேறு பட்டுச் சலிப்புத் தோன்றாவண்ணம் நயம் காட்டுகின்றன. கரன்வதைப் படலத்திலேயே மீண்டும் கதிரவனாக இராமனைப் பகைவென்ற நிலையில் காட்டும்போது, பனி போக்கிய பகல வனாகப் போற்றுகின்றார். எத்துணைப்பெரும் பகையாயினும், அது இராமனுக்கு வெலல் மிக எளிது என்பதை வலியுறுத்தும் வண்ணம் இத்தகு உவமைகளைக் கையாளுகின்றான் என லாம்.

ஆர்த்து எழுந்தனர் ஆடினர் பாடினர்
தூர்த்து அமைந்தனர் வானவர் தூய்மலர்
தீர்த்தனும் பொலிந்தான் கதிரோன் திசை
போர்த்த மென்பனி போக்கியது என்னவே
(3060)

கும்பகருணனின் படை இராமன் முன் அழிந் ததையும் 'பனிப்பட்டாலெனக் கதிர்வரப்படுவ பட்டது அப்படை' எனப் படைத்தான் கம்பன்.

பகைவரைப், பகைப் படையை இருள்திர ளாகவும் பனித்திரளாகவும் படைத்துக் காட் டிய கம்பன், தனிப்பகையைப் பாம்பாகக்காட்டு கின்றான். அறிவியல் அடிப்படையில் இன்று சூரிய கிரகணம் விளக்கப்பட்டாலும், இராகு எனும் பாம்பு, அமாவாசையன்று கதிரவனை விழுங்க முயற்சித்தலே அது என்ற பழ மரபுக் கற்பனை, இன்றும் மக்களிடையே வழங்கி வரும் ஒன்று. இராமனை, 'ஆரணத்தை அரியை மறைதேடும் காரணத்தை' முதன்முறைகண்டு வெகுண்ட இராவணனை, வானமெங்கும் செவ் வொளி பரப்பி ஒளிரும் கதிரவனைக் கண்டு வெம்பி வெகுண்டு எதிர்க்கும் இராகு எனும் பாம்பாகக் காட்டினான். மரபுக் கற்பனையே யாயினும் அதனைக் கம்பன் பயன்கொள்ளும் நிலை சிறப்புடையது. இராகு கதிரவனை விழுங்கி அழித்துவிட முடிவதில்லை. அம் முயற்சி, தற்காலிகமாகக் கதிரை மறைக்கவோ ஒளிகுறைக்கவோ செய்ய இயலுமேயன்றி, விரைவில் கதிரவன் முழு ஒளியுடன் வெளிப் பட்டு விடுவது கண்கூடு. அவ்வாறே இராவண னின் பகையால் இராமன் சிறிது காலம் துன் புறினும் வெற்றி பெறுவான். முழுநிலை மீட்சி யடைவான் என்பதையும் கதிரைப் பாம்பால் விழுங்க இயலாததுபோல், இராமனை இராவண னால் அழிக்க இயலாது என்பதையும் காட்ட இக்காட்சி பொருத்தமாக அமைகின்றது.

ஆக ராகவனை அவ்வழி கண்டான்
மாகராக நிறை வாள் ஒளியோனை
ஏக ராசியின் எய்த எதிர்க்கும்
வேக ராகுஎன வெம்பி வெகுண்டான்

கவிஞன் தன் காவிய ஆக்கத்திற்கு மக்கள் நம்பிக்கைகளையும் சமுதாயப் பழக்க வழக்கங் களையும் தன் காலக் கொள்கைகளையும் அரசி யல்கோட்பாடுகளையும் எல்லாம்பயன்படுத்தித் தன்படைப்புக்குச் சாதகம் ஆக்கிக் கொள்கின் றான். இராமன், அனுமன், கருடன் இவர் களைக் காட்டும்போது அரக்கர் அழிவுக்கு உற் பாதமாக-தீநிமித்தமாக அவர்கள் அமைந்ததை உணர்ந்து பல இடங்களிலும் படைக்கின்றான் கம்பன். கீழ்த்திசை தோன்றி மேற்றிசை வீழும் கதிரவன் திசைமாறி எழுவது அழிவுக்கு உற்பாதமாக அமைந்ததைப் பண்டைத் தமிழர் நம்பிக்கையாகவும் காண்கின்றோம். சங்கச் சான்றோர் நாற்றிசையில் கதிர் தோன்றியதை உற்பாதமாகக் கருதினர். கம்பன் இலங்கை காண் படலத்தில், இராமன் பரிவாரங்களுடன் மலைமேலேறி நின்று இலங்கையைக் காண் பதைக் காட்டும்போது, வடக்கில் கதிரவன் உதித்தது போன்றிருந்தது என அரக்கர் அழி வுக்கு அதனை ஒரு தீநிமித்தம் ஆக்கினார். கருஞாயிறு என்ற இல்பொருள்உவமைஅமைந்து அரக்கருக்கு அவன் அழிவுக் குறியானதையும் உள்ளுறுத்தியது எனலாம்.

கதம் மிகுந்து இரைத்துப் பொங்கும்
கனைகடல் உலகம் எல்லாம்
புதைவு செய்இருளிற் பொங்கும்
அரக்கர் தம் புறமும் பொற்பும்
சிதைவு செய் குறியைக் காட்டி
வடதிசைச் சிகரக் குன்றின்
உதயம் அது ஒழியத் தோன்றும்
ஒரு கரு ஞாயிறு ஒத்தான்

இங்கும் அரக்கர் இருளாகவும் இராமன் அதை அழிக்கும் கதிராகவும் பொருந்துகின்றனர்; கூறி யதையே கூறினாலும், உற்பாதம் பற்றிய

புதுமைக் கருத்து இங்கு ஒரு புத்தம்புதுக் கற்பனையை ஆக்குகின்றது. சூரியகிரகணம் பற்றிய நம்பிக்கை போன்றே இங்குத் திசைமாறி உதிக்கும் ஒளியோன் பற்றிய எண்ணம் கோட்பாடாகிக் கற்பனைக்குக் களன் அமைத்துள்ளது.

மூலபல வதையை வருணிக்கும்போதும் கம்பன் இராமனுக்கும் பகைக்கும் இதே படிமங்களைக் கையாளுகின்றான். இராமன் தனியே நின்று ஆற்றல் மிக்க அப்படையுடன் பொருகின்றான்; அரக்கர் குழுமி இராமனை எதிர்க்கின்றனர். 'பகலோனைப் பற்றிச் சுற்றும் கார்ப்பருவ மேகம் என வேக நெடும்படைஅரக்கர் கணிப்பிலாதார் முயன்றனர்; ஆயின் முறியடிக்கப்பட்டனர். இராமன் வெற்றியுடன் பொலிகின்றான். 'பேர் இருளின் நீங்கிப் பிறிந்தனன் வெய்யவன் என்னப் பெயர்ந்தனன், மீது உயர்ந்த தடம் பெரிய தோளான்'. வெற்றி பெற்ற இராமனைப் போர்க்கள அழிவுகட்கு நடுவே வருணித்துக் கூறுகின்றான், கம்பன். யுக இறுதியில் உள்ள கதிரவனின் நிலையைக் கற்பனைக் கண்கொண்டு கண்டு, களக் காட்சியையும் கவினுறக் காட்சியாக்குகின்றான். கதிரவனின் வெம்மை உலகை வளப்படுத்துகின்றதேயன்றி அழிப்பதில்லை. ஆயின் ஊழிக் கடைநாளில் ஐம்பூதங்களும் இயற்கை ஆற்றல்களும் உலகை அழிக்கும் என்பது பழமரபுக் கற்பனைச் சார்பாக வந்த நம்பிக்கை. போரிட்டதால் அரக்கர் உடலிலிருந்து தெறித்த குருதி, இராமன் கரு உடலைச் சிவப்பாக்கியது. குருதியில் குளித்து எழுந்தவன் போல் கணைப்பட்டான் அவன். சாதாரணக் கதிரவனைவிட வெம்மையும் செம்மையும் மிக்கு அமைந்த ஊழிக்காலக் கதிரை அவ்வுடல் நினைவூட்டியதில் வியப்பில்லை.

> பட்டார் உடல் படு செம்புனல்
> திருமேனியில் படலால்
> சுட்டு ஆர் சிலைக் கருஞாயிறு
> புரைவான் கடையுக நாள்
> சுட்டு ஆசு அறுத்து உலகு உண்ணும்
> அக் கதிரோன் எனப் பொலிந்தான்
> ஒட்டார் உடல் குருதிக் குளித்து
> எழுந்தானையும் ஒத்தான்

இங்குப் பிற இடங்கள் போலன்றி, உருவவுமையமைகின்றது. வினை-பயன் உவமைகளிலேயே இராமனையும் இரவியையும் பொருத்திக் காண்பதோடு நின்றுவிடாது உருவையும் இணைத்துத் தருகின்றான் கவிஞன்.

இராமனைக் கதிரவனிலும் மிக்கோனாகவும், இருவரையும் ஒருவரையொருவர் பல் நிலைகளில் ஒப்போராகவும் தந்த கம்பன், சில காட்சிகளில், உவமையின்றியும் இருவரையும் இணைத்துத் தருகின்றான். இத்தகு இணைக் காட்சிகள் மிகவும் புதியன. இராமனைக் காட்டும்போது கூடவே கதிரவனைக் காட்டுவதும், கதிர்ச் செயலைக் காட்டும்போது உடனேயே இராமன் செயற்பாட்டைப் படைப்பதும் இராமனிடம் கொண்டது போன்றே கம்பன் கதிரவனிடம் மனத்தைப் பறிகொடுத்திருந்தானோ என்ற எண்ணத்தையும் எழுப்புகின்றது.

எளிய காட்சிகளும் அழகுறு காட்சிகளும் இவ்விணையமைப்பின்கண் காணப்படுகின்றன. தனிமைத் துயரால் வருந்தி விடியலை எதிர்பார்க்கும் சீதை, 'கதிரோன் வரவே எனை ஆள் உடையான் வருமே' எனப் பருதி வரவையும் வரதன் மணம்புரிய வரலையும் இணைக்கின்றான். ஆரணியத்தில், பிரிந்த சீதையைத் தேடியலையும் இராமன் 'முனிவர் தம்தொகுதி சேர் சோலைவாய் மாடு தான் வைகினான்; எரி கதிரும் வைகினான்' என இணைக்கின்றான் கம்பன். வழிவேண்டக் கடலை அணுகிய இராமனையும் உதயகிரிமேல் எழுந்த காலைக் கதிரவனையும் இவ்வாறே இணைக்கின்றான் கவிஞன்.'உரவோன் சென்றுவேலையைச்சேர்தலும் விசும்பிடை சிவந்த குன்றின்மேல் நின்று குதித்தன பகலவன் குதிரை' என.

இவ்வாறு எளிய நிலையில் நிகழ்ச்சிக் கூற்றாக அமைவனவன்றி, எழிலோவியங்களான இணை நிலைகளும் காப்பியத்தில் காணப்படுகின்றன. அயோத்தி நீங்கிக் கங்கைக்கரையில் குகனின் அன்பைப் பெற்று, இலக்குவன் காவல் நிற்கத் துயின்றெழுந்தனர். காலைக்கதிர் எழுச்சி, தாமரை மகிழப் பொருந்துகின்றது. துயில் நீங்கிய செய்யோனான இராமன், சீதையான மலர்களின் தாமரை வதனத்தை மலர்விக்கின்றான்.

> செஞ்செவே சேற்றில் தோன்றும்
> தாமரை தேரில் தோன்றும்
> வெஞ்சுடர்ச் செல்வன் மேனி
> நோக்கின விரிந்த வேறுஓர்
> அஞ்சன ஞாயிறு அன்ன
> ஐயனை நோக்கிச் செய்ய
> வஞ்சி வாழ் வதனம் என்னும்
> தாமரை மலர்ந்தது தன்றே

நீடிக்கும் இரவில் மூவுலக உயிர்களும் துயில, சீதையைப் பிரிந்ததால், இராமனின் பழுதுஇல் கண் துயின்றில. இரவில் ஒளியளிக்க உலாவந்த சந்திரனும் எரிகதிரினனாக இராகவனுக்குத் துன்பம் அளிக்கின்றான். நாடிழந்து, அரசிழந்து, தந்தையும் இழந்து தமரைப் பிரிந்துஇப்போது மனைவியையும் பறிகொடுத்து நிற்கும் அவனுக்கு இரவு பகையாகின்றது. சீதையைத் தேடும் அவனது அப்போதைய செயலுக்குத் தடையாகும் இரவு என்று விடியுமென நோக்கியிருந்தவனுக்கு விடியல் வந்தது ஓரளவு துயர் நீக்குகின்றது.

> பொங்கி முற்றிய உணர்வு
> புணர்தலும் புகையினொடு
> பங்கம் உற்றனைய வினை
> பரிவுறும்படி முடிவு இல்
> கங்குல் இற்றது கமலம்
> முகம் எடுத்தன கடலின்
> வெங்கதிர்க் கடவுள் எழ
> விமலன் வெந்துயரின் எழ

மெய்யறிவு சேரும்போது மாயையும் பற்றும் நீங்குவதுபோல், விடியல் வந்ததும் துயர் நீங்கிக் கதிருடன் எழுந்து காரியத்தில் முனைகின்றான் செம்மல்.

இத்தகு எண்ணம் காரணமாக, உலகம் இரு கதிரவர்களை உடைத்து என்ற சிந்தனை, கம்பன் மனத்தில் பதிந்து விடுகின்றது. பகலில் மட்டும் ஒளி தருபவன் பகலவன்; என்றும் மக்கட்கு ஒளியாக இருப்பவன் இறைவன். பருதி புறஇருளை மட்டுமே கடியமுடியும்; இறைப் பக்தி அக இருளையும் நீக்கி உள்ளொளி பெருக்கும். வெய்யவன் அருவமான இருளை நீக்கினான்; அவன் நீங்கினால் இருள் மீண்டும் வந்து விடும். இராமனோ அருவமாக மறைந்தும் உருவமாக வெளிப்பட்டும் இருந்த அரக்கர் குலத்தை வேரொடு அறுத்தான்; முற்றிலும் களைந்ததால் அது மீண்டும் முளைத்திலது. அகப்புறத் தீமைகளுக்குப் படிவமாகவே அரக்கரும் குறியீடாகவே இருளும் வந்தது எனலாம். தீமையை ஒழித்து, உள்ளும் புறமும் ஒளியே மிளிரும்படி செய்யும் ஆற்றலன் பேராற்றலான இறைவன் ஒருவனே.

அரக்கரும் வானரரும் பொருது முடிந்த காலைப்போதை வருணிக்கும்போது கம்பர் படைக்கும் கற்பனை இக்கருத்தை நிறுவுகின்றது.

அரக்கர் என்ற பேர் இருளினை
இராமன் ஆம் இரவி
துரக்க வெஞ்சுடர்க் கதிரவன்
துரந்து இருள் தொலைக்கப்
புரக்கும் வெய்யவர் இருவரை
உடையன போல
நிரக்கும் நல்ஒளி பரந்தன
உலகு எலாம் நிமிர

இராமனையும் இரவியையும் இணைப்பதன் உச்சநிலையாக இது அமைகின்றது.

—o—

# "ஈடு"—பெயர்க்காரணம்

வடக்குத் திருவீதிப்பிள்ளை என்பவர் எழுதியருளிய திருவாய்மொழி முப்பத்தாறாயிரப்படி வியாக்கியானத்துக்கு ஈடு என்று பெயர்.

தெள்ளியதா நம்பிள்ளை செப்பும் நெறிதன்னை
வள்ளல் வடக்குத் திருவீதிப்— பிள்ளை
நாடறிய மாறன் மறைப்பொருளை நன்குரைத்தது
ஈடு, முப்பத் தாறா யிரம்.

இங்ஙனம் 'ஈடு' என்னும் பெயர் அமைந்ததற்குப் பின்வருமாறு பல விளக்கங்கள் அறிஞர்களாற் கூறப்படுகின்றன. (1) ஈடு-இடுதல், அணியப் பெறுதல் ; அதாவது உடலின் மேல் அணிந்து கொள்ளப்படுவது என்னும் பொருளில், கவசம் என்பதனைக் குறிக்கும். கவசமானது உடலைக் காப்பது போன்று, இம்முப்பத்தாறாயிரப்படி வியாக்கியானமும், கற்போராலும் எழுதுவோராலும் வேற்று மக்களாலும் தன்னிலையில் திரிந்து மாறுபட்டு விடாதபடி, திருவாய்மொழியின் பொருளைப் பாதுகாத்துக்கொண்டு விளங்குதலின், ஈடு என்ற சிறப்புப் பெயரினைப் பெறுவதாயிற்று.

(2) ஈடு-இடுதல்; எழுதுதல். நம்பிள்ளை என்னும் வைணவ சமயப் பெருந்தகையார், நாள்தோறும் தம் காலட்சேபத்தில் அருளிச் செய்து கொண்டு வந்தனவற்றை, அங்ஙனமே வடக்குத் திருவீதிப்பிள்ளை ஏட்டில் எழுதி வைத்துப் போற்றிக் காத்தனராதலின், இதனை ஈடு என வழங்கினர் எனலும் பொருந்தும்.

(3) ஈடு-ஒப்பு. பிரம சூத்திரத்திற்கு இராமாநுசர் செய்தருளிய ஸ்ரீபாஷ்யம் விளக்கும் ஆழ்பொருள்கள் அனைத்தும் விளங்கும் பொருட்டுச் சுதரிசன பட்டர் என்பவர் இயற்றிய 36,000 கிரந்தங்களையுடைய சுருதப் பிரகாசிகை என்னும் நூலுக்கு ஒப்பு ஆகும்படி இயற்றப் பெற்றதனால், இஃது ஈடு எனப் பெயர் பெறுவதாயிற்று எனவும் கொள்ளலாம்.

(4) திருவாய் மொழியின் சிறந்த பொருள் நலங்களில், மக்கள் அனைவரும் மகிழ்ந்து ஈடுபடும்படி செய்து வருவதாகலின், ஈடு எனப் பெயர் ஏற்பட்டது எனினும் அமையும்.

''மாறன் மறைப் பொருளை
ஈடுபடும்படியிறே அருளிச் செய்தது''

என்பது பிள்ளைலோகஞ்சீயர் வியாக்கியான சூக்தி. (உபதேசரத்தினமாலை—44).

—ஆசிரியர்

# இயற்கையும் இறைவனும்

'சித்தாந்தக் கலைச்செல்வர்'
திரு. க. வச்சிரவேல் முதலியார், B.A.L.T., காஞ்சிபுரம்.

இயற்கை என்பது உயிர்கள் உடம்போடு கூடித் தோன்றி வளர்வதற்கும், பின் அவ்வுடம்பு தேய்ந்து கெட அதனினின்று பிரிவதற்கும் இடமாகவும், சூழ்நிலைச் சார்பாகவும் உள்ள உலகும், உலகத்துப் பொருள்களும் ஆகும். இவை பருவ மாறுதலும் வெப்ப தட்ப மாறுதலும் உடையனவாய், தோற்றம் நிலை மறைவு என்னும் முத்தொழிற்பட்டு இயன்று வருதலின், இயற்கை எனப்படுகின்றன.

ஊன்றி நோக்கும்போது இயற்கை என்பது அறிவுடைப் பொருளும் அறிவில் பொருளும் என இருவகைப்பட நிற்றல் புலனாகும். அறிவில் பொருள்கள் தமக்கு உள்ள இயங்குநிலை, இயங்காநிலை என்னும் இரண்டிலும் தொடர்ந்து நிற்பதும், அத் தொடர்ச்சியில் மாறுதல் இருப்பின் அதற்குக் காரணமாக ஏதேனும் புதுத் தடை அல்லது ஆற்றலால் அம் மாறுதலை அடைவதுமாக உள்ளன என்பது விஞ்ஞானத்தின் துணிவு. அறிவுடைப் பொருள்கள் அங்ஙனம் அன்றித் தாமே துணியும் துணிவு உடையவையாய், அறிவில்பொருள்களைத் தமக்கு உதவியாயிருக்கும்படி மாற்ற வல்லனவாய் உள்ளன.

இவற்றுள் அறிவுடைப் பொருள்களாகிய உயிர்கள் எல்லாம், தமக்கு வரும் துன்பத்தின் நீங்கவும், இன்பத்தை வளர்த்துக் கொள்ளவும், நீடுதலாக வாழவும் விரும்புகின்றன, முயல்கின்றன. இவ்விருப்பத்திற்கும் முயற்சிக்கும் துணையாயிருந்து உதவும் உயிர்ப் பண்புகள் உணர்ச்சியும் பகுத்துணரும் மனவுணர்ச்சியும் எனக் கூறலாம். ஆயினும், இவ்வுணர்ச்சியும், பகுத்துணர்வும் இவற்றினால் நிகழும் முயற்சியும் குறித்த பயனை எப்பொழுதும் குறைவின்றித் தருகின்றன என்பது உறுதியன்று. இதனால், உயிர்களுக்குத் தாமே துணிந்து செயலாற்றும் திறன் இருப்பினும், அவை தம் வயம் உடையவை அல்ல என்பது விளங்குகின்றது.

இங்ஙனம் உயிர்கள் மாற்றம் பெரிதும் உள்ள உலகில் தம் வயம் இன்றி வேறுவேறு அறிவும் துணிவும் உடையனவாய் வாழவேண்டுதலின், இவற்றைத் தன் ஆற்றலுள் அடங்கக் கொண்டு ஆட்சி புரியும் ஒரு பேரறிவுப்பொருள் தன் வயமும், இயற்கை முற்றுணர்வும் உடைய தாய் உள்ளது எனவும், அஃது உடலின்கண் உள்ள உயிர்போலப் பல்வேறு அண்டங்களாய் அளவுட்படாது பரந்து விரிந்துள்ள இயற்கையாகிய உடலுக்கு உயிராய் உள்ளது எனவும், உயர்ந்தோர் தம் மெய்யுணர்வால் கண்டு கூறி வருகின்றனர்.

''உரைசேரும் எண்பத்து நான்குநூ
றாயிரமாம் யோனி பேதம்
நிரைசேரப் படைத்தவற்றின்
உயிர்க்குயிராய்
அங்கங்கே நின்றான்கோயில்
வரைசேரும் முகில்முழவ மயில்கள்பல
நடமாட வண்டுபாட
விரைசேர்பொன் இதழிதர மென்காந்தள்
கையேற்கும் மிழலையாமே''

என்பது திருஞானசம்பந்தர் வாய்மொழி.

இப்பாட்டில் ஆளுடைய பிள்ளையார் இயற்கையினையும், இறைவனையும் ஒன்றாக இணைத்து, உண்மையை நன்மைபெருகும்படி அழகுருவில் படைத்துத் தருகின்றார். உயிர்கள் அளவற்ற வேறுபாடு உடையன ஆயினும், அவை மக்கள் தேவர் விலங்கு பறவை முதலியனவாகவும், அவற்றின் உட்பிரிவனவாகவும் நிரல்பட நின்று தொழிற்படுகின்றன. இவற்றைப் படைத்தவன் ஒருவன் உளன். அவன் இவற்றை நிரைசேரப்படைத்தமையால் முதல்வன் எனப்படுவன். அவன் உயிர்க்குயிராய் நின்று அவற்றை அறிவித்தும் செயல்படுத்தியும்வருதலின் இயவுள் எனக் குறிக்கவும் தக்கவன். மேலும் எவ்விடத்து எவ்வகைப் பொருட்கண்ணும் தங்கி நிற்றலின் அவன் இறைவன். இறு என்னும் பகுதி இறுத்தல், தங்குதல் என்னும் பொருளைத் தருவது.

அவன் எங்கும் தங்கி எப்பொருளையும் இயக்கி நிற்பினும், சிற்சில இடங்களில் தம் இருப்பு நன்கு விளங்கும்படி உயிர்களுக்கு அணுக்கமாக இருந்து அருள்புரிவன். இறைவன் கலை உருவினனாக, பேரறிவும் பேரின்பமுமே தன் வடிவாக உணரப்படுவோன். ஆதலால் விளங்கும் இடம் கலையரங்கமாகப் பேரின்பச் சூழலாக உள்ளது. இங்ஙனம் அவன் திருக்கோயில் கொண்டு தன் அருள் விளங்கி வெளிப்

பட உள்ள இடம் திருவீழிமிழலை. அங்கு மேகம் சோலைகளின் மேல்படிந்து முழவு போல இன்னோசை காட்டி, பின் சொரியும் மழைக்கு அறிகுறியாக அதிர்கின்றது. காரைக் காணும் மயில்கள் பலவும் தம் வண்ணத் தோகைகளை விரித்து நடமாடுகின்றன. வண்டுகள் பாடுகின்றன. உயர்ந்து வளர்ந்து சிவபெருமான் வடிவே என நிற்கும் கொன்றை மரம் தன் மலர்களாகிய பொற்காசுகளைச் சொரிகின்றது. பெண்மக்களின் கைவிரல்கள் போல் மலர்ந்துள்ள காந்தள் மலர்கள், அவற்றை ஏற்றுக் கொள்ளுகின்றன.

'தான் ஆடத் தன் தசை ஆடும்' என்பது மக்கள் வழங்கும் முதுமொழி. இது கூத்தப் பெருமானுக்கே மிகப் பொருத்தமானது. அவன் ஆனந்தக்கூத்தன். அவன் தசையே உடம்பே, உலகு. அவன் 'பாரும் நீரொடு பல் கதிர் இரவியும் பனிமதி ஆகாசம் ஒரும் வாயுவும் ஒண்கனல் வேள்வியில் தலைவனுமாய்நின் றான்'. அவனை அகத்தே கொண்டார்க்கு ஆனந்தம் அன்றி வேறு நுகர்ச்சி ஏது?

மேலே காட்டிய சம்பந்தர் ஒண்தமிழ், இயற்கையினையும் இறைவனையும், இயற்கையோடு இறைவனுக்கு உள்ள பிரிப்பில் சம்பந்தத்தினையும், சொல்லோவியமாகத் தீட்டிக் காட்டித் தத்துவம் சமயம் கலை என்னும் மூன்றனையும் சேர்த்ததொரு மும்மணிக் கோவையாக உள்ளது. அஃது உணர்வும் இன்பமும் என்றும் பெருக்கும் அழிவில் பொருளாய் நிகழ்தல் உணர்ந்து நுகர்ந்து இன்புறுதற்கு உரியது. அழகிய பொருள் என்றும் வற்றா இன்ப ஊற்று!

இயற்கையினையும் இறைவனையும், முடிந்த தத்துவ நூல்கள் வழி நின்றுதொடர்பு படுத்தி உணரும் தத்துவ நூலோர்க்குள், சில கருத்து வேறுபாடுகள் உள்ளன. சிலர் முதல்வனே உலகாகவும் உயிர்களாகவும் உருவு திரிந்து (பரிணமித்து)காணப்படுகிறான் என்பர். வேறு சிலர், ஒருவன் அறிவு மயக்கத்தினால் கயிற்றை அரவாகக் காணுதல் போல, முதற் பொருளே தனக்குள் மயங்கித் தன்னை உலகாகவும் உயிராகவும் வேறுபடுத்திக் கண்டு வருகிறது என்பர். ஆயின் முதல்வனை இறைவன் என வழங்கிய பழந்தமிழ்ச் சான்றோர், இவ்விரண்டு கொள்கைகளுள் எதனையும் உடையர் அல்லர் என்பது, அச்சொல்லியல் பால் விளங்குகின்றது. உலகும் உயிர்களும் உள்பொருள்; முதல்வனும் உள்பொருள். உலகு மாற்றம் அடையும் அநித்தப் பொருள். உயிர்கள் உடம்பிற் பிரிந்து இறந்தும், அதனோடு கூடிப் பிறந்தும் வருவது; அறிவிக்க அறியும் செயற்கைச் சுட்டறிவு உடையது. முதல்வன்இயற்கை முற்றுணர்வுள்ள பேரின்பச் செம்பொருள். இயற்கை இறைவனுக்கு உடம்புபோல உள்ளது, அவன் அதற்கு உயிர்போல உளன் என்பதே உயர்ந்தோர் பலரும்கொண்ட முடிந்தஉண்மை. இவ்வுண்மையை அழகாக விளக்கி உளங்கொள வைப்பது, திருஞான சம்பந்தர் அருளிய மேற்குறித்த திருப்பாட்டு.

---

# அட்டமா சித்திகள்

'அட்டமா சித்தி அணை தரு காளத்தி' என்பன போன்ற, பற்பல தேவாரத் திருமொழிகளிற் குறிப்பிடப் பெற்றுள்ள அட்டமா சித்திகள் என்பவை பின்வருமாறு :—

1. அணிமா : அணுவினும் சிறிய அணுவாக நுணுகி விளங்கக் கூடிய தன்மை.
2. மகிமா : மிகவும் உயர்ந்த பெரிய மேரு மலையைப் போல உயர்ந்த பெரிய நிலையிற் பிறங்கும் பெற்றிமை
3. இலகிமா : மிகப்பெரிய மேரு மலையைப் போன்று விளங்கினாலும் எடுத்தற்கு எளிதாக இருக்கும் இயல்பு.
4. கரிமா : அணுவைப்போல நுணுகிச் சிறிய நிலையில் இருந்தாலும் மேருவைப் போல எடுத்தற்கரிய நிலையில் கனத்திருக்கும் பண்பு.
5. பிராப்தி : நினைத்த அளவில் எவ்வுலகங்களிலும் எல்லா இடத்தும் சென்று உலவி வரக்கூடிய ஆற்றல்.
6. பிராகாமியம் : கூடுவிட்டுக் கூடுபாய்தல், விரும்பிய போகங்களை நுகர்தல், முக்காலத்து நிகழ்ச்சிகளையும் உணரப்பெறுதல் போன்ற திறம் பெற்றுத் திகழ்தல்.
7. ஈசத்துவம் : இறைவனைப் போலத் தாம் விரும்பிய வழி, ஆக்கல் அளித்தல் அழித்தல் ஆகிய முத்தொழில்களையும் செய்யவல்லராதல்.
8. வசித்துவம் : தேவர் மூவர் யாவரையும், எல்லா உலகத்துயிர்களையும் தம் ஏவலுக்கு அடங்கி ஒழுகுமாறு தம்மிடம் வசப்படுத்திக் கொள்ளக் கூடிய திறலைப்பெற்று விளங்கல்.

—ஆசிரியர்.

# வைணவத்தின் சிறப்பு

மகாவித்துவான்

திரு. பி. ப. அண்ணங்கராச்சாரிய சுவாமிகள், காஞ்சிபுரம்

ஆதிகாலமாகவே உலகில் பலபல மதங்கள் தோன்றி வேரூன்றியுள்ளன. மதமெனினும் கொள்கையெனினும் ஒக்கும். மதமென்பது வடமொழி, கொள்கையென்பது தென்மொழி. பொருள் ஒன்றே. ஒரு பெருங்கூட்டத்தார் கொண்ட கொள்கையையே மதமென வழங்குவர். வைணவம், சைவம், துவைதம், அத்வைதம், விசிஷ்டாத்வைதம் என வழங்கும் சில மதங்களே தென்னிந்தியர் பெரும்பாலும் அறிந்தவை. வடஇந்தியாவில் வல்லபமதம், நிம்பார்க்கமதம், சைதன்யமதம்..என்றிப்படி எண்ணிறந்த மதங்கள் வழங்குவது காணலாம். பொதுவாக மதத்தை இருவகையாகப் பிரிப்பர் பெரியோர். வைதிகமென்றும் அவைதிகமென்றும். வேதத்தைப் பிரமாணமென்றுஇசைந்து அதை அடிப்படையாகக் கொண்டு தோன்றிய மதம் வைதிகம் எனப்படும். அங்ஙனமல்லாதது அவைதிகம் என்று தன்னடையே விளங்கும். துவைதம், அத்வைதம், விசிஷ்டாத்வைதம் என்னும் மதங்கள் வேதத்தையே அடிப்படையாகக் கொண்டு தோன்றியவையாயினும், வேதம் பொருள்களை வெவ்வேறு வகையாகக் கொள்ளுங் காரணத்தினால் மதபேதம் ஏற்பட்டது.

வைதிக மதங்களுள் ஒன்றாகிய வைணவ மதத்தைப் பற்றி இங்குக் கூறுவோம். வைணவ மதம் அல்லது ஸ்ரீவைணவ சம்பிரதாயம் என்பதே வைணவம் எனப்படுகிறது. இதனை இராமாநுச மதம், இராமாநுச சம்பிரதாயம், எம்பெருமானார் தரிசனம் என்கிற பெயர்களாலும் வழங்குவதுண்டு. இதனால் எம்பெருமானார் எனப்படுகிற இராமாநுசர் காலந் தொடங்கித் தோன்றிய மதம் வைணவ மதம் என்று சிலரோ பலரோ எண்ணிவிடுவதும், சொல்லிவிடுவதும் உண்டு. உண்மை அங்ஙனமல்ல. ஆழ்வார் காலத்திலும் அவர்கட்குப் பிறகு நாதமுனிகள் என்னும் ஆசாரியருடைய காலத்திலும் தழைத்தோங்கிய மதம் வைணவம்; நாதமுனிகள் என்பவர் இராமாநுசர்க்கு மூந்நூறு வருடங்கள் முற்பட்டவர். இடையில் ஆளவந்தார் என்கிற பிரபல பண்டிதரான பேராசிரியர் தோன்றி வைணவக் கோட்பாடுகளை உணர்த்தும் பல நூல்களை (வடமொழியில்) இயற்றியுள்ளார். அவ்வாசிரியருடைய சீடர்களை அடிபணிந்து பெரும்புகழ் பெற்றவர் இராமாநுசர். இவர் அவதார புருஷராகிப் பலபல கலைகளும் பயின்று விள்க்கில் கொளுத்தின தீவட்டிபோல் மிக மேம்பட்டு விளங்கினபடியால், இவரது திருவடிகளை ஆயிரக்கணக்கான சீடர்கள் பணிந்து உய்வு பெற, அன்னவர்கள் முகமாகவும் வைணவம் உலகில் பரவி மிக்க வீறுபெற்றது.

வைணவத்தின் கொள்கையைச் சுருக்கமாகச் சிலர் தெரிந்து கொள்ள விரும்பினால், தத்துவம் இதம் புருஷார்த்தம் எனப்படுகின்ற மூன்றில் வைணவர்களின் சித்தாந்தத்தை உணரப் பெற வேண்டும். பரதெய்வமாகக் கொள்ளப்படுவது எது? அதனை அடையும் வழியாகக் கொள்ளப்பட்டது எது? அடைந்த பிறகு கொள்ளும் பயன் எது? என்கிற இவற்றையறிந்து கொள்வதே தத்துவ, இத, புருஷார்த்த ஞானமெனப்படும். கொள்கைகளை உட்புகுந்து ஆராயுங்கால் பல்வேறு விஷயங்கள் ஒன்றின் மேலொன்றாக வந்துபுகும். அவ்வளவு விரிவு வேண்டா, இங்கு இம்மூன்றை யுணர்வது போதும்.

ஸ்ரீமந் நாராயணனே பரதத்துவமென்றும், அவனது திருவடிகளைத் தஞ்சமாகப் பற்றுவதே இதமென்றும், ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை செய்வதே (அதாவது நித்திய கைங்கரியம் செய்வதே) புருஷார்த்தம் என்றும், நிலையிடுவதே வைணவ ஆசிரியர்களின் ஒருமிடறான சித்தாந்தம். வேதம் முதலிய நூல்களில் தெய்வங்கள் பலபல கூறப்பட்டிருந்தாலும், திருமால் ஒருவரே தெய்வமென்று அறுதியிடுதலும், கருமம்ஞானம் பக்தி..என்றிப்படி பல உபாயங்கள் (வழிகள்) பேசப்பட்டிருந்தாலும், புருடார்த்தமாக வெவ்வேறு பேறுகள் பேசப்பட்டிருந்தாலும், நூற்கொள்கைகளை ஆய்ந்து ஓய்ந்து அறுதியிடவல்ல பேராசிரியர்கள் ஸ்ரீமந்நாராயண மூர்த்தியையே வழிபடு தெய்வமாகவும், சரணாகதியையே தஞ்சமாகவும், அப்பரம புருஷன் பால் தொண்டு செய்வதையே புருஷார்த்தமாகவும் நிலையிட்டுள்ளார்கள். இத்தகைய அர்த்த விசேஷங்களை உபதேசமுகத்தாலும், நூன் முகத்தாலும் நிலைநாட்டினவர்களென்கிற காரணத்தினால் ஆழ்வார்களும் ஆசாரியர்களும் ஸ்ரீமந்நாராயணமூர்த்தியோடு ஒப்ப ஆதரிக்கப்பட்டு வருகிறார்கள். இச்சம்பிரதாயத்திற்கு இவர்கள் செய்தருளிய உபகாரம் மிகப் பெரியதாதலால் இவர்கள் மகோபகாரர்களென்று குலாவப்படுகிறார்கள். அவரவர்கள் உயிரோடிருக்கும் நாளில் தம்மடி

பணிந்தவர்களுக்கு உபதேசங்களை மட்டும் செய்து போனவர்களிற் காட்டிலும், உபதேச முஞ் செய்து பிற்காலத்தவர்களும் நெடுக வாழுமாறு நூல்களைத் தேனும் பாலும் கன்னலும் அமுதமுமாகப் பொறித்து வைத்தவர்கள் மகோபகாரகர்கள் எனப்படுவர். பொய்கையாழ்வார் முதலாகத் திருமங்கையாழ்வார் ஈறாகவுள்ள ஆழ்வார்கள் பன்னிருவரும், தமிழ் வேதமென்றும் திவ்வியப் பிரபந்தங்களென்றும் வழங்கப்படுகிற பாசுரங்களைப் பாடி வைத்து மேற்சொன்ன தத்வஹித புருஷார்த்தங்களை விளங்க வைத்தார்கள். அத் திவ்வியப் பிரபந்தங்களில் மெய்யன்பு பூண்டு அவற்றைக் கண்ட பாடஞ் செய்வதிலும், அவற்றின் செழும் பொருள்களை உணர்ந்து பிரவசனஞ் செய்வதிலும் ஊக்கமுடைமை, வைணவர்களுக்கு இன்றியமையாததாம்.

வைணவ சம்பிரதாயப் பேராசிரியர்களான நாதமுனிகள் ஆளவந்தார் இராமானுசர் கூரத்தாழ்வார் பட்டர் லோகாசாரியர் வேதாந்ததேசிகர் மணவாளமாமுனிகள் முதலான பெரியார்களினால் பல வழிகளிலும் வளர்க்கப்பட்டது இச் சமயம். இவ்வாசிரியர்கள் அனைவரும் அந்தணர் தலைவராய் அவதரித்து வடமொழி வேதத்தில் ஊன்றினவர்களாயிருந்தும், அந்த வேதத்தின் உண்மைப் பொருள்களைக் கையிலங்கு நெல்லிக்கனியாகக் காட்டிக் கொடுப்பவை ஆழ்வார்களின் திவ்வியப் பிரபந்தங்களே என்றுகொண்டு, வடமொழி வேதத்தை இடக்கண்ணாகவும், தென்மொழி வேதத்தை வலக்கண்ணாகவும்கொண்டிருந்தார்கள். "செய்ய தமிழ் மாலைகள் நாம் தெரிய வோதித் தெளியாத மறைநிலங்கள் தெளிகின்றோமே'' என்று கூறியிருப்பதொன்றே இதற்குச் சான்றாகும்.

வைணவப் பரமாசாரியர்கட்கு ''உபய வேதாந்தப் பிரவர்த்தகாசாரியர்கள்' என்பது சிறப்புப் பெயர். வடமொழி வேதாந்தமும் தென்மொழி வேதாந்தமுமாகிய இவையே, உபய வேதாந்தமெனப்படும். உபயவேதமெனினும் உபய வேதாந்தமெனினும் ஒக்கும். வடமொழி மறையிற்கூறின பொருள்களும், தென்மொழி மறையிற்கூறிய பொருள்களும், வேறுபாடின்றி, ஒத்திருந்தாலும், வடமொழிமறைப் பொருள்களைத் தெளிவாகக் காட்டுவது தென்மொழி மறை என்பது பற்றியே உபயவேதாந்தப் பேராசிரியர்கள் என்று பிரசித்திபெற்றவர் வைணவப் பெரியவர்கள்.

இங்குத் தத்துவத்தை உணர்த்துகின்றோம். ஆழ்வார்களின் அருளிச் செயலான திவ்வியப் பிரபந்தங்கள் தோத்திர நூல்கள் என்பதில் ஐயமில்லை. ஆனாலும், இவை மற்ற தோத்திர நூல்கள் போலல்லாமல் வேதப் பொருள்கள் கமழ நின்றிருப்பதாலும், பாஞ்சராத்திர நூல்களில் இவற்றை வேதமென்றே எடுத்துக் காட்டி, 'இவை அவதரிக்கப்போகின்றன' என்று கூறியிருப்பதாலும், வைதிகோத்தமர்களான பிராமண வைஷ்ணவர்களும் ஆதிகாலந்தொட்டே இவற்றை வேதமென்றே வழங்கி வருவதாலும், இவற்றுக்குத் தமிழ் வேதமென்னும் வழக்கு முக்கியமேயல்லது உபசாரத்தினாலாயதன்று. திரிமதஸ்தர்களும் பிரமாணமாக இசைந்துள்ள பாகவதத்தில் பதினோராம் ஸ்கந்தத்தின் மூற்பகுதியில்"ஸ்கலௌகலு பவிஷ்யந்தி நாராயணபராயண:....த்ரமிடேஷு'' என்று தொடங்கியுள்ள சுலோகங்களில் தாமிரபரணி, வைகை, காவேரி, பாலாறு என்னும் நதிகளையெடுத்துக் காட்டி, இவற்றின் கரையில் நாராயண பக்தர்கள் அவதரிக்கப் போகிறார்கள் என்று கூறியிருப்பதும் காணத்தக்கது.

**

---

## பாஞ்சராத்திரம்

'பாஞ்சராத்திரம்' என்னும் ஆகமத்தைப் பின்பற்றி ஒழுகும் வைணவப் பெருமக்களுக்குப் பாஞ்சராத்திரிகள் என்பது பெயர். இப்பெயரை அருள்நந்தி சிவாசாரியார், தம்முடைய சிவஞான சித்தியாரின்கண் வழங்கியிருத்தல் காணலாம்.

பாஞ்சராத்திரம் எனப் பெயர் அமைந்தமைக்குப் பின்வருமாறு பல விளக்கங்கள் அறிஞர்களாற் கூறப்படுகின்றன.

(1) சாங்கியம் யோகம் பௌத்தம் ஆருகதம் காபாலம் என்னும் கொள்கைகளைக் கூறும் ஐந்து நூல்களையும், தன் முன்னே ஒளியிழந்து இருள் அடையுமாறு செய்வது.

(2) ஞாயிற்றின் முன்னிலையில் இரவானது (ராத்திரி) வலிமைக் குறைவு (பஞ்சத்வம்) அடைந்து அழிதல்போல, தன் முன்னிலையில் பிற மதக்கொள்கைகளும் நூல்களும் சிறப்பிழந்து அழியச் செய்வது.

(3) ஐந்து வகையான அறிவு (ராத்ரா) நிலைகளை யுணர்த்துவது.

(4) அஞ்ஞானம் (ராத்ரா) அழிவு (பஞ்சத்வம்) அடையும்படி செய்வது.

(5) பரம் விபவம் வியூகம் அவதாரம் அர்ச்சை என்னும் இறைவனின் நிலைகள் ஐந்தையும் உடன்பட்டு, உணர்த்துவது.

(6) கடவுளை உணர்தலினால் அங்ஙனம் உணர்ந்த மாத்திரத்திலேயே, நாம் நம்முடைய ஐம்பொறிகளினால் நிகழும் அஞ்ஞானங்கள் நீங்கி உய்யப் பெறலாம் என்று உரைப்பது.

(7) இறைவன் ஐந்து இரவுகளில் அனந்தன் கருடன் விஷ்வக்சேனன் பிரமன் உருத்திரன் என்பவர்களுக்கு உணர்த்தியருளியது.

(8) இறைவன் தன்னுடைய பஞ்ச ஆயுதங்களின் அம்சமாகத் திகழும் சாண்டில்யர் ஔபகாயனர் மௌஞ்சாயனர் கௌசிகர் பாரத்துவாசர் என்னும் ஐந்து பெரு முனிவர்களுக்கு உபதேசித்தது.

—ஆசிரியர்.

# இளையான்குடி மாறனாரின் இல்லற மாட்சி

"மும்மொழிப் புலமைக் கொண்டல்"

திரு பெ. திருஞானசம்பந்தன், எம்.ஏ., எல்.டி.,

நமது நாட்டில் எத்தனையோ தியாகசீலர்கள் வாழ்ந்து வந்திருக்கிறார்கள். படர்வதற்குரிய கொம்பு இல்லாத காரணத்தால் துவண்டு கிடக்கும் முல்லைக் கொடிக்கு இரங்கித் தன் தேரையே கொழு கொம்பாக நிறுத்திக் கொடியைப் படர விட்ட பாரி மன்னன் கதையைக் கேட்டிருப்பீர்கள்.

தன்னைச் சரண் அடைந்த புறாவைக் காப்பதற்காகத் தன் உடலையே அப்புறாவுக்கு ஈடாகத் தராசுத் தட்டில் வைத்துத் தியாகம் செய்யத் துணிந்த சிபிச் சக்கரவர்த்தியின் கதையையும் படித்திருப்பீர்கள்.

குளிரில் நடுங்கிப் பசியால் பரிதவிக்கும் வேடனுக்குத் தன்னையே உணவாக அளித்து உபசரித்த கபோதப் புள்ளின் கதையை மகாபாரதத்தில் கேட்டிருப்பீர்கள்.

கொடியேயானாலும், பறவையேயானாலும், இழிந்த மனிதனேயானாலும் அவைகளுக்காகத் தனக்குரிய எல்லாவற்றையும், வேண்டுமானால் தன்னையே கூட, அளித்து மனிதன் அன்பு செலுத்த வேண்டும் என்பதை எத்தனையோ கதைகளும், வரலாறுகளும் நமக்கு உணர்த்துகின்றன. இங்கு நாம் காணப்போகும் இளையான்குடி மாற நாயனாரின் வரலாற்றிலும் அவ்வன்பு நெறியைத்தான் மற்றொரு கோணத்தில் நின்று பார்க்கப் போகிறோம்.

இவ்வரலாறு சேக்கிழார் அருளிய பெரிய புராணத்தில் அடங்கியுள்ளது. இதற்குத் திருத்தொண்டர் புராணம் என்று மற்றொரு பெயரும் உண்டு. இதில் கூறப்படும் அறுபத்து மூவரின் வரலாறு சிவபெருமானிடத்திலும், சிவனடியார்களிடத்திலும் இவர்கள் காட்டிய அன்பை எடுத்துக் கூறுகிறது. சிவவேடம் தாங்கிய எவரையும் சிவன் எனவே கொண்டு அவருக்குச் செய்ய வேண்டிய பணிவிடைகளைச் செய்வதே இவர்களின் வாழ்க்கைக் குறிக்கோள். அப்படி வேடந்தாங்கியவர் எக்குலத்தவரானாலும் அல்லது பகைவரேயானாலும் அவர்களிடத்தே அன்பு செலுத்துவது, அவர் வேண்டிய பொருள் தம்மிடம் இல்லை என்றாலும், இருந்தும் கொடுக்க இயலாத நிலையிலும், அவ்விடையூறுகளையெல்லாம் கடந்து அவர்களுக்குப் பணிவிடை செய்வதே தமது கடமை என்ற விரதம் பூண்டவர்கள் இவ்வடியார்கள். இவர்கள் வெவ்வேறு குலத்திற் பிறந்தவரானாலும் ஒவ்வொரு வகையில் சிறப்பாகச் சிவத்தொண்டு செய்து முக்தியடைந்த பெருமக்கள் ஆவார்கள். அத்தகைய பெருமக்கள் தான் இயற்பகை நாயனார், இளையான்குடி மாற நாயனார் முதலிய அறுபத்து மூன்று நாயன்மார்கள்.

இவ்வறுபத்துமூன்று நாயன்மார்களின் வரலாற்றை எழுதியவர் சேக்கிழார் பெருமான் என்னும் சைவப் பெரியார். இவருக்கு அருண்மொழித் தேவர் என்று மற்றொரு பெயரும் உண்டு. இவர் சென்னைக்கு அருகில் உள்ள குன்றத்தூரில் சைவ வேளாளர் குலத்தில் பிறந்தவர். இரண்டாம் குலோத்துங்க சோழனிடம் அமைச்சராக இருந்தவர். எண்ணூறு ஆண்டுகளுக்கு முன் ஒட்டக்கூத்தர் காலத்தில் வாழ்ந்தவர் என்று கூறப்படுகிறது.

மேற்கூறப்பட்ட திருத்தொண்டர் புராணம், சிதம்பரத்தில் நடராசப் பெருமான் 'உலகெலாம்' என்று அடி எடுத்துக் கொடுக்க இவரால் இயற்றப் பெற்றது. இந்நூலில் பக்திச் சுவை சொட்டுகின்றது. அது மட்டுமல்ல. காவியத்தில் காணக்கூடிய சொல் நயமும், பொருள் வளமும், சுவை உணர்வும் நிரம்பப்பெற்றது. பிறர் கற்பனைகள் வெறும் கற்பனைகளாக மட்டும் நின்றுவிட, சேக்கிழாரது அருட்பாக்கள் கற்பனைகளிலும் பக்திரசத்தைக் கலந்து தருகின்றன. சமய உண்மைகளையும், அன்பு நெறியையும் அறிந்து நடப்பதற்குத் திருத்தொண்டர் புராணம் சிறந்த வழிகாட்டியாகும்.

இப்புராணத்தில் வருகின்ற இளையான்குடி மாற நாயனாரின் வரலாற்றை, இனிக்சுவைப்போம்.

இளையான்குடி என்னும் ஊரிலே வேளாளர் குலத்திலே மாறனார் என்ற ஒரு பெரியார் இருந்தார். அவர் எப்போதும் பொன்னம்பலத்தில் ஆடுகின்ற நடராசப் பெருமானையே சிந்

தித்துக் கொண்டிருப்பவர். அடியாரிடத்து மிகுந்த அன்பு பூண்டவர். உழுதுண்டு வாழ் பவர். உழவுத்தொழிலின் மூலம் பழுதில்லாத வகையில் பொருளைச் சம்பாதித்தவர். சம்பா தித்த பொருளைப் பிறர்க்கு ஈதலின் மூலம் இன்பம் பெற்றவர். சிவனடியார் யார் வந்தா லும் அவர்களை உள்ளங்குழைந்து, இன்முகம் காட்டி, இனிது பேசி, கை கூப்பி எதிர்கொண்டு அழைத்து வருவார். அவருடைய திருவடிகளைத் தண்ணீர் கொண்டு அலம்புவார். ஆசனத்தில் அமரச் செய்து பூசித்து வணங்குவார். அவர்கள் விருப்பத்திற்கேற்ப அறுசுவை பொருந்திய உணவு வகைகளை உண்பதற்கும், தின்பதற் கும், நக்குவதற்கும், பருகுவதற்குமாக நான்கு வகைகளாகப் படைப்பார்.

விருந்தோம்பல் என்பது இல்லறத்தில் உள் ளவனுக்கு எவ்வளவு முக்கியமான கடமை, அதை எவ்வாறு நிறைவேற்ற வேண்டும் என் பதைப் பற்றித் திருவள்ளுவர் கூறியிருப்பதை நினைவில் இருத்திக் கொள்வோம்.

-'இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு''.

இக்குறளின் பொருளை உணர்ந்து கடைப் பிடித்தவர் இளையான்குடி நாயனார்.

மேற்கூறிய வண்ணம் நாயனார் நாள் தோறும் அடியார்களை உபசரித்து வந்தார். இவருடைய செல்வமும் வளர்ந்து வந்தது. செல்வம் உள்ளவன், தான் தருமம் செய்து புகழ் அடைவதில் வியப்பில்லை. ஏழ்மையால் வருந்துகின்ற காலத்தில் தான தருமங்களைச் சுருக்கிக் கொண்டு தன்னலத்தைக் கருது வதுதான் உலகில் சாதாரண மக்களிடையே காணப்படுவது. ஆனால் இளையான்குடி மாற நாயனார் அப்படி அல்ல. வறுமை வந்த காலத் திலும் தான் செய்து வந்த அடியார் தொண்டை மறக்கவில்லை. அவர் ஆற்றிய செயல் செய்வ தற்கரிய செயல். அப்படி செயற்கரிய செயலைச் செய்ததால்தான் அவரை 'மன்புகழ் இசை மாறன்' என்று சேக்கிழார் போற்றுகின்றார். இன்றும் நாமும் போற்றுகின்றோம். வறுமை யிலும் செம்மையான செயலைச் செய்யக்கூடிய வர் என்பதை உலகிற்குக் காட்டவே சிவபெரு மான் அவருடைய செல்வம் குறைந்து போகு மாறு எண்ணினார். அன்று முதல் நாயனாரின் செல்வம் நாளுக்கு நாள் குறைந்து வந்தது. தம் வீட்டிலுள்ள நகைகளை விற்றார். மற்ற பொருள்களையும் விற்றார். தன்னைக் கூட விற்கவேண்டிய அளவுக்குக் கடன்பட்டார்.

நாயனாருடைய செல்வம் சுருங்கிய போதிலும் அவருடைய உள்ளம் சுருங்கவில்லை என்று சேக்கிழார் நயம்படக் கூறுகிறார். நாய னார் வறுமையிலும் அடியார்களுக்குத்தொண்டு புரிந்து, வருவதைச் சிவபெருமான் கண்டார்; இவர் பெருமையை உலகுக்கு உணர்த்த எண் ணினார். சிவனடியார் போல் வேடம் பூண் டார். நாயனாரின் வீட்டிற்கு எழுந்தருளினார். எழுந்தருளிய காலம் மழைக்காலம். இரவு வேளை. இரண்டாம் யாமம். நாயனாரோ அன்று உண்ண உணவில்லாமல் பசியோடிருந் தார். வீட்டில் உணவுப் பண்டமோ, சமைத்த உணவோ இல்லை. இந்த இக்கட்டான நேரத் தில் சிவனடியார் கதவைத் தட்டினார்.

உடனே நாயனார் வேகமாகச் சென்று கதவைத் திறந்து வந்த விருந்தினரை முறைப் படி வரவேற்று உள்ளே அழைத்துச் சென்றார். வந்த சிவனடியார் மழையில் நனைந்திருக்கக் கண்டார். அவர் உடலில் இருந்த ஈரத்தைப் போக்கி, தக்க இடத்தில் அமரச் செய்தார். தம் மனைவியிடம் சென்று, 'இவ்வடியாருக்கு நாம் இப்போது எப்படி உணவளிப்பது? என்று கேட்டார். மனைவியார் நாயனாருடைய குறிப் பறிந்து நடக்கின்ற உத்தமி. திருவள்ளுவர் கூறுகின்றபடி கணவனைத் தொழுது எழு கின்ற மனைத்தக்க மாண்புடைய வாழ்க்கைத் துணை. மனைவியார் நாயனாரைப் பார்த்து 'உணவுப் பண்டம் நம்மிடம் இல்லை. கடன் தருவாரும் இப்போது எவரும் இல்லை. யாரிட மாவது கேட்டுப் பார்க்கலாமென்றாலோ, இரவு வெகு நேரம் ஆகிவிட்டது. என்ன செய் வது? என்று கூறி ஒரு கணம் திகைத்து நின் றார். அடுத்து மேலும் சொன்னார். நம் வய லில் இன்று காலை நெல் விதைத்தோமே, அவை இப்போது முளை கண்டிருக்கும். இருந் தாலும் பாதகம் இல்லை. அவற்றை வாரிக் கொண்டு வாருங்கள், சமைத்துஅடியார்களுக்கு உணவளிப்போம்' என்றார். இதைக் கேட்டு நாயனார் பெரிதும் மகிழ்ந்தார்.

மழை கொட்டுகின்றது. நள்ளிரவு. எங் கும் ஒரே இருட்டு. திக்குத் தெரியவில்லை. யாரும் அஞ்சக்கூடிய நேரம். உள்ளத்திலே ஊக்கம் மிகுதியாக இருந்தால் எத்தகைய இடையூற்றையும் வென்று செல்லும் திடம் மனிதனுக்கு வந்து விடுகின்றது. தீவிர உற் சாகம் இருந்தால் இமயத்தின் உச்சியைப் பிடிக் கலாம், நெடுங்கடலைத் தாண்டலாம், நெருப் பினுள் குதிக்கலாம், ஆகாத செயலையெல்லாம் செய்துவிடலாம். நாயனாரிடம் அத்தகைய உற்சாகம் பிறந்தது. அடியாரிடத்து அவருக் குள்ள தீவிர பக்தி ஒரு துணிச்சலைக் கொடுத் தது. பசியை மறந்தார். இருட்டை இலட்சியம் செய்யவில்லை. காலினால் தடவிக்கொண்டே வயலைச் சென்றடைந்தார். மழை நீரிலே மிதக்கின்ற நெல் முளைகளைக் கூடையில் வாரித் தலையில் 'சுமந்து' கொண்டுவர, வாயிற்படியருகில் ஆவலுடன் நின்ற மனைவி யாரும் அவற்றை வாங்கித் தண்ணீரில் கழுவிச் சேற்றினைப் போக்கினார். பின்னர் நாயனா ரிடம் 'அடுப்பிலே நெருப்பு மூட்டுவதற்கு விறகு இல்லையே' என்று சொல்லி வருந்தினார்.

சொன்ன உடனே நாயனார் வீட்டுக் கூரையின் ஒரு பகுதியை அறுத்துத் தள்ளினார். நாயனாரின் மனைவி அவற்றை முறித்துஅடுப்பு மூட்டி, ஈரநெல் முளைகளை வறுத்து அரிசி யாக்கி உலையில் போட்டுச் சோறு சமைத்தார். அதன் பிறகு 'இனி கறிக்கு என்ன செய் செய்வோம்' என்று கலங்கினார். நாயனாரும் வழி நடந்த களைப்பினால் பசியால் வருந்தும் சிவனடியாருக்கு வெறும் சோறு போதாது

என்று எண்ணிக் கொல்லைப் புறத்திற்குச் சென்று சிறிய கீரைகளைப் பறித்துக் கொடுத்தார். மனைவியாரும் மகிழ்ச்சியோடு அவற்றையாய்ந்து, நீரில் கழுவி, சுத்தமான பாத்திரத்திலிட்டுத் தனது கைத்திறத்தினால் ஒரே கீரையைப் பல வகைக் கறிகளாக ஆக்கி 'சிவனடியாரை இனி உண்ண அழைப்போம்' என்று கணவரிடம் தெரிவித்தார்.

இல்லறத்தில் வாழ்கின்ற இல்லாள் வறுமையுற்ற காலத்திலும் தன் கணவனிடம் இன்முகம் காட்டிச் சலிப்பில்லாமல் துணையாக நின்று இல்லறம் நடத்துகின்ற மனைமாட்சியை இங்கே காண்கிறோமல்லவா? இது வன்றோ நம் நாட்டுப் பெண்களின் மாட்சி.

தூங்குபவர் போல இருக்கின்ற அடினயார் முன்னிலையில் சென்று நின்று 'அடியனேன் உய்ய என்பால் எழுந்தருளிய பெரியாரே! அமுது செய்தருள வேண்டும்' என்று நாயனார் வேண்டிக் கொண்டார். உடனே சிவனடியார் வேடந்தாங்கி வந்த சிவபெருமான் உமாதேவியாரோடு இடப வாகனத்தில் தோன்றி நாயனாரைப் பார்த்துச் சொல்லுகிறார். 'அன்பனே சிவனடியார்க்குத் திருவமுது படைத்துச் சிறந்த நீயும் உன் மனைவியும் கைலாயத்திற்கு வருவீராக! அங்கே குபேரன் சங்கநிதி, பதுமநிதியைத் தாங்கி நின்று உங்களுக்கு ஏவல் செய்வான். நீங்கள் அங்கே பேரின்பப் பெருவாழ்வு வாழ்வீராக ,என்று சொல்லி மறைந்தருளினார்

சிவனடியாருக்கு அன்னமிட்டு இட்டு, எல்லையற்ற செல்வம் குறைந்து வறுமையுற்ற போதும் 'இவ்வளவு புண்ணியம் செய்த நமக்குக் கடவுள் இப்படி வறுமையைக் கொடுத்தாரே' என்று சிவனைச் சிறிதும் நோவாமை எத்துணை வியப்பு! அது மட்டுமல்ல. வறுமை வந்த போதும் 'நாம் என்ன தான் தருமம் செய்ய இயலும்' என்று சும்மா இராமல் அப்போதும் வருந்தியும், கடன்பட்டும், இடர்ப்பட்டும், அடியாருக்கு அன்னமிட்டு வந்தது அதினும் வியத்தகு செயலன்றோ! இன்னும் இவரும், இவர் மனைவியாரும் பசியால் வருந்தும் நேரத்திலும் மழையென்றும், இருட்டென்றும் பார்க்காமல் செய்த செயற்கரிய செயல் அதனினும் வியப்பன்றோ! உண்மைப் பக்தி பூண்டவர் தமக்கு எத்துணை இடர் வந்தாலும் தளராது சிவபெருமானிடத்து அன்பு குறையாது ஒழுகுவர் என்பதை இவ்வரலாற்றின் வாயிலாக அறிகிறோம்.

இத்துணைச் சிறப்பு வாய்ந்த இளையான் குடி மாறநாயனாரை, 'அன்புறு மனத்தால் நாதன் அடியவர்க்கன்பு நீடு மன்புகழ் இளைசை மாறன் வளத்தினை வழுத்தலுற்றேன் '' என்று சேக்கிழார் கூறுவதில் என்ன வியப்பு? 'இளையான்குடி மாறன் அடியார்க்கும் அடியேன்' என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் போற்றிப் புகழ்வதில் தான் வியப்பென்ன இருக்கிறது?

— — — — —


# மாலை மாற்று மாலை

தமிழ் இலக்கண இலக்கியப் புலமைகளில் தலைசிறந்த ஒருவராக விளங்கி, அழியாப் பெரும்புகழ் பெற்ற பேரறிஞராகத் திகழ்பவர், சோழவந்தான் அரசஞ்சண்முகனார் (கி.பி. 1868-1914). அவர்கள் சிதம்பர விநாயகர் மாலை, மதுரைக் கலம்பகம், மதுரைச் சிலேடை வெண்பா, நவமணிக் காரிகை நிகண்டு, திருவள்ளுவர் நேரிசை, இன்னிசை இருநூறு, ஏகபாத நூற்றந்தாதி, மாலை மாற்று மாலை, பஞ்சதந்திர வெண்பா, மீனாட்சியம்மை சந்தத் திருவடிமாலை, தொல்காப்பியப் பாயிர விருத்தி, திருக்குறள் சண்முக விருத்தி, நுண்பொருட்கோவை என்னும் பல நூல்களை இயற்றியுள்ளார். அவைகளுள் இந்நூல், திருஞான சம்பந்தர் பாடியருளிய 'மாலை மாற்று' என்னும் பதிகத்தைப் போன்ற அரிய அமைப்பை உடையது; முப்பது பாடல்களால் இயன்றது. இதற்கு விவேகபானுப் பத்திராதிபர் திரு. மு. கந்தசாமிக் கவிராயர் அவர்கள் உரை எழுதியுள்ளார். மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாத அய்யர் முதலிய பெருமக்கள், அணிந்துரை வழங்கியுள்ளனர். அரும்பெரும் சிறப்புமிக்க இந்நூலைச் சோழவந்தான் கின்னிமடத்தின் பரம்பரை அறங்காவலர் திரு. ச. கன்னியப்ப முதலியார் அவர்கள், அழகுறப் பதிப்பித்துள்ளார்கள். இதுபோன்ற ஏனைய நூல்களையும் பதிப்பித்து வெளியிடுவதற்கு, அவர்கள் பெரிதும் முயன்று வருகின்றார்கள். தமிழறிஞர்களும் அன்பர்களும் இம்முயற்சியினை ஆதரித்து உதவ கடமைப்பட்டுள்ளனர். சிறந்த நல்ல பயன்மிக்க அரும்பெரும் நூல். விலை ரூபாய் 2/-

கிடைக்குமிடம் :

சிவத்திரு சிவப்பிரகாச சுவாமிகள் திருமடம்,
பேட்டை, சோழவந்தான்-624214.
மதுரை மாவட்டம்.

# சித்தாந்த நோக்கில் சிலைவேடர் பெருமானார்

திரு சி. சு. கண்ணாயிரம், கோயம்புத்தூர்

திருவெலாம் நிறைந்த நம் செந்தமிழ் நாட்டின் தேசிய இலக்கியமாகத் திகழ்வது சேக்கிழார் பெருமான் இயற்றிய திருத்தொண்டர் புராணம் ஆகும். இந்நூலாசிரியரின் காலத்திற்குப் பின்னர்த் தோன்றியவையே மெய்கண்ட சாத்திர நூல்கள் பதினான்கும். எனினும் அவற்றுட் கூறப்படும் சைவ சித்தாந்தக் கருத்துக்கள் மிகப் பழங்காலந்தொட்டே இத் தமிழ் மண்ணில் வழங்கி வந்தன. இன்று நமக்குக் கிடைக்கும் மிகப் பழைய தமிழ் நூல்களாகிய சங்க இலக்கியங்களிலும் அவற்றைக் காணலாம். அவை தேவாரப் பாசுரங்கள், திருமந்திரம், காரைக்காலம்மையாரின் அருள்நூல்கள், ஏனைய திருமுறைகள் ஆகியவற்றுள்ளும் விரவி மிளிர்கின்றன. எனவே, மிகப் பல சாத்திர நூல்கள் நம் பண்டைத் தமிழகத்தில் நிலை பெற்றிருந்து காலவெள்ளத்தாலும் காழ்ப்புத் தீயாலும் அழிக்கப்பட்டொழிந்தன என்று தெரிகிறது.

அத்தகைய சைவ சித்தாந்தக் கருத்துக்களை, நம் சேக்கிழார்பெருமானும் தம் பெரிய புராணத்துள் ஆங்காங்கு வெளிப்படையாகவும் குறிப்பாகவும் பெய்து செல்கின்றார். அவற்றுள் ஒரு பகுதியை ஈண்டு ஆராய்வோம். அறுபத்துமூன்று நாயன்மாருள் காலத்தால் மிகவும் முற்பட்டோர் கண்ணப்பநாயனார், சண்டீச நாயனார், திருமூலநாயனார் ஆகிய மூவரும் அவர். இவருள் திருமூலநாயனார் புராணம் மிகச் சுருங்கிய அளவில் 28 செய்யுட்களாலியன்றன. சண்டீசநாயனார் சரிதத்தை ஆசிரியர் 60 பாடல்களால் சற்று விரித்துப் பாடியுள்ளார். ஆனால் கண்ணப்ப நாயனார் வரலாறோ 186 திருப்பாடல்களால் மிக விரிவாக அருளப்பட்டுள்ளது. அதில் நம் ஆசிரியரின் கைவண்ணத்தைச் சற்றுக் காண்போம்.

கண்ணப்ப நாயனார் சரிதம், தமிழகத்தில் கற்றுவல்லோரால் மட்டுமின்றிப் பாமர மக்களாலும் விளக்கமாக அறியப்பட்ட ஒன்று. ஆதலின் ஈண்டுக் கதைப் பகுதிகளை விரிக்காமல் சைவ சித்தாந்த சாத்திரக் கருத்துக்கள் வரும் இடங்களை மட்டும் தொட்டுச் செல்வோம்.

## மும்மலங்களும் ஆன்மாவும்

ஆன்மா அநாதியே ஆணவமலத்தால் பிணிப்புண்டது. அத்துடன் இடையில் வந்து சேர்ந்த கன்மம் மாயை ஆகிய இரு மலங்களும் கூடி ஆன்மாவைப் பந்திக்கின்றன. ஆன்மா இந்த மும்மலங்களின் தொடக்கினின்றும் விடுதலை பெற்றாலே வீடுபேறு எய்த இயலும். அச் செயல் ஆன்மாவின் ஆற்றலுக்கு அப்பாற்பட்டது. எனவே, இறைவனே தன் பேரருளால் அம் மும்மலங்களையும் களைந்து ஆன்மாவை உய்விக்கின்றான். இதனையே இறைவன் திரிபுரங்களையும் எரித்துத் தேவர்களைக் காத்தான் என்று சிவமகாபுராணம் உருவகப்படுத்தி ஓதுகின்றது. இவ்வுண்மையை—

''அப்பணி செஞ்சடை ஆதி புராதனன்
முப்புரம் செற்றனன் என்பர்கள் மூடர்கள்
முப்புரமாவது மும்மல காரியம்
அப்புரம் எய்தமை யாரறி வாறே''

என்று திருமூல நாயனார் விளக்குவது காண்க. இந்த அரிய சாத்திர உண்மையை நம் ஆசிரியர் பெருமான் கண்ணப்பநாயனார் திருஅவதாரத்துள் மூன்று பாடல்களுள் வைத்துக் காட்டுகின்றார். அவை—

பொருவருஞ் சிறப்பின் மிக்கார்
இவர்க்கினிப் புதல்வர்ப் பேறே
அரியதென் றெவரும் கூற
அதற்படு காத லாலே
முருகலர் அலங்கற் செவ்வேல்
முருகவேள் முன்றிற் சென்று
பரவுதல் செய்து நாளும்
பராய்க்கடன் நெறியில் நிற்பார்.

வாரணச் சேவ லோடும்
வரிமயிற் குலங்கள் விட்டுத்
தோரண மணிகள் தூக்கிச்
சுரும்பவிர் கதம்பம் நாற்றிப்
போரணி நெடுவே லோற்குப்
புகழ்புரி குரவை தூங்கப்
பேரணங் காடல் செய்து
பெருவிழா எடுத்த பின்றை

பயில்வடுப் பொலிந்த யாக்கை
வேடர்தம் பதியாம் நாகற்கு
எயிலுடைப் புரங்கள் செற்ற
எந்தையார் மைந்த ரான
மயிலுடைக் கொற்ற வூர்தி
வரையுரங் கிழித்த திண்மை
அயிலுடைத் தடக்கை வென்றி
அண்ணலார் அருளி னாலே

(கண்ணப்பநாயனார் புராணம்: 10-12)

என்பனவாம். ஈண்டு ''எயிலுடைப் புரங்கள் செற்ற'' என்று முப்புரங்களை அழித்த செய்திக் குறிப்புக் காண்க.

சிவபரஞ்சுடரின் இளமைக் கோலமே முருகப் பெருமானின் மூர்த்தமாகும். அம் மூர்த்தமாக வந்து இறைவன் தாரகன், சிங்க முகன், சூரபதுமன் ஆகிய முவரையும் அழித்தான். அம் மூவரும் முறையே மாயை, கன்மம், ஆணவம் ஆகிய மும்மலங்களின் உரு வகங்களே. சிங்கமுகன் குலிசவேலாலும் ஏனைய இருவரும் வேற்படையாலும் வீழ்ந் தொழிந்தனர். இதனையே நம் சேக்கிழார் பெருமான் மூன்று பாடல்களால் கூறுகின்றார். அவற்றில், ''செவ்வேல்'', ''நெடுவேல்'' ''அயில்'' என்று வேற்படை துதிக்கப்படுதல் காண்க. சிவஞானம் என்னும் படைக்கலமே மும்மலங்களையும் ஒழித்து ஆன்மாவை உய் விப்பதாகும் என்ற சித்தாந்தக் கருத்தைக் கதைவடிவில் நமக்குஊட்டும் நயம் கண்டு களிக்க

## வேடர் குழுவுள் வளரும் வேந்தன் மகன்

ஆன்மா, உலகியல் துன்பங்களினின்றும் நீங்கிச் சாலோகம், சாரூபம், சாமீபம் என்னும் பதங்களில் நின்று ஏனைய அடியார்களைக் காத்து முடிவில் வீடு பெற்றுப் பேரின்பம் துய்க்க வல்லது. இதனை அரசனுடன் வேட்டைக்குச் சென்ற அரசகுமாரனாகிய பாலகன் வேட்டைக் கானில் வழிதவறிப்போய் வேடர் குடும்பத் தால் வளர்க்கப்பட்டு, உரிய வயது எய்தியபின் நல்லூழால் மீண்டும் தன் தந்தையாகிய அர சனை அடைந்து உய்ந்த கதைபோல என்பர். இதனை,

ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்த
விட்டு
அந்நியம் இன்மையின் அரன்கழல் செலுமே

(சிவஞானபோதம்-சூத்.8)

என்று நம் ஞானசாத்திரம் நவிலும். இந்த உண்மையும் நாயனார் சரிதத்தில் அமைவதைக் காண்போம்.

வேட அரசனாகிய நாகன் மகனாக வளர்ந்த நாயனார் வில்வித்தை பயின்று அதில் மேம்பட்டுப் பதினாறு வயது இளைஞராக உயர்ந்தார். தந்தையாகிய நாகன் வேட்டை வினை தாழ்த்தான். அதன் விளைவாக விலங் கினங்கள் பெருகி வேடர்புலங்களை அழித்தன. வேட்டுவக் குடிகள் நாகனிடம் முறையிட்டனர். நாகன் தன் நிலையை அவர்களுக்குக் கூறி நாயனார்க்கு வரையாட்சி நல்கி வேட்டைக்குச் சென்றுவரும்படி ஆசி கூறுகின்றான். அவன் கூற்றைச் சேக்கிழார் பெருமான் செஞ்சொல் அமிழ்தத்தாலேயே சுவையுங்கள்.

முன்னிருந்த மைந்தன்முக நோக்கி நாகன்
மூப்பெனைவந் தடைதலினால் முன்பு
போல
என்னுடைய முயற்சியினால் வேட்டை யாட
இனிஎனக்குக் கருத்தில்லை; எனக்கு
மேலாய்
மன்னுசிலை மலையர்குலக் காவல்பூண்டு
மாறெறிந்து மாவேட்டை யாடி என்றும்
உன்னுடைய மரபுரிமை தாங்கு வாயென்
றுடைதோலுஞ் சுரிகையுங்கைக் கொடுத்
தானன்றே

(கண்ணப்பநாயனார்புராணம்-53)

''நீ என்னைப்போல வேடர் தலைவனாக நில்லாமல், ஆன்மாக்களுக்கெல்லாம் தலைவ னும், மலையையே வில்லாகக் கொண்டவனு மான சிவபெருமானின் மைந்தனாகலின், அவன் பேரரசுக்குரியவனாய், அவனுக்கு வலப்புறம் நின்று இனியும் பிறக்க உள்ள எண்ணற்ற அடி யார் கூட்டமாகிய குலத்துக்குக் காவலனாய் விளங்கப் போகின்றாய். இப்பொழுது நீ பூண் டுள்ள வேடர்குலத் தலைமை உன் மரபுரிமை யன்று . சாயுச்சிய இன்பம் துய்த்தலே உன் மரபுரிமையாம் என்று வாழ்த்தும் குறிப்புக் காண்க. இப்பாடலில் ''மாறு எறிந்து'' என் பது ஆன்மாவுக்குப் பகையாக நின்று வெறி யாட்டமிடும் ஐம்புலய்ன்களை வெற்றி கொள் ளலாம். அதனை—

புள்ளுவர் ஐவர் கள்வர்
புனத்திடைப் புகுந்து நின்று
துள்ளுவர் சூறை கொள்வர்
தூநெறி விளைய வொட்டார்
முள்ளுடை யவர்கள் தம்மை
முக்கணான் பாத நீழல்
உள்ளிடை மறைந்து நின்றங்
குணர்வினால் எய்ய லாமே

(தனித்திரு நேரிசை 5)

''மாவேட்டை யாடி'' என்னும் பகுதி ஐம் புலன்களாகிய வலிய பெரிய விலங்குகளை அழித்து என்ற குறிப்பினதாம்.

## சீவன்முத்தர்-சாமுசித்தர்-பிராகிருதர்

மனிதப் பிறப்பெய்திய ஆன்மாக்கள் மூவகையினர். அவர்களில ஆன்மீக நெறியில் மிக முன்னேறிச் சதா காலமும் தெய்வ சிந் தனையிலேயே திளைப்பவர் சீவன்முத்தராவர். இவர்கள் எடுத்த உடலை விட்டதும் வீடு பேறெய்துவர். இவ்வுலகில் எப்பொருளைப் பார்க்கினும் சிவத்துடன் தொடர்புகொண்ட தாக எண்ணிச் சிவத் தியானத்தில் ஆழ்ந்து உலகை மறந்து விடுவர்.

சாமுசித்தர் என்பவர் உலகியலில் ஈடுபட்டு வாழ்பவராயினும் ஆன்மிக உயர்வில் நாட்டங்கொண்டு படிப்படியாகப் பல பிறவிகளில் சிவத்தை நோக்கி முன்னேறுவர். பிராகிருதர் என்போர் உண்பதும், உடுப்பதும், பொருளீட்டலும், உலக இன்பங்களை நுகர்தலுமே தொழிலாக வாழ்நாளைக் கழிப்பவர். கடவுள் நினைவே சற்றும்இல்லாது வாழ்வோர். இம் முத்திறத்தோரையும் ஆசிரியர் நமக்குக் கதாபாத்திரங்களாக அறிமுகப்படுத்துவதை இனிக் காண்போம்.

பதவியேற்ற நாயனார் தம் குடிகளின் நலன்கருதிக் கன்னிவேட்டைக்குச் செல்கின்றார். வேட்டை நாய்களுடன் மிகப்பெரிய வேடர் கூட்டமும் உடன்செல்லுகின்றது. காட்டில் பல விலங்கினங்கள் வேட்டையில் வீழ்கின்றன. அச் சமயம் ஒரு காட்டுப் பன்றி காவலைக் கடந்து வலைகளை அறுத்துக் கொண்டு தப்பி ஓடுகின்றது. நாயனார் அதைப் பின்தொடர்கின்றார். அவர் மெய்க்காவலர் போன்று பணிபுரியும் நாணன், காடன் என்ற இரு வேட்டுவ வீரர்களும் உடன் ஓடுகின்றனர். பல காதங்கள் ஓடிய பன்றி திருக்காளத்தி மலைச்சாரலை அடைந்து களைப்புற்று நின்றுவிடுகின்றது. பின்பற்றி வந்த நாயனார் தம் கரிகையால் அதைக் குத்தி இரு துண்டாக்கி வீழ்த்துகின்றார். தொடர்ந்து ஓடிவந்த நாணன் இதைக் கண்டு காடனிடம் வியந்து பாராட்டுவதைக் கேளுங்கள்.

வேடர்தங் கரிய செங்கண்
 வில்லினார் விசையிற்
மாடிரு துணியாய் வீழ்ந்த
 வராகத்தைக் கண்டு நாணன்,
காடனே! இதன்பின் இன்று''
 காதங்கள் பலவந் தெய்த்தோம்
ஆடவன் கொன்றான் அச்சோ!
 என்று அவர் அடியில் தாழ்ந்தார்.

ஈண்டு, ஏனைய விலங்குகளைப்போல எளிதில் மடியாது, வேட்டை முயற்சிகளில் தப்பிப் பல்காதம் ஓடிவந்த பன்றி, ஆணவ மலத்தைக் குறிப்பதாகும். அது ஆன்மாவின் தவமுயற்சிகளால் எளிதில் அழியாமல் பல பிறவிகளிலும் ஆன்மாவை நெடிது இழுத்து அலைப்பதாகும். ஆன்மா சீவன்முத்த நிலை எய்தியதும் மட்டுமே செயலற்று வீழ்வதாகும். எனவே, இங்கு நாயனார் அந்நிலை எய்திய ஆன்மாவைக் குறித்து நின்றார். ஆணவ மலத்தை வெல்லும் அவரது அரிய வீரச் செயலே பேராண்மையாகும். எனவே, அவரை ''ஆடவன் ''என்று நாணன் வியந்து கூறி வணங்குகின்றான். ஆணவ மலத்தை வெல்லும் முயற்சியில் ஈடுபட்டும், தான் வெற்றியடையாது, களைப்பு எய்தியவன் நாணன். இதனால் இவன் சாமுசித்தரைக் குறித்து நின்றான். இவன் காதங்கள் பல வந்து எய்த்தது,

''புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்
எம்பெருமான்''

(திருவாசகம்-சிவபுராணம் 26-31)

என்று மணிவாசகப் பெருந்தகையால் விளக்கப்பட்ட எண்ணற்ற பிறப்புக்களே.

இத்தனை நிகழ்ச்சிகளையும் கண்டும் கேட்டும் ஒருமுறைகூட வாய் திறவாது நிற்கும் காடனே பிராகிருதனாவான். எனவே, உண்பதும் பருகுவதுமான செயல்களில் மட்டுமே வாழ்நாளைக் கழிக்கும் பிராகிருதரின் செயலாகிய உணவு தயாரிக்கும் வேலையில் மட்டும் அவன் ஏவப்படுகின்றான். அதையும் காண்போம்.

ஆங்கதன் கரையின் பாங்கோர்,
 அணிநிழற் கேழல் இட்டு
வாங்குவில் காடன் தன்னை
 மரக்கடை தீக்கோல் பண்ணி
ஈங்குநீ நெருப்புக் காண்பாய்
 இம்மலை ஏறிக் கண்டு
நாங்கள் வந் தணைவோம் என்று
 நாணனும் தாமும் போந்தார்
(கண்ணப்பநாயனார்புராணம் - 99)

இறைவன் ஒளிவடிவானவன். சீவன்முத்தர்கள் அவ்வொளியை மிக எளிய முயற்சியில் காண்கின்றனர். சாமுசித்தரோ முயன்று தவம் செய்த பிறகே சிறிதளவு கண்டு நீங்குகின்றனர் ஆனால் பிராகிருதர் இறைவனைக் காண வேண்டுமானால் மிக வருந்தி முயன்று தவம் செய்தல் வேண்டும். வைரத்தைச் சிறிது பட்டை தீட்டினாலே ஒளிவிடும். பாலிலுள்ள நெய்யினால் விளக்கிட்டு ஒளிகாண வேண்டுமானால் சற்று அதிகம் முயலுதல் வேண்டும். பாலைப் பிரையிட்டுத் தயிராக்கி, அதைக் கடைந்து வெண்ணெய் எடுத்து உருக்கி நெய்யாக்கி விளக்கிட்டாலே ஒளிபெறலாம். எனினும் தயிரை விரைவிலும் எளிதிலும் கடைந்துவிடலாம். ஆனால் தீக்கடைக்கோலில் மறைந்துள்ள நெருப்பின் ஒளியை வெளிக்கொண்டு வரவேண்டுமாயின் மிக வலிதின் வருந்திக் கடைதல் வேண்டும். இவற்றையே மேற்குறித்த மூவர்க்கும் உவமையாக்குவர் அப்பர் சுவாமிகள்.

''விறகில் தீயினன் பாலில் படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோல்நட் டுணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே''

(அரசுகள் தேவாரம்-தனிக்குறுந்
தொகை-10)

மாமணியைக் கடையச் சோதி முன்நிற்கும்; படுபாலாகிய தயிரை வாங்கிக் கடையச் சோதிதரும் நெய் முன்நிற்கும்; அரணிக் கட்டையை முறுக வாங்கிக் கடையத் தீயாகிய சோதி முன்நிற்கும்; என்று வகைப்படுத்தி விளக்குதல் காண்க.

இதனால் நாயனார், சீவன்முத்தராகிய நாம் திருக்காளத்தி மலைமீது ஏறிச் சென்று காளத்தியப்பரைக் கண்ட அளவிலேயே பேரொளிப் பிழம்பாகிய அவருடன் ஒன்றிவிடப் போகின்றோம். எம்முடன் வரும் சாமுசித்த னாகிய இந்த நாணனும் அவரைக் காண்பான். ஆயினும் எம்மைப்போல் ஒன்றிவிடாது அவரை விட்டுப் பிரிந்து வந்து மீண்டும் உலகியலில் உழல்வான். ஆனால் பிராகிருதனாகிய நீயோ எங்களுடன் மலைமேல் ஏறி வரப்போவதும் இல்லை; அவரைக் காணப் போவதும் இல்லை; ஒளிமயமாகிய அவரை நீ காணவேண்டுமானால் இன்று தொடங்கி இனிவரும் பல பிறவிகளிலும் தொடர்ந்து கடுந்தவம் புரிவாயாக என்ற குறிப்புத்தோன்ற அவனை, ''மரக்கடை தீக் கோல் பண்ணி ஈங்குநீ நெருப்புக் காண்பாய்'' என்று ஆற்றுப்படுத்தும் நயம் காண்க.

## மானிடச் சட்டை தாங்கிவரும் இறைவன்

ஆன்மாக்கள் மூவகையினர். ஆணவமலம் ஒன்று மட்டுமேயுள்ளோர் விஞ்ஞானகலர். இவர்களுக்கு இறைவன் அவர்கள் உயிருக்குயி ராக உள்நின்றே முத்தியடையும் வழியை உபதேசித்து உய்விக்கின்றான். இரண்டாமவர் ஆணவம், கன்மம் எனும் இரு மலங்களையும் கொண்ட பிரளயாகலர். இவர்களுக்கு இறைவன் மான் மழு நாற்கரம் நீலகண்டம் போன்ற கோலத்துடன் நேரில் தோன்றி உபதேசிக்கின் றான். ஆணவம், கன்மம், மாயை ஆகிய மூன்று மலங்களும் உள்ளோர் சகலர். இவர்களுக்கு இறைவன், தான் மானிடன் ஒருவன் வடிவில் வந்து குருவாக நின்று உபதேசிப்பான். இவ் வுண்மையை:

''நன்னெறிவிஞ் ஞானகலர் நாடுமல
மொன்றினையும்
அந்நிலையே உண்ணின் றறுத்தருளி-பின்
னன்பு
மேவா விளங்கும் ப்ரளய கலருக்குத்
தேவாய் மலகன்மந் தீர்த்தருளிப்-பூவலயம்
தன்னின்று நீங்காச் சகலர்க் கவர்போல்
முன்னின்று மும்மலந்தீர்த் தாட்கொள்வன்''

(போற்றிப்பஃறொடை 60-63)

என்று நம் ஞானசாத்திரம் கூறுகின்றது.

இம் முறையில்தான் இறைவன் தன் பேரருளையே மானிட வடிவமாக்கி அதனுள் நின்று குருந்தமரத்தடியில் அமர்ந்து நம் பரம ஆச்சாரிய மூர்த்திகளாகிய மணிவாசகப் பெரு மானுக்கு உபதேசித்தருளினான். வேறு மனி தன் ஒருவனைக் கருவியாகக் கொண்டு அவன் உயிருள் நின்று பக்குவ சீலர்களுக்கு உபதேசம் செய்வதும் உண்டு. இவ்வகையில் நம் நாயனா ருக்கு இப்பொழுது இறைவன், நாணன் உட லைக் கருவியாகக் கொண்டு உபதேசிக்கப் போகின்றான். அதில் நாணனுக்கு அவ்வுப தேசம் பயன்படாமல் நாயனாருக்கு மட்டும் பயனருளும்அற்புதங்களை இனிப் பார்ப்போம்.

வேட்டைக்கானில் நெடுந்தொலைவு ஓடி வந்ததால் நீர்வேட்கை உற்ற நாயனார் ''இவ் வனத்தில் தண்ணீர் எங்குக் கிடைக்கும் என்று கேட்கின்றார். நீர்வேட்கை உற்றார்க்கு சில குவளை நீர் மட்டும் கிடைத்தால் போதும். ஆனால் நாணனோ எவ்வளவு நீர் வேண்டினும் தரும் பொன்முகலி ஆற்றுக்கு வழி காட்டு கின்றான்.

''என்றவர் கூறநோக்கித்
திண்ணனார் தண்ணீர் எங்கே
நன்றும்இவ் வனத்தில் உள்ள(து)
என்றுரை செய்ய நாணன்
நின்றஇப் பெரிய தேக்கின்
அப்புறம் சென்றால் நீண்ட
குன்றினுக் கயலே ஓடுங்
குளிர்ந்தபொன் முகலி'' என்றான்.

பலபிறவிகளில் உழன்று வேட்கைதீர நாயனார் வேண்டுவது சிவமாகிய அமுத நீரன்றோ? அதற்கு இரண்டொரு குவளைத் தண்ணீர் மட் டும் தராது ஆற்றுக்கே வழிகாட்டும் நாணனின் உள்நின்று கூறுபவன், 'பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப் பாற்கடலீந்த' பரமன் அன்றோ?

## மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையால் தரிசிக்கச் செய்தல்

குருவின் கடமை தன் மாணவனுக்குத் தீட்சை அளித்து சிவபரம்பொருளைப் பூசிக்கும் படியும் புண்ணிய தலங்களுக்கு யாத்திரை செய்து ஆங்காங்குள்ள திருக்கோயில்களில் எழுந்தருளியுள்ள சிவமூர்த்தங்களை வழிபடு மாறும் ஆற்றுப்படுத்துவதாகும்.

மூர்த்திதலம் தீர்த்தம்
முறையால் தொடங்கினர்க்கோர்
வார்த்தைசொலச் சற்குருவும்
வாய்க்கும் பராபரமே''

(பராபரக்கண்ணி-156)

என்பார் தாயுமான சுவாமிகளும். இங்ஙனம் நம் நாயனார்க்குக் குருவாக நின்று புண்ணிய தீர்த்தமாகிய பொன்முகலி ஆற்றைக் காட்டிய நாணன், அடுத்து அவருக்குத் திருக்காளத்தி மலையாகிய தலத்தையும் அதன்மீது கோயில் கொண்டுள்ள காளத்தியப்பராகிய மூர்த்தியை யும் வழிபடலாம் என்றும் ஆற்றுப்படுத்துவ தைச் சேக்கிழார்பெருமான் திருவாக்காலேயே சுவைப்போம்.

''நாணனே! தோன்றும் குன்றில்
நண்ணுவோம்'' என்ன நாணன்
காணநீ போதின் நல்ல
காட்சியே காணும்; இந்தச்
சேணுயர் திருக்காளத்தி
மலைமிசை எழுந்து சேவ்வே
கோணமில் குடுமித் தேவர்
இருப்பர்; கும் பிடலாம்'' என்றான்.

(கண்ணப்ப நாயனார் புராணம்-96)

## ஆனந்தத் தேனிருக்கும் பொந்து

மலைமிசை ஏறிச் செல்லும் நாயனார்க்கு ஆங்குத் தேவர்களும் ஏனைய மேலுலகத் தோரும் காளத்தியப்பரைப் பூசிக்கும்பொழுது இயம்பும் துந்துபி முழக்கம் கேட்கின்றது. அது என்ன ஓசை என்று வினவுகின்றார். பக்குவம் எய்தாத நாணனுக்கு அவ்வோசை கேட்க வில்லை. அவன் ஒருவேளை இம் மலையில் உள்ள தேனீக்களின் ஓசை போலும் என்கின் றான். அவர்கள் உரையாடலின் செய்யுள் வடிவம்.—

''கதிரவன் உச்சி நண்ணக்
கடவுள்மால் வரையின் உச்சி
அதிர்தரும் ஓசை ஐந்தும்
ஆர்கலி முழக்கங் காட்ட
இதுஎன்கொல்? நாணா? என்றார்க்(கு),
இம்மலைப் பெருந்தேன் சூழ்ந்து
மதுமலர் ஈக்கள் மொய்த்து
மருங்கெழும் ஒலிகொல் என்றான்''

நாணன் அறியாமையால் இங்ஙனம் கூறினும் அவனுள் நின்று பேசும் இறைவனின் மொழிகள் பேருண்மைகளைத் தன்னுட் பொதிந்துள்ளவை யன்றோ! திருக்காளத்தி மலையின் உச்சியில் உண்ண உண்ணத் தெவிட்டாத வீட்டின்ப மாகிய தேனை நல்கும் மகாளத்தியப்பர் என் னும் தேன்கூடு உள்ளது. தேனடையில் மொய்த்துத் தேனைப் பருகும் ஈக்கள் ஓசை யிட்டு முரல்வதில்லை. அத்தேனைப் பருகி இன்பம் நுகராத ஈக்களே தேன்கூட்டைச் சுற்றிச் சுற்றி வந்து ஓசை எழுப்புவன.

அவற்றைப்போலவே, சாயுச்சியம் எய்திப் பேரின்பம் நுகரும் முத்தான் மாக்கள் எந்த ஓசையும் எழுப்பார். மாறாக பெத்தான்மாக்க ளாகிய தேவர் முதலியோரே பேரின்பம் நுக ராது துந்துபி முதலியவற்றை முழக்கி ஆர வாரிக்கின்றனர். நாளை, உன் பூசையின் பின்பு சிவகோசரியாரும் இவ்வாறே எம் சந்நிதி யில் ஆரவாரிக்கப்போகின்றார் என்று பொருள் விரிதல் காண்க. இனி, இந்தத் துந்துபி ஓசை வழியே மலையேறிச் சென்று நாயனார் காளத் தியப்பரைத் தரிசிக்கும் நிகழ்ச்சி.

''திருச்சிலம் போசை ஒலிவழி யேசென்று
நிருத்தனைக் கும்பிடென் றுந்தீபற
நேர்பட அங்கேநின் றுந்தீபற''

(திருவுந்தினார்-17)

எனும் நம் ஞான சாத்திரத்திற்கு இலக்கியமாக அமைந்துள்ளது காண்க.

மலைமேல் ஏறிச் செல்லும் நாயனார் செயலைத் தத்துவங்கள் ஆகிய படிகளில் ஏறிச் சென்று சிவத்தை அணையும் ஆன்மாவின் செயல்போல உள்ளது என்று ஆசிரியர் வெளிப்படையாகவே உவமை காட்டி விளக்கு கின்றார்.

## நின்மல துரியாவத்தை

ஆன்மா கருவிகளுடன் கூடியும் பிரிந்தும் அவத்தைப்பட்டு உழலும். இவ்வவத்தைகள் சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரி யாதீதம் என்று ஐந்து வகைப்படும். அவ்வைந் தும் கீழாலவத்தை ஐந்து, மத்தியாலவத்தை ஐந்து, மேலாலவத்தை ஐந்து எனப் பதினைந் தாக விரியும். இவற்றுள் மேலாலவத்தையாகிய துரியாதீலத்தில் உயிர்நிற்றலை ''நின்மல துரியாதீதம்'' என்பர். இது யோகநிலையில் நின்று இறைவனைத் தியானித்தலாம். இந் நிலையில் உயிர் ஒன்றுமட்டுமே நிற்கும். பிராண வாயுவாகிய சுவாசக் காற்றும் உள் அடங்கி விடும். உயிருக்கு உயிராக நிற்கும் இறைவன் அந்நிலையிலும் ஆன்மாவுடன் கலந்து நின்று அதை வழிப்படுத்துவான். யோகிகள் அந்நிலை யில் நின்று புலன்களை வென்று இறைவனைப் பூசிப்பர். இவ்வரிய உண்மையை இனி ஆசிரி யர், நாயனார் சரிதத்தில் பொதிந்து தந்துள்ள பாங்கைப் பார்ப்போம்.

மலைமீது ஏறிவந்த நாயனார் ,காளத்தி யப்பரைத் தரிசிக்கின்றார். அப்பொழுது தான், சிவகோசரியார் பூசித்துவிட்டுச் சென்றுள்ளார். நாயனார், அவர் பூசித்த அடையாளங்களைக் காண்கின்றார். சிவலிங்கத் திருமேனியில், திரு முழுக்காட்டிய தண்ணீரின் ஈரமுள்ளது. முடி யில் சாத்திய பச்சிலையும் பூவும் மிளிர்கின்றன. இவற்றைச் செய்தது யார் என்று தாமே வாய் விட்டுக் கேட்டுக்கொள்ளுகின்றார். அருகில் நின்ற நாணன் ,அது தன்னை வினவியதாகக் கொண்டு விடை பகருகின்றான். அவ்விடையை ஓர் ஒப்பற்ற பாடல் வடிவில் நமக்கு வழங்கு கின்றார் சேக்கிழார் பெருமான். பாடலைப் பாருங்கள்:

''வன்றிறல் உந்தை யோடு
மாவேட்டை ஆடிப் பண்டிக்
குன்றிடை வந்தோம் ஆகக்
குளிர்ந்தநீர் இவரை ஆட்டி
ஒன்றிய இலைப்பூச் சூட்டி
ஊட்டிமுன் பறைந்தோர் பார்ப்பான்
அன்றிது செய்தான், இன்றும்
அவன்செய்த தாகும், என்றான்''

முன்னொருநாள் உன் தந்தையுடன் நான் வேட்டைக்கு வந்தேன். யானைவேட்டை யாடிக்கொண்டு நாங்கள் இருவரும் இம்மலை யின் உச்சிக்கு வந்தோம். அப்பொழுது அந்த ணன் ஒருவன் இந்தத் திருக்காளத்தியப்பருக்குத் தண்ணீரால் திருமுழுக்காட்டி, பச்சிலையும் பூவும் சாத்தித் திருவமுது படைத்துத் தோத் திரம் கூறிப் பூசை செய்தான். இன்றும் அவனே பூசித்திருக்கவேண்டும் என்பது கல்வியறிவில் லாத ஏழை வேடனான நாகனின் பதில். ஆனால், அவனுள் நின்று நாயனார்க்குக் குரு வாக இருந்து உபதேசிக்கும் இறைவன் இப் பதிலில் பொதிந்து தரும் உண்மைகளையும் காண்போம்.

முன்னொரு பிறவியில் ஆன்மாவாகிய நான் புலன்களாகிய களிறுகளை வென்று மேம்படுவதற்கு நின்மல துரியாதீதம் என்னும் மலை உச்சிக்கு வந்தேன். அம்முயற்சியில் என்னை உடன் அழைத்து வந்தவன் என்னால் என்றும் விட்டு நீங்கப்பெறாது என் உயிர்க்கு உயிராக உள்ள இறைவனாவான். அவனும் நானும் மட்டுமே இம் மலையுச்சியை எய்தினோம். அப்பொழுது முத்தான்மாவான ஒருவன் இறைவனைப் பூசித்தலாகிய பணியில் ஈடுபட்டிருந்ததைப் பார்த்தேன் என்பதே, இதன் உட்பொருள். ஐம்புலன்களாகிய களிறுகள் ஆன்மாவை விட்டுலகம் நோக்கிச் செல்லவிடாமல் அலைப்பன. அவற்றைத் தவநெறியில் நின்று உறுதியான நெஞ்சுரங்கொண்டு அடக்கவேண்டும். இதனையே,

''உரனெனுந் தோட்டியா னோரைந்துங் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து''

என்றார் திருவள்ளுவரும்.

அத்தகைய யானையை வெல்வதற்கு மிகவும் வலிமை வேண்டும். அது யானையை உரித்துப் போர்த்த இறைவனாகிய உன் தந்தைக்கே (ஆன்மாக்களின் தந்தைக்கே) இயல்வதாகும். எனவே அவன் வன்திறல் உந்தை யாவான். அவன் என் ஆன்மாவைவிட்டு என்றும் பிரியாதிருந்து அதை வழிநடத்துபவன் ,எனவே, நின் மலதுரியாதீதமாகிய மலை உச்சிக்கு அவனும் நானுமே வந்தோம். ஐம்புலக்களிறுகள் நாங்கள் வரும் வழியிலேயே வீழ்த்தப்பட்டன. அந்தத் துரியாதீத நிலையில் நான் கண்டது ஆன்மா சிவனைப் பூசிப்பதாகிய இன்பம் நுகர்தலே.

எனவே, நீயும் சிவபூசை செய்து இன்புறுவாயாக! அப் பூசைபுரிதல் மிகவும் எளியது. புனலாட்டிப் பூவும் பச்சிலையும் இட்டால் போதும். கிடைத்த பொருளைத் திருவமுதாகப் படைக்கலாம் என்ற குறிப்பையும், நாயனார் அவ்வறிவுரையை ஏற்று அவ்வாறே பூசிப்பதையும் சரிதத்தில் காணலாம்.

## பதியின் சந்நிதியில் பாசம் நில்லாது

ஆணவமலம் ஆன்மாவைப் பற்றி அது இறைவனைக் காணவொட்டாமல் அறிவை மறைப்பது. இது இருள், கண்ணாகிய புலனைப் பற்றிக்கொண்டு ஒன்றையும் பார்க்க வொட்டாமல் மறைப்பதுபோல என்பர். ஆனால் ஆதித்தன் உதித்துவிட்டால் அவனுக்கும் கண்ணுக்கும் இடையில் நின்று இருள், கண்ணை மறைக்க இயலாது. அது அங்கு நின்றும் நீங்கிக் கதிரவன் வெளிச்சம் இல்லாத இடம் நோக்கிச் செல்லும். இவ்வுண்மையை நாயனார் சரிதத்துள்ளும் காண்போம்.

காளத்தியப்பரைப் பூசிக்கும் முறையைக் கேட்ட நாயனார், தாமும் அவ்வாறு பூசிக்க எண்ணினார். மலையினின்றும் இழிந்து வந்து வேட்டையில் வீழ்ந்த பன்றியின் பக்குவம் செய்யப்பட்டிருந்த இறைச்சியைச் சுவைத்துப் பார்த்துச் சுவையான பகுதியை ஒரு கல்லையில் எடுத்துவைத்துக் கொண்டு, பொன்முகலி ஆற்றின் நீரை வாயில் முகந்துகொண்டு, பூவும் பச்சிலையும் தம் முடியில் துதையக்கொண்டு மீண்டும் மலையேறி வந்தார். அந்த வாய் நீரால் முழுக்காட்டி, முடிமிசை மலரை வணங்கிச் சாத்திப் பன்றியினை நிவேதித்துப் பூசித்தார். இரவும் வந்தது. இறைவனுக்குக் காவலாக இரவு முழுதும் வில்லேந்தி நின்றார் என்கின்றார் சேக்கிழார்பெருமான். அவர் தீட்டும் சொல்லோவியம் காண்க.

சார்வருந் தவங்கள் செய்து
முனிவரும் அமரர் தாமும்
கார்வரை அடவி சேர்ந்தும்
காணுதற் கரியார் தம்மை
ஆர்வமுன் பெருக ஆரா
அன்பினிற் கண்டு கொண்டே
நேர்பெற நோக்கி நின்றார்.
நீளிருள் நீங்க நின்றார்.
(கண்ணப்பநாயனார் புராணம்.128)

ஈண்டு ''நீளிருள் நீங்குதல்'' கங்குல் கழிந்து காலைப்போதாவதாகிய கதை நிகழ்ச்சி மட்டும் குறித்து நிற்பதன்று. முற்பிறவியில் நீண்டிருந்ததும், இப்பிறவியில் நீண்டு கொண்டிருப்பதும், இனிவரும் பிறவிகளிலும் நீள உள்ளதுமான இருள் என்று, வினைத்தொகையால் ஆன்மாவின்முன் நீண்டு அறிவை மறைக்கும் ஆணவ இருளையும் குறித்து நின்றது. அது காளத்தியப்பர் சந்நிதியில் நில்லாதது அன்றோ. இப்புண்ணிய சரிதத்தைப் பயிலும் நம்மை விட்டும் அது நீங்கும்படி நாயனார் நின்றார் என்ற நயமும் காண்க.

## ஏகனாகி இறைபணி நிற்க

பக்குவமுற்ற சீவான்மாவின் சஞ்சித கன்மங்களை இறைவன் அழித்து விடுகின்றான். பிராரத்த கன்மங்கள் அப்பிறவியின் முடிவு மட்டும் நின்று உடலூழாய்க் கழிகின்றன. அவர்கள் செயல்களனைத்தும் தன்முனைப்பற்று இறைவன் நினைவுடன் நிகழ்வதால் ஆகாமிய கன்மங்கள் ஏறுவதில்லை. இவ்வாறு அவர்களுக்குக் கன்ம மலங் கழிகின்றது. ஆகாமியமின்மையால் இனிப் பிறப்பின்றி மாயா மலத்தின் தொடக்கும் அறுகின்றது. தன்முனைப்பின்றி இயங்குதலால் ஆணவ மல கரணங்கள் எல்லாம் சிவகரணங்களாக மாறுவதால் சிவமயமாகின்றனர். அவர்கள் செயல்கள் எல்லாம் அவர்களை உள்நின்று இயக்கும் சிவத்தின் செயல்களாகின்றன. இதனை—

'அவனே தானே யாகிய வந்நெறி
யேக னாகி யிறைபணி நிற்க
மலமாயை தன்னொடு வல்வினை யின்றே'
—சிவஞானபோதம்-சூத்.10.

எனவரும் ஞானசாத்திரப் பகுதியால் அறியலாம்.

நாயனாரும் இந்நிலை எய்தியதை ஆசிரியர் பெருமான் நமக்குக் கூறுகின்றார். நாயனார் நாடோறும் சிவகோசரியார் பூசித்திட்ட மலர்களைத் தம் செருப்புக் காலால் நீக்கி எச்சில் நீரால் திருமுழுக்காட்டித் தம் முடியில் சூடிய மலரால் அருச்சித்து, சுவைத்துப்பார்த்த

எச்சில் ஊனைத் திருவமுதாக்கி வழிபட்டு வருகிறார். உடன்வந்த நாணனும் காடனும் சென்று நாயனார் நிலைமையை நாகனுக்கு அறிவிக்கின்றனர். அவன் தேவராட்டியுடன் பரிசனங்களையும் உடன் அழைத்துவந்த நாயனாரின் ''தேவுமாலை''த் தீர்க்க முயன்று தோல்வியுற்றுத் திரும்புகின்றார். ''ஏகனாகி இறைபணி நிற்கும்'' நிலையினின்றும் அவரை ஈர்க்க இயலவில்லை. ஏன்! சேக்கிழார் பெருமானே பதில் கூறுகின்றார்:—

நாணனொடு காடனும்போய்
நாகனுக்குச் சொல்லியபின்
ஊனும்உறக் கமும்இன்றி
அணங்குறைவா ளையுங்கொண்டு
பேணுமக னார்தம்பால்
வந்தெல்லாம் பேதித்துக்
காணுநெறி தங்கள்குறி
வாராமல் கைவிட்டார்.

முன்புதிருக் காளத்தி
முதல்வனார் அருள்நோக்கால்
இன்புறுவே தகத்திரும்பு
பொன்னனானாற் போல்யாக்கை
தன்பரிசும் வினைஇரண்டும்
சாருமலம் மூன்றும்அற
அன்புபிழம் பாய்த்திரிவார்
அவர்கருத்தின் அளவினரோ?

ஆறு நாளும் இவ்வாறு பூசித்த நாயனார் ஆறாம் நாளில் இறைவனின் வலக் கண்ணில் குருதிகண்டு வருந்தினார். மருந்துகள் பயன் தரவில்லை. நாயனார் அம்பினால் தம் வலக் கண்ணை இடந்து அப்பினார். குருதிப்பெருக்கம் நின்றது. நாயனார் மகிழ்ச்சிக் கூத்தாடினார். கண்களைப் பெயர்த்த வலியால் அவர் ஏன் துடிக்கவில்லை? இப்பொழுது அவ்வுடல் அவரது அன்று. சிவ வடிவமே! எனவே, வலியால் துடிக்கவேண்டியவர் காளத்தியப்பரே! அதனால்தான் போலும் மீண்டும் நாயனார் தமது மற்றொரு கண்ணையும் பெயர்க்க இடக் கண்ணில் பகழு வைத்தபோது ''நில்லு கண்ணப்ப!'' என்று மும்முறை கூறியதுடன் மட்டும் நில்லாது, தமது திருக்கையை நீட்டி நாயனார் கைகளைப் பற்றியும் தடுத்தார்! இச் சரிதத்தைச் சேக்கிழார் பெருமான் முடித்துக் காட்டும் அழகும் காண்போம்.

பேறினி இதன்மேல் உண்டோ
பிரான்திருக் கண்ணில் வந்த
ஊறுகண் டஞ்சித் தங்கண்
இடந்தப்ப உதவுங் கையை
ஏறுயர்த் தவர்தங் கையால்
பிடித்துக்கொண் டென்வலத்தில்
மாறிலாய் நிற்க என்று
மன்னுபேர் அருள்பு ரிந்தார்.

சித்தாந்த சாத்திரக் கருத்துக்களை எல்லாம் தன்னுள் அடக்கிக்கொண்டுள்ள நம் நாயனார் சரிதத்தைத் தோத்திர நூல்களாகிய நம் திருமுறைகளின் பரக்கக் காணலாம். பரம ஆச்சாரிய மூர்த்திகளான நால்வர் பெருமக்களும் தேவார திருவாசகங்களில் துதித்துள்ளனர். 9, 11, 12 திருமுறைகளிலும் துதிக்கப்பட்டுள்ளது. மெய்ப்பொருளை விளக்க எழுந்த ஞான சாத்திரமும் இவ்வரிய சரிதையை விதந்து கூறித் துதிக்கின்றது. அப்பாடலையும் பாருங்கள்:

''கண்ணப்ப னொப்பதோ ரன்பின்மை
என்றமையால்
கண்ணப்ப னொப்பதோ ரன்பதனைக்—
கண்ணப்பர்
தாமறிதல் காளத்தி யாரறிதல் அல்லது
மற்று
யாமறியும் அன்பன் றது


—திருக்களிற்றுப்படியார்

# கண்ணப்பர் துதி

*கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்*
*என்னப்பன் என்னொப்பில் என்னையும்ஆட் கொண்டருளி,*
*வண்ணப் பணித் தென்னை வாஎன்ற வான்கருணைச்*
*சுண்ணப்பொன் நீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பி'* (1)

*பொருட்பற்றிச் செய்கின்ற பூசனைகள் போல் விளங்கச்*
*செருப்புற்ற சீரடி வாய்க்கலசம் ஊன்அமுதம்*
*விருப்புற்று வேடனார் சேடறிய மெய்குளிர்ந்தங்கு*
*அருட்பெற்று நின்றவா தோள்நோக்கம் ஆடாமோ!* (2)

—மாணிக்கவாசகர்



திருவாரூர் அருள்மிகு தியாகராச சுவாமி திருக்கோயிலில் நடைபெற்ற 101 சிறப்புத் திருமணங்களின் போது ஷெ திருக்கோயிலின் அறங்காவலர் குழுத்தலைவர் உபயமாகத். திருமாங்கல்யங்களை அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்களிடம் வழங்கும் காட்சியும், ஷெ திருமாங்கல்யங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிறப்புத் திருமணத் தம்பதிகளுக்கு வழங்கும் காட்சியும், அறநிலைய ஆணையர் திரு யு. சுப்ரமணியன், ஐ.ஏ.எஸ். அவர்களும், தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியாளர் திரு எஸ். மெய்கண்ட தேவன், ஐ.ஏ.எஸ். அவர்களும் மற்றும் பிறரும் கலந்து கொண்டு சிறப்பித்தல் *(31-3-1982)*



பதிவு எண். எம் 7039



15-3-1982 அன்று சென்னை மாநகர்த் தீவுத் திடலில் நடைபெற்ற அனைத்திந்தியச் சுற்றுலா வர்த்தகப் பொருட்காட்சியில், அறநிலையத் துறையின் கலைப் பொருட்காட்சிக்கூடம், முதற் பரிசுக்குரியதாகத் தேர்ந்தெடுக்கப் பெற்று, வருவாய்த்துறை அமைச்சர் மாண்புமிகு எஸ். டி. சோமசுந்தரம் அவர்களால், வழங்கப்பெற்ற கேடயத்தினை, அறநிலையத்துறை ஆணையர் திரு. யு. சுப்ரமண்யன், ஐ. ஏ. எஸ். அவர்கள் பெறுதல். அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்களும் உட னுள்ளார்.



மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக் கோயிலுக்குச் சுவீடன் நாட்டுப் பிரதமர் திரு தார்ப் ஜான் பால்ட்வின் அவர்களும், அவர்தம் துணைவியாரும் வருகை தந்த பொழுது, ஷி கோயிலின் அறங்காவலர் குழுத் தலைவர் திரு வி. என். சிதம்பரம் அவர்களும், மற்றும் அறங் காவலர்கள் திரு என். எம். ஆர். கிருஷ்ணமூர்த்தி, திரு எம். சின்னச்சாமிக்கோனார், திரு இரா. முத்துக்குமார் ஆகியோர்களும், மாலை அணிவித்து வரவேற்றனர். (14-2-82).

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை, சென்னை-600 034.

ஆசிரியர் : ந. ரா. முருகவேள், எம்.ஏ.,எம்.ஓ.எல்.

அச்சிடுவோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.